தமிழ்நாட்டுச் சிறுகதைகள் - தொகுதி - 14

# வாடா விளக்கு

## முதலிய கதைகள்

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI

கு. குருசாமி, பி. ஏ.

Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் :: சென்னை

உரிமை பதிவு

1944

மலிவுப் பதிப்பு ரூ. 2
உயரிய பதிப்பு ரூ. 2/8

என் தாத்தா
ஸ்ரீமான் சங்கரலிங்கஞ்
செட்டியார் அவர்களுக்கு
இச்சிறுநூல் அர்ப்பணம்.
— சு. குருசாமி.

17174

## பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | வாடா விளக்கு | ... | 1 |
| 2. | விமோசனம் உண்டா? | ... | 14 |
| 3. | செட்டு | ... | 24 |
| 4. | பேய்! பேய்! | ... | 31 |
| 5. | யோகாஸனம் | ... | 44 |
| 6. | மாற்றுள் பிள்ளை | ... | 57 |
| 7. | மதியாதார் தலைவாசல் | ... | 71 |
| 8. | கன்றைக் கொன்ற பசு | ... | 75 |
| 9. | சரித்திர ஆராய்ச்சி | ... | 83 |
| 10. | லஞ்சம் | ... | 92 |
| 11. | ஆண்டாள் கல்யாணம் | ... | 97 |
| 12. | கண்டதும் காணாததும் | ... | 104 |
| 13. | ரெயில் வண்டியில் | ... | 117 |
| 14. | "மீண்டும் குழந்தையாக்கு" | | 129 |
| 15. | சத்திய யுகம் | ... | 138 |
| 16. | உள்ளே நுழையலாகாது | ... | 141 |
| 17. | ஹிஸ்டரி வாத்தியார் | ... | 152 |
| 18. | உங்களுக்கு மாத்திரந்தான் | | 156 |
| 19. | உண்மை எது? | ... | 158 |
| 20. | உஜ்வலினி | ... | 161 |


முகப்புப் படம்
சு. குருசாமி, பி. ஏ.,



சா. குருசாமி, பி. ஏ.

- *1* -

# வாடா விளக்கு

## 1

நானும் என் நண்பன் தியாகராஜனும் திருவல்லிக்கேணியில் ஒரு தெருவின் வழியாகப் போய்க்கொண்டிருந்தோம். அன்று பௌர்ணமி. ஆகாயத்தில் பூரண சந்திரன் தன் முழுச் சோபையுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தான். தெருவின் இரண்டு வரிசைகளிலும் உள்ள வீடுகளில் மின்சார விளக்குகள் பாலசூரியர்கள் போல் ஜ்வலித்துக் கொண்டிருந்தன. கவிகளெல்லாரும் பெண்களின் முகங்களைப் பூரணசந்திரனுக்கு ஒப்பிட்டிருக்கிறார்களே, அந்த முழுமதி என்ன அவ்வளவு அழகுடையதா என்று பார்ப்பதற்கு வந்தாற்போல் மாடிதோறும் இளம் பெண்கள் குழுமியிருந்தனர். சிலர் கும்மியடித்துக் கொண்டிருந்தார்கள்; சிலர் கோலாட்டம் அடித்துக்கொண்டிருந்தனர். ஒரு மாடி வீட்டின் நிலா முற்றத்தில் இளங் காதலர் இருவர் பூரணசந்திரனுடைய அழகைப் பருகிக்கொண்டிருந்தனர். இந்த இன்பக் காட்சிகளையெல்லாம் பார்த்துக்கொண்டே சென்ற நான், 'ஆஹா! பூரணசந்திரன் காதலர்களுக்கு

எத்தகைய ஆனந்தத்தை அளிக்கிறான்!' என்று நினைத்தேன். இரண்டு மூன்று அடிகள் அப்பால் சென்றதும், இன்னொரு சிறிய வீட்டைக் கண்டேன். பௌர்ணமிக் கேளிக்கையின் இன்பக் குறிகள் ஒன்றும் அவ்வீட்டில் தென்படவில்லை. எண்ணெய் விளக்கு ஒன்று அங்கு 'மினுக் மினுக்' கென்று எரிந்து கொண்டிருந்தது. தற்காலத்தில் நீரில் பால் கலந்திருப்பதுபோல், அவ்விளக்கின் ஒளியில் இருள் கலந்திருந்தது. "தியாகு! இத்தெருவிற்கே இவ் வீடு ஒரு களங்கமாக இருக்கிறது, பார்த்தாயா?" என்றேன் நான்.

"இந்த வீட்டிலுள்ளவர்களைப்பற்றி உனக்கு ஒன்றும் தெரியாது. ஆகையினால்தான் அப்படிச் சொல்லுகிறாய்" என்றான் தியாகராஜன்.

நான் அவனுடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்தேன்.

"அவ் வீட்டில் ஒரு வாடா விளக்கு எரிந்துகொண்டிருக்கிறது" என்றான் தியாகராஜன்.

அவன் சொல்லியது ஒன்றும் விளங்காமல் நான் அவனை ஆச்சரியத்துடன் நோக்கினேன். "அது ஒரு பெருங்கதை. கடற்கரைக்குப் போய்ச் சாவகாசமாய் உட்கார்ந்துகொண்டு, உனக்குச் சொல்லுகிறேன், வா" என்றான். இருவரும் பேசாமல் சென்றோம்.

## 2

திருவல்லிக்கேணிக் கடற்கரை. ராஜதானிக் கல்லூரிக்கு எதிரே, கடலுக்கு வெகு சமீபத்தில் ஒரு நல்ல இடத்தைப் பார்த்து உட்கார்ந்தோம். பௌர்ணமி தினமாகையால், என்றுமில்லாத ஆரவாரத்துடன் கடல்

ஒலித்துக்கொண்டிருந்தது. பரமாத்மாவின் திவ்ய சொரூபம் எண்ணிறந்த ஜீவாத்மாக்களில் பிரதிபலிப்பது போல், வட்ட மதியத்தின் அழகிய வடிவம், அலைகளின் கோடிக் கணக்கான திவலைகளில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. நான் நண்பனின் மடியில் தலையை வைத்துப் படுத்துக்கொண்டு, "அந்த வீட்டைப்பற்றி ஏதோ கதை சொல்லுகிறேன் என்றாயே; சொல், கேட்கலாம்" என்றேன்.

தியாகு கதையை ஆரம்பித்தான் :

அவ்வீட்டைப் பற்றி நினைக்கும் பொழுதே என் உள்ளத்தில் ஒரு தெய்விக உணர்ச்சி பரவுகிறது. இரண்டு வருஷங்களுக்கு முன்பு, நான் ராஜதானிக் கல்லூரியில் இண்டர்மீடியட் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தது உனக்குத் தெரியும் அல்லவா? அக் காலத்தில், நான் மாணவர் விடுதியில் வசிக்காமல், ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண்டு, ஒரு வீட்டில் ஓர் அறை வாடகைக்கு எடுத்துக்கொண்டு குடியிருந்தேன். நான் அங்குச் சென்று இரண்டு மூன்று மாதங்களாகியும், அவ் வீட்டில் யார் இருக்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்பது ஒன்றும் எனக்குத் தெரியாமல் இருந்தது. பட்டணத்து வாசிகளுக்கு இது புதிய அநுபவமல்ல. ஆனால் எனக்கு அது விநோதமாகத் தோன்றியது. மாதந்தோறும் முதல் வாரத்தில் ஒரு மனிதர் வந்து என்னிடம் வாடகை வாங்கிக்கொண்டு போவார். அவ்வளவுதான். இப்படி மூன்று நான்கு மாதங்கள் கழிந்தன. அவ்வீட்டிலுள்ளவர்களோடு பழகி, அவர்களுடைய விருத்தாந்தங்களை அறிய வேண்டுமென்று எனக்கு மிகுந்த அவா இருந்தது. அதற்காக ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தேன்.

தனிமையையே நாடும் என்னைப் போன்றவர்களுக்குக்கூடச் சில சமயங்களில் யாருடைய உறவை யாவது சம்பாதித்துக் கொள்ளவேண்டும், யாருடனாவது நெருங்கிப் பழகவேண்டும், யாருக்காவது நமது உள்ளத்திலுள்ள ரகசியங்களை யெல்லாம் வெளியிட வேண்டும் என்று அடக்க முடியாத ஓர் உணர்ச்சி உண்டாவது வழக்கம். அத்தகைய அநுபவம் ஒரு நாள் இரவு ஏற்பட்டது. கல்லூரிப் பரீக்ஷைகளெல்லாம் முடிந்துவிட்டபடியால், என் நண்பர்கள் எல்லோரும் அவரவர் ஊருக்குச் சென்றுவிட்டார்கள். அதி சமீபத்தில் இருந்தும் தூர விலகியிருக்கும் அவ்வீட்டு ஜனங்களோடு பழகுவதற்கு அதுதான் ஏற்ற சந்தர்ப்பம் என்று எனக்குத் தோன்றியது. ஆகையால் என் அறையை விட்டு வெளியே வந்து, அந்த இல்லத்துக் கூடத்திற்குள் நுழைந்தேன்.

நாம் இப்பொழுது வரும்போது பார்த்ததுபோல், அன்றும் ஒரு சிறிய கைவிளக்கு, தன் மெல்லிய சுடரினால் வீட்டிலுள்ள இருளைப் போக்குவதற்கு முயன்றுகொண்டிருந்தது. அக்கூடத்திற்குள் பாதி தூரம் சென்று நின்றுகொண்டு, ஏதாவது மனித சப்தம் கேட்கிறதா என்று கவனித்தேன். பின்பு சற்றுத் தைரியமாய், "அம்மா!" என்று கூப்பிட்டேன். ஐந்து நிமிஷங்கள் வரை யாதொரு பதிலும் இல்லை. "அம்மா!" என்று கூப்பிடும் அசம்பாவிதமான காரியத்தை நம் வீட்டில் செய்யத் துணிந்தது யார் என்று நினைத்தார்கள் போலும்! நான் மீண்டும் "அம்மா!" என்று சத்த மிட்டேன். "யார் அது? ஏன்?" என்று உள்ளிருந்து ஒரு குரல் எழுந்தது. நான் ஒன்றும் பதில் சொல்ல வில்லை.

கொஞ்ச நேரத்தில் ஓர் அறையினின்றும் ஒரு பெண்ணுருவம் வெளியே வந்தது. அந்த ஸ்திரீ என் பக்கத்தில் வந்து நின்றபொழுது, அவளுடைய முகத்திலிருந்த கம்பீரமும், சாந்தமும், அம்மங்கிய வெளிச்சத்திலுங்கூட எனக்கு நன்ருய்த் தெரிந்தன. நல்ல சிவப்பு நிறம். பட்டுப்போன்ற மிருதுவான சரீரம். சுந்தர வதனம். விசாலமான கண்கள். சுருண்டு குழைந்த கூந்தல். நாற்பது அல்லது நாற்பத்தைந்து வயசு இருக்கும். அந்தக் காலத்திலே அவ்வளவு லக்ஷணமாய்த் தோன்றிய அப்பெண்மணி, இளம் பருவத்தில் மிகவும் அழகிய நங்கையாய் விளங்கியிருக்கவேண்டும் என்று நினைத்தேன். மங்கைப் பருவ அழகின் சின்னங்களில் சில முதுமைப் பருவத்திலும் அழியவில்லை.

"நமது வீட்டிலிருக்கும் தம்பியா? உட்கார்" என்ருள்.

நான் உட்கார்ந்தேன். அவளும் சற்றுத் தள்ளி உட்கார்ந்துகொண்டாள்.

"இங்கு நீ கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிருயாக்கும்?"

"ஆம்."

"எந்த வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிருய்?"

"இண்டர்மீடியட்டில்."

"உன்னுடைய சொந்த ஊர் எது தம்பீ?"

"மதுரை."

அந்தப் பெண்மணி சிறிது ஆச்சரியத்துடன், "மதுரையா?" என்று கேட்டாள்.

"ஆம்" என்றேன்.

"மதுரையில் எந்தத் தெரு?"

"கிழக்கு ஆவணிமூல வீதி."

"ஊஹும்" என்று தலை ஆட்டிக்கொண்டே, "அங்கே சுப்பிரமணிய ஐயர் என்று ஒரு பெரிய மிராசுதார் இருந்தாரே, உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"தெரியும். அவருடைய மனைவி சிவகாமியம்மாளைப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறேன்."

"நான்தான் அந்தச் சிவகாமி! இவ் வீட்டில் நீ அடிக்கடி பார்ப்பவர்தாம் யோகீசுவரராகிய என் கணவர்!"

நான் பிரமித்து விழித்தேன். அவ்வம்மையாரின் முகத்தில் ஒரு புன்முறுவல் தோன்றியது. அம் முகத்தில் பச்சாத்தாபமோ, வெட்கமோ அல்லது வேறு எந்த விதமான உணர்ச்சியையோ நான் பார்க்கவில்லை. அதைக் கண்டு ஆச்சரியமும் திகிலும் அடைந்தேன்.

"இந்தச் சமயத்தில் உனக்குச் சிவகாமியம்மையாரின் பூர்வகதையைச் சிறிது சொல்கிறேன், கேள்" என்று என் காதைப் பிடித்துக் கிள்ளினான் தியாகராஜன்.

கதை ஸ்வாரஸ்யமாக இருப்பதைக் கண்டு, நான் எழுந்து உட்கார்ந்து கதையைக் கேட்க ஆரம்பித்தேன்.

தர்மபுரத்தில், சிவராமகிருஷ்ணையர் என்று பெரிய மிட்டாதார் ஒருவர் இருந்தார். அவருக்கு வெகுநாள் வரை புத்திரப்பேறில்லாமல் இருக்கவே, அவர் தம் மனைவியுடன் காசிமுதல் ராமேசுவரம் வரைக்குமுள்ள புண்ணிய க்ஷேத்திரங்களுக்கெல்லாம் தீர்த்தயாத்திரை செய்து, சத்திரம், சாவடி, தர்ம ஸ்தாபனங்கள் முதலியவைகளுக்கு ஏராளமான தானங்கள் செய்தார். அவற்றின் பலனாகவோ என்னவோ, வாழ்க்கையின் அந்தி நேரத்தில் அவருக்கு ஓர் அழகிய பெண் குழந்தை

பிறந்தது. அதை அவர்கள் தவக் குழந்தையாகக் கருதி, அது அம்பிகையின் அருளால் பிறந்ததால், அதற்குச் சிவகாமி என்று பெயரிட்டனர். பெற்றோர் குழந்தையைச் சீராட்டிப் பாராட்டி, வெகு ஆதரவுடன் வளர்த்து வந்தார்கள். இங்ஙனம் ஆண்டுகள் பல சென்றன. சிவகாமி சர்வலக்ஷணங்களும் பொருந்திய பெண்ணாகிக் கல்யாணப் பருவம் அடைந்தாள். அவளுடைய முகத்தில் ஒரு தெய்விகத் தேஜஸ் இருந்ததாக ஜனங்கள் கூறுகிறார்கள். அவளைப் பார்த்தவர்கள் அனைவரும், "இவள் அன்னை பார்வதியை ஒத்திருக்கிறாள்" என்று கூறுவது வழக்கமாம். அத்தகைய அருமைப் புதல்வியை விட்டுப் பிரிய மனம் இல்லாதவர்கள்போல், பெற்றோர்கள் அவளைப் பதினான்கு வயசு வரைக்கும் கல்யாணம் செய்து கொடுக்காமல் இருந்தார்கள். ஊரார் எல்லாரும் சிவகாமி புஷ்பவதி ஆகிவிட்டாள் என்றும், ருதுவான பெண்ணைக் கல்யாணம் செய்யாமல் இன்னும் வீட்டில் வைத்துப் பெற்றோர்கள் அழகு பார்ப்பது தங்கள் ஜாதிக்கே பெரும் அவமானம் என்றும் பேசிக்கொண்டார்கள். ஜனங்களின் அவதூறுக்கு அஞ்சி, சிவராமகிருஷ்ணையரும் தம் புத்திரிக்கு ஏற்ற வரனைத் தேட ஆரம்பித்தார். பொருளையும் குலத்தையும் பற்றிக்கூடக் கவலை இல்லை; மாப்பிள்ளை லக்ஷணமாகவும் குணசாலியாகவும் இருந்தால் போதுமென்பது அவருடைய கொள்கை. அவர் எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே, குலம், கல்வி, குணம், பொருள், அழகு எல்லாம் ஒருங்கே வாய்க்கப்பெற்ற வரன் அவருக்கு வெகு சீக்கிரத்தில் கிடைத்தான். மகாலிங்கையர் என்பவர் மதுரையில் ஒரு பெரிய மிராசுதார். அவருடைய மகன் சுப்பிரமணியனைப்

பார்த்ததும், அவனே தம் புதல்விக்கு ஏற்ற கணவன் என்று சிவராமகிருஷ்ணையர் தீர்மானம் செய்தார். பெண்ணின் சந்தோஷத்தையே பெரிதாகக் கருதிய தந்தை, ஜாதகப் பொருத்தத்தைக் கூடப் பாராமல் கல்யாணத்தை நடத்திவிட நிச்சயம் செய்துவிட்டார்.

மணமான இரண்டு வருஷங்கள் வரை தம்பதிகள் இருவரும் வெகு சந்தோஷமாய் வாழ்ந்துவந்தார்கள். இல்லறச் சகடம் இனிது உருண்டது. இங்ஙனம் இருக்கையில் அவர்களுடைய இன்ப வாழ்க்கைக்கு இடையூறாக ஒரு பால சந்நியாசி வந்து சேர்ந்தான். அவன் தன்னை நித்தியானந்த யோகி எனக் கூறிக் கொண்டான். இருபத்தைந்து பிராயமுள்ளவன். கையில் வீணையை ஏந்தி இனிய கீதங்களைப் பாடிக்கொண்டு மதுரை வீதிகளில் பிக்ஷை எடுக்க ஆரம்பித்தான். அவனுடைய பாட்டுக்களில் ஒரு சக்தி இருந்தது. அவனுடைய முகத்தில் ஒரு வசீகரம்.

ஒரு நாள் அவ் வாலிப சந்நியாசி கிழக்கு ஆவணிமூல வீதி வழியாகப் பாடிக்கொண்டு சென்றபொழுது, அந்தப் பாட்டில் ஈடுபட்டுச் சிவகாமி வெளியே வந்தாள். அதில் அவள் தன்னை இழந்து நிற்கும்போது, அந்த வாலிபன் வேறு எந்த வீட்டிற்கும் போகாமல், அவள் முன்னால் வந்து நின்றான். "தேவி! பிச்சை!" என்றான் வாலிபன். உடனே சிவகாமி வீட்டிற்குள் ஓடி, அன்று தன் கணவனுக்குச் செய்துவைத்திருந்த இனிமையான தின்பண்டங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தாள். அங்ஙனம் கொடுக்கையில் அவர்கள் கண்கள் சந்தித்தன. சிவகாமி பலகாரங்களைக் கொடுத்ததோடு தன் உள்ளத்தையும் சேர்த்து அவனிடத்தில் கொடுத்துவிட்டாள்போலும்!

அன்றிருந்து அவ்வாலிபன் மற்றத் தெருக்களுக்கெல்லாம் போவதை நிறுத்தி, கிழக்கு ஆவணிமூல வீதிக்கு மட்டும் வந்துகொண்டிருந்தான். சிவகாமியினுடைய வீட்டிற்கு மட்டும் சென்று பிச்சை வாங்கிக்கொண்டு போய்விடுவான். இதை எல்லாம் கண்ட ஜனங்கள் சிவகாமியைப்பற்றிப் பலவாருகப் பேச ஆரம்பித்தார்கள். கல்யாணத்திற்கு முன்பிருந்தே அவள் அவ் வாலிபனைக் காதலித்து வந்ததாகவும், அவளுடைய தந்தை அவளை அவனுக்குக் கல்யாணஞ் செய்து கொடுக்கச் சம்மதிக்கவில்லை என்றும், அதனுல் வாழ்க்கையில் வெறுப்புற்ற அவ் வாலிபன் சந்நியாசி ஆகிவிட்டதாகவும், உடை மாறுவதில் என்ன இருக்கிறது, உள்ளமல்லவா மாற வேண்டும் என்றும் சிலர் பேசிக்கொண்டார்கள். ஊர் வாயை மூடவோ என்னவோ, சில தினங்களுக்கு அப்புறம் அவ்வாலிபன் வருவதை நிறுத்திவிட்டான். ஆனுல் சிவகாமி தினந்தோறும் அறுசுவையுள்ள உணவுப் பதார்த்தங்களைச் சமைத்து எடுத்துக்கொண்டு, காலையிலும் மாலையிலும் எங்கோ போய்வருவதைப் பார்த்து ஜனங்கள் சந்தேகித்தார்கள். இப்படிச் சில நாள் நடந்துகொண்டிருந்தது. நாளடைவில் சிவகாமியின் கணவனும் அவள்மீது சம்சயம் கொண்டான்.

ஒரு நாள் சிவகாமி வீட்டை விட்டுச் சென்றபின் அவளுக்குத் தெரியாமல் அவளைப் பின்தொடர்ந்தான். வைகை நதியைக் கடந்து, அக்கரையிலுள்ள அடர்ந்த தென்னந் தோப்பினுள் சிவகாமி நுழைந்தாள். அதில் ஒரு பெரிய மண்டபம் இருந்தது. தோப்பிற்கு வெளியிலிருந்து பார்ப்பவர்கள் யாரும், அதற்குள் அத்தகைய பிரம்மாண்டமான மண்டபம் இருக்கிறதென்று சொல்ல

முடியாது. மண்டபத்திற்குள் சென்றதும், "ஸ்வாமி!" என்று கூப்பிட்டாள் சிவகாமி. வாலிபன் உள்ளிருந்து வெளியில் வந்து, "சிவகாமி! என்னை ஏன் ஸ்வாமி என்று அழைக்கிறாய்?" என்று ஒரு புன்சிரிப்புடன் கேட்டான்.

"நீங்கள் தாம் ஸ்வாமி என்று என் அந்தராத்மா கூறுகிறது" என்றாள் சிவகாமி.

பின்பு தான் கொண்டுவந்த பதார்த்தங்களை எல்லாம் அவ்வாலிபனுக்கு அளித்தாள். உண்ட களைப்புத் தீர வாலிபன் சிறிது படுத்தான். சிவகாமி அவன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, தன் முன்றானையை விரித்து அவனுக்கு விசிற ஆரம்பித்தாள். வாலிபன் தன் கையினால் வேண்டாமென்று சைகை காட்டினான். சிவகாமி விசிறுவதை நிறுத்திவிட்டுப் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருந்தாள். "என் கால்கள் நோகின்றன. கொஞ்சம் அமுக்கிவிடேன்" என்று வாலிபன் மெதுவாகச் சொன்னான். சிவகாமியும் அவன் கால்களைப் பிடித்துவிட ஆரம்பித்தாள். இங்ஙனம் இருக்கையில் திடீரென்று சுப்பிரமணிய ஐயர் மண்டபத்திற்குள் நுழைந்தார். சிவகாமி தன் முகத்தில் யாதொரு கலவரமுமின்றிக் கணவனை நோக்கி, "ஏன் இங்கு வந்தீர்கள்? என்னைத் தேடியா? கொஞ்ச நேரத்தில் வந்துவிடுகிறேன். இப்பொழுது தொந்தரவு செய்யாதீர்கள். அவருடைய தூக்கம் கலைந்துவிடும்" என்றாள். அவளுடைய மொழிகளைக் கேட்டு ஒன்றும் சொல்லத் தெரியாமல் பிரமித்து நின்றார் சுப்பிரமணிய ஐயர்.

சில தினங்களுக்குப் பிறகு வாலிபன் அம்மண்டபத்தை விட்டுப் போய்விட்டான். சிவகாமி பித்துப் பிடித்தவள்போல் ஊரெங்கும் அவனைத் தேடித் திரிந்தாள். ஜனங்கள் தன்னைப்பற்றி என்ன பேசிக்

கொள்கிறார்கள் என்பதை அவள் சிறிதும் பொருட்படுத்த வில்லை. இரண்டொரு நாட்களுக்கு அப்புறம் அவளையும் மதுரையில் காணவில்லை. இதைக் கேள்வியுற்ற அவள் தாய்தந்தையர் அதே கவலையால் உயிர் நீத்தார்கள் என்று ஜனங்கள் சொல்லிக்கொண்டார்கள். இதுதான் அந்த அம்மாளின் பூர்விக விருத்தாந்தம். கிழக்கு ஆவணி மூல வீதியிலுள்ள பாலர் முதல் விருத்தர்கள் வரை யாவருக்கும் இந்தக் கதை தெரியும் - என்று முடித்தான் தியாகராஜன்.

சற்று அருவருப்புடன், "அவளுடைய வீட்டிலா நீ குடியிருந்தாய்?" என்று நான் கேட்டேன்.

"நான் சொல்வது முழுவதையும் கேள்". என்று கூறித் தியாகராஜன் கதையை மீண்டும் ஆரம்பித்தான்:

"தாங்கள் இப்பொழுது சந்தோஷமாய் வாழ்கிறீர்களா?" என்று கேட்டேன்.

"சந்தோஷத்திற்கு என்ன குறை? அவருக்குத் தொண்டு புரிவதில் நான் ஒரு தெய்விக ஆனந்தத்தை அநுபவிக்கிறேன். அவருடைய சுகமே என்னுடைய சுகம். அவருக்குச் சிறிது தலைவலி என்றாலும், என் மனம் மிகுந்த வேதனை அடைகிறது. நாள் முழுவதும் அவரை என் மடியில் வைத்துக்கொண்டு அவருக்கு வேண்டிய சுச்ருஷைகள் செய்வேன். அவர் தூங்கும் வரைக்கும், அவருக்கு உடம்பு பிடித்துக்கொண்டும் விசிறிக் கொண்டும் இருப்பேன். அவர் சாப்பிட்டால் நான் சாப்பிட்டது போன்று இருக்கிறது. சில சமயங்களில் எனக்காக அவர் பாடுவார். அவருடைய பாட்டைக் கேட்கும்பொழுது என் கண்களில் நீர் பெருகும். அவர் எனக்கு என்ன என்னவோ உபதேசிக்கிறார். அவருடைய வார்த்தைகள் என் உள்ளத்தையே

தொடுவனபோல் தோன்றுகின்றன. எனக்கு இவ்வுலகில் உறவானவர் அவர் ஒருவரே என்று தோன்றுகிறது" என்று அவ்வம்மணி கூறினாள்.

"உங்களுக்குக் குழந்தைகள் உண்டா?"

"உனக்கு நான் சொல்வது விளங்கவில்லை. எங்களுடைய உறவு அத்தகையது அல்ல. அது ஆத்மிகச் சேர்க்கை. அதுதான் நீடித்து நிற்கக்கூடியது. அதுவே நிலையானது. இதர உறவெல்லாம் மாயை; நொடிப் பொழுதில் தோன்றி மறையக்கூடியது."

இத்துடன் நண்பன் கதையை முடித்துவிட்டான். வெகு நேரம் வரை இருவரும் மௌனமாய் இருந்தோம். அவன் என்ன செய்துகொண்டிருந்தானோ தெரியவில்லை. நான் அவன் சொல்லிய தெய்விகக் காதலைப்பற்றியே சிந்தித்துக்கொண்டு இருந்தேன். சர்வகலாசங்கக் கட்டிடத்திலுள்ள கடிகாரம் பதினொரு மணி அடித்தது. "மணி பதினொன்று அடித்துவிட்டது. வா, போகலாம்" என்றான் தியாகராஜன்.

இருவரும் எழுந்து திருவல்லிக்கேணியில் அதே வீதியின் வழியாக எங்கள் விடுதிக்குச் சென்றோம். நாங்கள் கடற்கரைக்குச் செல்லும்போது அங்கே கண்ட காதற் கேளிக்கைகள் ஒன்றும் அப்பொழுது காணவில்லை. எல்லா வீடுகளும் பூட்டப்பெற்று இருளடைந்த தோற்றமளித்தன. ஆனால் சிவகாமியம்மாள் வீட்டில் மட்டும் முன்போலவே தீபம் எரிந்துகொண்டிருந்தது. எனக்கு அவ்வம்மணியைப் பார்க்கவேண்டுமென்று அளவு கடந்த அவா எழுந்தது. வீடும் திறந்திருக்கவே என் நண்பன் இரவு நேரமாயிற்றே என்று சற்றும் தயங்காமல் என்னை வீட்டிற்குள் அழைத்துக்கொண்டு சென்றான். சாம்பிராணியின் நறுமணம் வீடு முழுவதும் பரவி

யிருந்தது. உள்ளே ஓர் அறையில் ஒரு படத்தின்முன் சிவகாமி அம்மையார் உட்கார்ந்து தியானம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தோம். எவ்வளவு நேரமாய் அம்மையார் அந்த ஸ்திதியில் இருந்தார்களோ, தெரியாது. நாங்கள் சென்ற சற்று நேரத்தில் கண் விழிக்கவே, என் நண்பன் அம்மையாரை வணங்கி நின்றான்.

"உட்கார் தியாகு! ஏது இந்நேரத்தில் இங்கு வந்தது?"

"நாங்கள் இருவரும் கடற்கரைக்குச் சென்றுவிட்டு இப்பொழுதுதான் திரும்பினோம். இந்நேரத்தில் வீடு திறந்திருப்பதைக் கண்டதும், தங்களைத் தரிசித்து விட்டுச் செல்லலாம் என்று வந்தோம்."

"இப்பொழுது நான் கதவைப் பூட்டுவதே இல்லை. அவர் மாயவாழ்வை நீத்து நித்திய வாழ்க்கையை அடைந்து விட்டார். இரவும் பகலும் அவரையே தியானித்துக் கொண்டிருக்கிறேன். எனக்குத் தூக்கமே வருவதில்லை. அவரை வெகு சீக்கிரத்தில் அடைய வேண்டுமென்று என் உள்ளம் துடிக்கிறது. அவருடைய உருவம் சிற்சில சமயங்களில் என் கண்முன்பு தோன்றி, 'அவசரப் படாதே. பொறுமையுடன் இரு. காலம் வரும்போது நான் உன்னை அழைத்துக்கொள்கிறேன்' என்கிறது. ஆகையால் பொறுமையுடன் காத்துக்கொண்டிருக்கி றேன்."

இதற்கு அப்புறம் சிறிது நேரம் யாவரும் மௌனமாய் இருந்தோம். பின்பு அவ்வம்மணியிடம் விடை பெற்றுக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறி னோம்.

நாலைந்து வீடுகள் தாண்டியதும், அழுகைக்குரல்

கேட்டது. "இனிமேல் இவ்வீட்டிற்குள் நுழைந்தாயானால், உன் காலைத் தறித்து விடுவேன்" என்று கர்ஜித்துக்கொண்டு ஓர் ஆடவன் யாரையோ முரட்டுத்தனமாய்த் தள்ளிக்கொண்டிருந்தான். அடுத்த நிமிஷம் ஓர் இளநங்கை தலைவிரிகோலமாய்த் தெருவில் நின்று அழுதுகொண்டிருந்தாள்.

## - 2 -

# விமோசனம் உண்டா?

"தமிழுக்கு விமோசனம் ஏது? மேனாட்டு ஆசிரியர்கள் எவ்வளவு அழகான கதைகளும், நாவல்களும், நாடகங்களும் எழுதுகிறார்கள்! இவ்விஷயத்தில் வட இந்திய ஆசிரியர்களாவது சிறிது தேவலை; நம் தமிழ் ஆசிரியர்கள் சுத்த மோசம்; உதவாக்கரைகள்!" என்றேன்.

"தமிழ் வசன இலக்கியம் ஆரம்பித்துச் சில வருஷங்களே ஆகின்றன. அதற்குள் எவ்வளவோ முன்னேற்றத்தைக் காண்கிறோமே!" என்றார் நண்பர் சுப்பிரமணியம்.

"அழகிய உயர்தரத் தமிழ் நாவல் ஒன்றுவது நான் படித்துவிட்டுச் சாவேனென்று எனக்கு நம்பிக்கை இல்லை."

"ஆசிரியர் சுந்தரேசன் எழுதியதைப் படித்திருக்கிறீர்களா?"

"இல்லை."

"வெகு அழகாய் எழுதுகிறார். அவர் என் நண்பர் தாம். ஒரு நாளைக்கு உங்களிடத்தில் அழைத்துக்கொண்டு வருகிறேன்."

மேற்கூறிய சம்பாஷணை நடந்து சில தினங்களுக்குப் பின் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் நானும் நாகராஜனும் சமுத்திரத்தை நோக்கி உட்கார்ந்திருந்தோம். சிற்றலைகளும் பேரலைகளும் கரையில் வந்து மோதிக் கொண்டிருந்தன. அகங்காரங்கொண்ட அலைகளிற் சில, நாங்கள் உட்கார்ந்திருந்த இடம் வரைக்கும் வந்து எங்களுடைய கால்களைக் கழுவிவிட்டுச் சென்றன. எக்காலந் தொட்டு அவை முழங்குகின்றன, இனி எக்காலம் வரை அவை முழங்கிக்கொண்டிருக்கும் என்று நினைக்கலானேன். திடீரென்று என்னையும் அறியாமல், "கடலே, நீ ஏன் ஓயாது அலறுகிறாய்? வானத்தைப் பார்" என்றேன்.

"கடல் அலறுவதன் காரணம் உனக்குத் தெரியவில்லையா?" என்று நாகராஜன் கேட்டான்.

என்னுடைய சிந்தனை கலைவதற்கு எனக்கு இஷ்டமில்லை. ஆகையால் நாகராஜன் கேள்விக்குப் பதில் சொல்லாமல் யோசித்துக்கொண்டிருந்தேன்.

நாகராஜன் மீண்டும் பேசினான்: "பண்டைத் தமிழகத்தை விழுங்கின பாவத்திற்குப் பிராயச்சித்தமாக அன்றிருந்து இன்றுவரை கடல் அலறிக்கொண்டே இருக்கிறது."

"மடையா! அதற்கு முன்னால் கடல் கர்ஜிக்கவில்லையோ? காரணமாவது சரியாய்க் கற்பிக்கத் தெரிகிறதா, உனக்கு? நான் சொல்லுகிறேன், பார். பாக்கியுள்ள தமிழ் நாட்டையும் விழுங்காமல் விட்டு விட்டோமே என மார்பில் அடித்தும், தரையில்

மோதியும், தன்னைத்தானே நொந்துகொள்ளுகிறது கடல்."

"ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?"

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல எனக்கு இஷ்டமில்லை. மௌனமாய் இருந்தேன்.

"அங்ஙனம் நீ விரும்புவதன் காரணம் என்ன?" என்று நாகராஜன் மீண்டும் வினவினான்.

"உனக்குத் தெரியவில்லையா?"

"தெரியவில்லை."

"தமிழ் இலக்கியத்தைப் பார்; அதில் புதுமை மணம் வீசவில்லை. கம்பராமாயண காலத்திலிருந்து புதிய ஊற்றுக்கள் அதில் ஒன்றும் தோன்றவில்லை."

"கமலாம்................." என்று ஆரம்பித்தான் நாகராஜன்.

"கமலாம்பாள் சரிதையையும், பிரதாப முதலியார் சரித்திரத்தையும் இன்னும் எத்தனை வருஷங்களுக்குத் தான் சொல்லிக்கொண்டிருப்பீர்கள்? இந்த நூற்றாண்டு முழுவதும் சொல்லுவீர்களா? அவைகளின் பெயரைக் கேட்டுக் கேட்டு என் காதுகூடப் புளித்துவிட்டது."

எனக்குக் கோபம் பொறுக்க முடியவில்லை.

* * *

அச்சமயம் நண்பர் சுப்பிரமணியம் ஒரு வாலிபருடன் வந்து சேர்ந்தார்.

"இலக்கியப் பேச்சுத்தான் நடந்துகொண்டிருக்கிறது போலும்; சரியான சந்தர்ப்பந்தான். இவர்தாம் ஆசிரியர் சுந்தரேசன். உங்கள் வீட்டிற்கெல்லாம் போய்த் தேடிவிட்டு அல்லவா வருகிறோம்!" என்றார்.

எங்களுக்கு முன்னால் நின்றுகொண்டிருந்த

வாலிபரைப் பார்த்தேன். 'கிராப்' என்ற பெயருள்ள ஒரு பரட்டைத் தலை. அதைச் சீவிவிட்டு எத்தனை நாட்கள் ஆயினவோ? அதற்கும் எண்ணெய்க்கும் வெகு நாள் பகையாய் இருந்திருக்கவேண்டும். இரண்டு வாரங்களுக்கு மேல் க்ஷவரம் செய்யப்படாத அவருடைய தாடி மீசை ரோமங்கள், சிறுசிறு இரும்பு ஊசிகள், போல் அங்கங்கே நீட்டிக்கொண்டிருந்தன. ஆசிரியர்கள் கண்களிலிருந்து ஞான ஒளி வீசும் என்பார்கள். அவருடைய கண்களிலோ முகத்திலோ நான் எத்தகைய பிரகாசத்தையும் பார்க்கவில்லை. இத்தனைக்கும் முடி சூடுவதுபோல், அழுக்கு வேஷ்டியும் ஷர்ட்டும் அணிந்திருந்தார். அவருடைய தோற்றம் அருவருப்பை ஊட்டியது.

"ஆசிரியரென்ருல் நாவலாசிரியரா, நாடகாசிரியரா?" என்று குத்தலாகக் கேட்டேன்.

"இன்னும் இவர் வாலிபர்தானே; இப்பொழுது கட்டுரைகளும் கதைகளும் எழுதுகிருர். இனிமேல் நாடகங்களும் நாவல்களும் எழுதுவார்" என்ருர் சுப்பிரமணியம்.

இருவரும் உட்கார்ந்தார்கள்.

"இவருடைய கதைகளைக்கூட நீங்கள் பத்திரிகையில் படித்திருக்கலாமே?" என்று மீண்டும் சுப்பிரமணியம் கேட்டார்.

"நான் தமிழ்ப் பத்திரிகை படிக்கும் வழக்கத்தை விட்டு வெகுநாளாய் விட்டது."

இங்ஙனம் கூறுவதில் உள்ளூற நான் சிறிது பெருமை கொண்டேன்.

கொஞ்ச நேரம் யாவரும் மௌனமாயிருந்தோம். ஆசிரியர் சுந்தரேசன் இலக்கிய விஷயமாய் ஏதாவது பேசுவார் என்று எதிர் பார்த்தேன். ஆனுல் அவர்

ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்தார். அவருடைய தோற்றந்தான் எனக்குத் திருப்தி அளிக்கவில்லை; ஆசாமியின் பேச்சு எப்படி இருக்கிறதென்று பார்க்கலாம் என்று நானே சிறிது கிண்ட ஆரம்பித்தேன்.

"மேனாட்டு ஆசிரியர்கள் எல்லாத் துறைகளிலும் மிக்க அநுபவம் வாய்ந்தவர்களாய் இருக்கிறார்கள். அவர்களுடைய கதைகள் எல்லாம் வாழ்க்கையிலிருந்து அப்படியே எடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஒரு ஜீவநாடி ஓடுகிறது. அவர்களுடைய சிருஷ்டிகளெல்லாம் உயிருள்ளவை" என்றேன்.

'தமக்குத் தெரிந்த ஆசிரியர்களை உதாரணமாகக் காட்டிச் சுந்தரேசன் இவ் விஷயத்தை மேலும் விளக்குவார் என்பது என் எண்ணம். அவர் ஒன்றும் பேசாமல் இருப்பதைக் கண்டு, நான் மேலும் கூறலானேன். "தொழிலாளர்களின் நிலைமையை உள்ளது உள்ளபடி அறிந்து எழுதுவதற்கு, அப்டன் சிங்க்ளேர் என்னும் அமெரிக்க ஆசிரியர், தாமே மில்களுக்குச் சென்று ஒரு சாதாரணக் கூலியாக இருந்து வேலை செய்வாராம். அத்தகைய ஆசிரியர்கள் நமது நாட்டில் எங்கே இருக்கிறார்கள்?" என்றேன்.

"ஏன், நம் நாட்டிலும் ஓரிருவர் இருக்கிறார்கள்." பதில் சொன்னது சுப்பிரமணியம்; சுந்தரேசன் அல்ல!

"மேலும் ஓர் ஆசிரியனுக்கு இலக்கியக் கலையில் நல்ல பயிற்சி இருப்பதோடு, சிற்பம், சித்திரம், சங்கீதம் முதலிய இதர கலைகளிலும் சிறிது பரிசயம் இருக்க வேண்டும். நம் ஆசிரியருக்கும் அவை கொஞ்சம் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன்" என்றான் நாகராஜன்.

"அது ஒன்றும் எனக்குத் தெரியாது" என்றார் சுந்தரேசன்.

"இதர கலைகள் அறிந்திருக்கவேண்டிய அவசியம் இல்லை; இலக்கியக்கலை நன்கு தெரிந்திருந்தால் போதும்" என்று சுப்பிரமணியம் தம் நண்பருக்காக வக்காலத்து வாங்கிப் பேசினார். அவர் பி. எல். வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறார்!

'அப்டன் சிங்க்ளேரின் நாவல்கள் ஏதாவது படித்திருக்கிறீர்களா?" என்று நான் சுந்தரேசனைக் கேட்டேன்.

"இல்லை."

"கார்க்கியின் 'அன்னை' படித்திருப்பீர்கள்" என்றான் நாகராஜன்.

"இல்லை."

நான் ஆச்சரியமுற்றேன். பிரபல ஆசிரியர்களின் புத்தகங்களைப் படிக்காத இவர் எப்படிக் கதைகள் எழுத முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. சுப்பிரமணியத்திற்குங் கூட இது அதிசயமாய் இருந்தது. பிறகு சுமார் பத்து நிமிஷங்கள் வரை ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. ஆசிரியர் சுந்தரேசனுடைய முகத்தைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது. சில சமயம் தரையை நோக்கிக்கொண்டிருப்பார். சில சமயம் சமுத்திரத்தை நோக்குவார். நிமிஷத்திற்கு நிமிஷம் அவருடைய முகத்தின் நிறம் மாறியது. ஒன்றும் பேசாமலிருப்பது அவருக்கே கஷ்டமாக இருந்தது. ஆனால் பாவம்! பேசத் தெரியவில்லை! 'இவர்களிடத்தில் அகப்பட்டுக்கொண்டு இப்படி விழிக்க வேண்டியிருக்கிறதே' என்று நினைத்தார் போலும்! தப்புவதற்கு ஒரு வழி தேடிக் கொண்டு இருப்பதுபோல் தோன்றியது. திடீரென்று

எழுந்திருந்து, "எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது. நான் சென்று வருகிறேன்" என்று விடை பெற்றுக் கொண்டு போய்விட்டார்.

* * *

ஏன் தமிழ் இவ்வளவு மோசமான நிலைமையில் இருக்கிறது என்பது இப்பொழுது எனக்கு விளங்கி விட்டது. சுந்தரேசனைப்போல் ஆசிரியர்களையுடைய ஒரு பாஷை 'இவ்வளவு தூரம் முன்னேறி யிருப்பதே ஆச்சரியமல்லவா? ஆனால் சுப்பிரமணியம், தம் நண்பரை நான் அவமானப்படுத்தித் துரத்திவிட்டதாக என்னைக் குற்றஞ் சாட்டினார். எனக்குக் கோபம் பொறுக்க முடியவில்லை. "நாலு பேருக்கு மத்தியில் இரண்டு வார்த்தைகள் பேசத் தெரியவில்லை! இவன் எல்லாம் ஆசிரியனாம்! இவனுக்கெல்லாம் என்ன எழுதத் தெரியும்? 'கட்டியணைத்து முத்தமிட்டார்கள்' என்று கழிசறைக் காதற் கதைகள் எழுதுவான்!" என்றேன்.

"ஆசிரியருக்குப் பேசத் தெரியவேண்டுமென்று எந்தச் சாஸ்திரத்தில் எழுதியிருக்கிறது?" என்று சுப்பிரமணியம் கேட்டார்.

"ஆசிரியனாக இருப்பவன் நாநாவிதமான ஜனங்களோடு பழகி, பேசி, அவர்களிடம் துழாவித் துழாவிக் கேள்விகள் கேட்டு வாழ்க்கையை அறியவேண்டும். அவன்தான் பேராசிரியனாய் விளங்க முடியும்" என்றேன்.

"ஆசிரியனுக்குக் கண்களும் காதுகளும் கூர்மையாக இருந்தால் போதும். நாவை உபயோகிக்க வேண்டிய அவசியமில்லை. ஆலிவர் கோல்டுஸ்மித்தும், அடிஸனும்

வெகு அழகாய்ப் பேசுவார்களோ?" என்றார் சுப்பிர மணியம்.

எனக்குக் கோபம் பொங்கியது. "குருடனெல்லாம் தன்னை மில்டனென்றும், பித்தனெல்லாம் தன்னைச் சார்லஸ் லாம்பென்றும், பேசத் தெரியாதவனெல்லாம் தன்னைக் கோல்டு ஸ்மித்தென்றுந்தான் நினைத்துக் கொண்டு திரிகிறான்கள், மடச் சாம்பிராணிகள்!" என்றேன்.

இதற்குமேல் சுப்பிரமணியம் வாய் திறக்கவில்லை. என்ன சொல்லுவார்?

* * *

அப்புறம் வெகு நாள் வரைக்கும் ஆசிரியர் சுந்தரேசனை நான் பார்க்கவில்லை. அவரைப்பற்றிக் கேள்விப்படவும் இல்லை. சில தினங்களுக்கு முன்னால் எழும்பூர் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் அவரைச் சந்தித்தேன். அதே அழுக்குத் துணியும், ஷர்ட்டும் அணிந்துகொண்டு பைத்தியக்காரனைப்போல் போய்க் கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் லேசாய்ப் புன்னகை செய்தார். ஆனால் அந்தக் கிறுக்கனோடு அறிமுகம் உள்ளவனாய்க் காட்டிக்கொள்வதற்கே எனக்கு வெட்கமாய் இருந்தது. அவரைப் பாராதவன்போல் நான் போய்விட்டேன்.

* * *

இரண்டு நாட்களுக்கு முன்பு நான் என் அறையில் உட்கார்ந்து, தாமஸ் ஹார்டி நாவல் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தேன். மத்தியான்னம் சுமார் ஒரு மணி இருக்கும். கையில் ஒரு பத்திரிகையுடன் சுப்பிரமணியம்

ஓடி வந்தார். "சுந்தரேசனுடைய திறமையைப்பற்றி நான எவ்வளவு கூறியும் உங்களுக்கு நம்பிக்கையில்லை. இந்தக் கதையைப் படித்துப் பாருங்கள்" என்றார்.

நாவலில் கதாநாயகன் கதாநாயகியை முத்தமிடப் போகும் கட்டம். இவ்வழகிய பாகத்தில் 'சிவ பூஜை வேளையில் கரடி வந்தது' போல் இவன் எங்கிருந்தடா வந்தான் என்று மனத்திற்குள் நினைத்துக்கொண்டு, "இப்பொழுது எனக்கு நேரமில்லை" என்றேன்.

"இதைப் படித்துப் பாருங்களேன், எவ்வளவு அழகாய் இருக்கிறதென்று" என என்னைத் தொந்தரவு பண்ணினார் சுப்பிரமணியம். ஆசாமி என்னை விட மாட்டார்போலத் தோன்றியது. தலைவிதியே என்று ஹார்டியின் நாவலை வலது கையில் பிடித்த வண்ணம் இடது கையினால் பத்திரிகையை வாங்கிப் படிக்க ஆரம்பித்தேன். கொஞ்ச நேரத்தில் வலது கையிலிருந்த நாவல் விழுந்ததைக்கூட நான் கவனிக்கவில்லை. 'போர்ட்டர் மாரியப்பன்' என்னும் அந்தக் கதை உண்மையிலேயே வெகு அழகாய் இருந்தது. ரெயில் கூலி ஒருவனுடைய வாழ்க்கையின் உள்ளும் புறமும் அதில் வெகு அழகாய்ச் சித்திரிக்கப்பட்டிருந்தது. மேனாடுகளில் கூட இரண்டொரு பேராசிரியர்களால்தான் அத்தகைய வாழ்க்கைச் சித்திரம் வரைய முடியும். அதை அழியாச் சிறு கதைகளில் ஒன்றாய் மதிக்க வேண்டும். ஆனால், சுந்தரேசன் இவ்வளவு அழகாய் எழுதியிருப்பார் என்று நான் நம்பவில்லை. "எத்தனை கோயில்களில் வேண்டுமென்றாலும் சத்தியம் செய்யத் தயார்; இது ஆசிரியர் சுந்தரேசனுடைய சொந்தக் கதை அல்ல!" என்றேன்.

"இந்த மாதிரியான கதையை நீங்கள் வேறு

எங்காவது படித்திருக்கிறீர்களா?" என்று சுப்பிரமணியம் கேட்டார்.

"இதுவரை படித்ததில்லை; ஆனால் இதன் மூலம் வேறு எந்தப் பாஷையிலாவது இருக்கும் என்று நிச்சயமாய்ச் சொல்லுவேன்." இங்ஙனம் சொல்லி முடிப்பதற்குள், சில தினங்களுக்கு முன்னால் ஆசிரியர் சுந்தரேசனை எழும்பூர் ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் பார்த்தது திடீரென்று ஞாபகம் வந்தது. 'அத்தகைய ஆசிரியர்கள் தமிழிலுமா இருக்கிறார்கள்?' என்று அடுத்த நிமிஷமே என் மனத்தில் ஒரு குரல் சொல்லியது. என்ன இருந்தாலும் நான் கடற்கரையில் அன்று பார்த்த அசடு இக் கதையை எழுதியிருக்காது என்று தீர்மானித்தேன்.

அச் சமயம் வெளியிலிருந்து யாரோ ஒருவர் என்னைக் கூப்பிடும் சப்தம் கேட்டது. கிருஷ்ணன் வருவதாக எழுதியிருந்தான். அவனாகத்தான் இருக்கலாம் என்று நினைத்து, "கிருஷ்ணா? உள்ளே வாயேன்" என அறையில் இருந்தவாறே கத்தினேன். ஆனால் இரண்டு மூன்று நிமிஷங்கள் ஆகியும் அவன் வரவில்லை. போர்ட்டரோடு ஏதோ தகராறு செய்துகொண்டிருந்தான்.

"சாமான்களை உள்ளே கொண்டுவந்தால்தான் காசு கொடுப்பேன்" என்றான் கிருஷ்ணன்.

"காசு கொடுக்காவிட்டால் போங்கள். இந்த வீடு என்று முன்பே தெரிந்திருந்தால் வந்திருக்க மாட்டேன்" என்று சொல்லிச் சாமான்களைத் திண்ணையிலே வைத்துவிட்டுப் போர்ட்டர் நடக்க ஆரம்பித்தான்.

இதைக் கவனித்துக்கொண்டிருந்த நான் ஆச்சரியமுற்றேன். பேசின பணத்திற்குமேல் அரையணாவாவது

அதிகம் வாங்காமல் செல்லும் போர்ட்டரை என் சிறிய வாழ்க்கையில் நான் இதுவரை கண்டதில்லை. அங்ஙனம் இருக்க, மத்தியான்ன வெயிலில் ஸ்டேஷனிலிருந்து சுமார் ஒருமைல் தூரம் கழுத்து வலிக்கச் சாமான்களைச் சுமந்து கொண்டு வந்துவிட்டு ஒரு பைசா கூட வாங்காமல் செல்லும் இந்த அதிசயப் போர்ட்டர் யார் என்று பார்க்க விரைவாய் வெளியில் சென்றேன். அந்தப் போர்ட்டரைப் பார்த்ததும் என் கண்களை நம்ப முடியவில்லை. அப்படியே பிரமித்து நின்றேன். இரண்டொரு நிமிஷங்களுக்கு அப்புறம் கிருஷ்ணனைப் பார்த்து, "அதோ போகிறாரே, அவரா உன் சாமான்களைச் சுமந்துகொண்டு வந்தது?" என்று கேட்டேன்.

"ஆமாம். அந்த அகங்காரம் பிடித்த பயல்தான்" என்றான் கிருஷ்ணன்.

அழுக்கு வேஷ்டியும் கிழிந்த பனியனும் அணிந்து கொண்டு ஆசிரியர் சுந்தரேசன் தெருவழியே போய்க் கொண்டிருந்தார்!

# - 3 -

# செட்டு

"இன்று காய் கிடையாது. மொச்சைப்பயறு போட்டுக குழம்பு வை" என்றார் சிவசாமி செட்டியார்.

"அப்ப மொச்சைப் பயறாவது வாங்கிக்கொண்டு வாருங்கள்" என்றாள் பார்வதியம்மாள்.

"வாங்கிக்கொண்டு வருகிற பேச்சுக் கிடையாது. மொச்சைப்பயறு இல்லாவிட்டால் அவரை வற்றலைப்

போட்டு வை" என்று சொல்லிவிட்டு நித்தியப் பிரசங்கத்தை ஆரம்பித்தார். மேல் வீட்டுக்காரச் செட்டி வட்டிக்கு வட்டி போட்டு, கணக்கை ஏத்தி வைத்துக்கொண் டிருக்கிறான். நான் கடன் எப்படா தீரப்போகிறது என்று இருக்கிறேன். பொதி நூறு ரூபாய் வித்த பருத்தி பதினைந்து ரூபாயாய்விட்டது. குறுக்கம் நாலுபொதி வெடிக்குமிண்ணு மதிப்புப் போட்டு வச்சிருந்தேன். அந்தப் பாரெழவு மழை வந்து காயெல்லாம் உதித்துப்புடுச்சு. கோடைமழை பேயுதோ என்னமோ? எப்படிக் கடன் தீர்க்கப் போகிறோம்? மண்டையைப் போடுறதுக்குள்ளே இந்தக் கடனெல்லாம் தீத்துப் பேரப்பிள்ளைகளுக்கு ஆளுக்கு ரெண்டு சங்கிலி நிலமாவது வில்லங்கமில்லாமல் வச்சிட்டுப் போகணு மிண்ணு நான் பார்க்கிறேன். இல்லையிண்ணு ஊர் நாய்களெல்லாம் சிரிக்குமேடி, செட்டியார் வாழ்வு செத்தால் தெரியுமிண்ணு."

இந்தப் பிரசங்கத்தின் மேல் பார்வதியம்மாள் தன் அபிப்பிராயத்தை முடிவுரையாகக் கொடுப்பது எப்போதும் வழக்கம். ஆனால் இன்று என்னவோ செட்டியார் சொன்னது உண்மைதானென்று அவளுக்குக் கூடப் பட்டது.

சிவசாமி செட்டியாருக்கு ஏழெட்டுச் சங்கிலிப் புன்செய் நிலமும், 1500 ரூபாய்க் கடனும் உண்டு. அவருக்கு ஆண்பிள்ளைகள் இல்லை. நான்கு பெண் பிள்ளைகள் தாம் உண்டு. அந்த நான்கு பெண்களுக்கும் கல்யாணமாகி அவர்களுக்குக் குழந்தைகளும் இருக்கின்றன. அது என்னவோ சொல்லிவைத்ததுபோல், மகள் ஒவ்வொருத்திக்கும் ஆண் பிள்ளை மாத்திரம் ஒவ்வொன்றுதான் இருந்தது. பொதுவுடைமை! செட்டி

யாருக்குக் காடுதான் உயிர். இரவும் பகலும் காட்டிலேயேதான் கிடப்பார். "செட்டியாருக்கு லேசிலே உயிர் போகாது; அந்தத் தார்க் காட்டு மண்ணைக் கரைச்சு வாயிலே ஊத்தினுத்தான் உயிர் போகும்" என்று ஜனங்கள் சொல்லுவது உண்டு. தார்க்காடு செட்டியாருக்கு வெகு பிரியமான காடு. தார்க்காட்டுப் பூமாதேவி தயை வைத்தால் கடன் ஒரு வருஷத்தில் தீர்ந்துவிடும் என்பது செட்டியாரின் பூரண நம்பிக்கை.

அன்று மழை பெய்துகொண்டிருந்தது. ஆகையினால் செட்டியார் காட்டுக்குப் போக முடியவில்லை. சீட்டுக் கட்டை எடுத்துக்கொண்டு ஊர்ச்சாவடிக்குப் போனார். என்ன ஆட்டம் விளையாடுவது என்ற பிரச்னை முதலில் ஆலோசனைக்கு வந்தது.

"304 போடலாமா" என்றார் சிவசாமி செட்டியார்.

"சீட்டு விளையாட்டிலுமா கஞ்சத்தனம்! 504, 904, 1004 எல்லாம் இருக்கும்போது, தரித்திரம் பிடிச்ச 304 தானா விளையாடணும்? 1004 போடையா" என்றார் மூலைவீட்டு முரட்டு நாயக்கர்.

"நாயக்கர் எப்போதும் முரட்டடிதான் அடிப்பார். போடையா, நாயக்கர் மனம்போலப் போடு" என்றார் செட்டியார்.

சீட்டுக் கலைத்துப் போடப்பட்டது.

"செட்டியாரையர்வுக்கு ஒரு காயிதமில்ல கொண்டு வந்திருக்கிறேன்" என்று சொல்லிப் பல்லைத் திறந்து கொண்டே தபால்காரன் வந்தான். தாலுகா ஆபீஸ் டபேதார், முன்சீப் கோர்ட்டுச் சேவகன், கிராமத் தபால் காரன் - இவர்களுடைய பல்லிளிப்பெல்லாம் ஒரே ரகம்; கொஞ்சங்கூட வித்தியாசம் இல்லை. ஏனென்றால்

இவைகள் அனைத்திற்கும் அர்த்தம் ஒன்றுதான். தபால் காரனைக் கண்டால் கிராமத்தார்களுக்கு அடி வயிற்றில் நெருப்புத்தான். கல்லூரி மாணவர்களுக்கு வரும் காதற் கடிதமோ, 'கன்க்ரேச்சுலேஷன் லெட்டரோ' கிராமத்தார்களுக்கு வரப் போவதில்லை. ஒன்று மண ஓலையாக இருக்கவேண்டும்; அல்லது மரண ஓலையாக இருக்கவேண்டும். எதுவானலும அவர்களுக்கு ஒன்று தான். ரூபாய் அணு பைசாவில் மொழிபெயர்க்கும் பொழுது 'செல்வு' என்ற கலத்தில்தான் வந்து முடியும்.

"மஞ்சள் தடவியிருக்கு; சுபகாரியந்தான் ஐயா" என்ருர் மூக்க நாயக்கர்.

"நமக்கு நாலணு பழுத்துப் போச்சிண்ணு சொல் லுங்க" என்ருன் தபால்காரன்.

"எங்கேயிருந்தையா வந்திருக்கு?" என்று கேட்டார் நொண்டித்தேவர்.

"எங்கே இருந்து வந்திருக்கப் போகுது? ஜோஸியமா கேக்கணும்? மதுரைப் பேரனுக்குக் கல்யாணப் பேச்சு நடந்துகொண்டிருந்தது; அங்கே இருந்துதான் வந்திருக்கும்" என்று சொல்லிக்கொண்டே அநாயாசமாகக் கவரை உடைத்தார்.

"அப்ப எங்களுக்கு நாலு நாளைக்குப் பருப்புச் சோறு இருக்கிண்ணு சொல்லுங்க" என்ருர் முரட்டு நாயக்கர்.

"கல்யாணம் மதுரையிலே இல்ல நடக்கும்? நமக்கு எங்கே சோறு கிடைக்கப்போகுது?" என்ருர் நல்லம நாயக்கர்.

"இருங்க ஐயா, செட்டியாரை வாசிக்கச் சொல்லிக் கேட்போம்" என்ருர் முரட்டு நாயக்கர்.

கிராமத்திற்கு வரும் கடிதங்களெல்லாம் கிராமத்

தாரின் பொதுச் சொத்து என்பது இவர்கள் அபிப்பிராயம்.

செட்டியார் கவரை உடைத்து ஒரு மஞ்சள் பத்திரிகையை வெளியில் எடுத்து இங்கும் அங்கும் திருப்பிக்கொண் டிருந்தார்.

“வாசிங்க ஐயா” என்று அவசரப்படுத்தினார் மூக்க நாயக்கர்.

“கண்ணாடி வேணுமில்ல. எனக்குமில்ல எழவு வெள்ளெழுத்து வந்திரிச்சு” என்றார் செட்டியார்.

“அடே ராமா, கணக்குப்பிள்ளை ஐயாகிட்டக் கண்ணாடி வாங்கீட்டு வாடா, காயிதம் வாசிக்கணு மிண்ணு” என்றார் முரட்டு நாயக்கர்.

அந்த ஊர் முழுமைக்கும் அது ஒரு கண்ணாடி தான்.

வெகு நேரம் வரைக்கும் ராமன் திரும்பிவரவில்லை. வெளியில் வந்து பார்த்தபொழுது மரத்தில் மாங்காய் தட்டிக்கொண்டிருந்தான்.

“என்னடா கண்ணாடி மாமரத்தில் மாட்டிக் கொண்டதா?”

“கணக்குப் பிள்ளை ஐயா வீட்டிலே இல்லை” என்று கத்தினான் ராமன்.

இதற்குள் முரட்டு நாயக்கர் சொன்னார்: “இந்தா வாத்தியாரையா வருகிறாரில்ல. அவரை வாசிக்கச் சொல்லலாம்.”

உபாத்தியாயர்; மேலே பிள்ளையார் சுழியிலிருந்து கீழே ‘சிவானந்தம் பிரஸ், காப்பிகள் 200’ என்பது வரைக்கும் வாசித்தார்.

“கல்யாணம் எண்ணைக்கு?” என்று கேட்டார் செட்டியார்.

"நெருங்கிவிட்டது. நாளை கழித்து மறுநாள் தான்" என்றார் உபாத்தியாயர்.

"அப்ப இண்ணைக்கே புறப்பட வேண்டியதுதான்" என்றார் நல்லம நாயக்கர்.

"சமுசாரி அப்படி நெனைச்சது நெனச்சாப்பிலே போக முடியுமா ஐயா? நாளைத்தான் போகணும்."

"பாட்டியம்மாளையும் கூட்டிக்கொண்டு போங்க ஐயா. பேரனுக்கு 'எப்பக் கல்யாணம், எப்பக் கல்யாணமி'ண்ணு தவிச்சிக்கிட்டிருக்குது" என்றார் மூக்க நாயக்கர்.

"எனக்கு உத்தரவு கொடுங்க" என்றான் தபால் காரன்.

"ஆமையா, சேவுகரையாவுக்கு நல்ல மரியாதை செய்து அனுப்புங்கோ. பாவம், மழையிலே நனைஞ்சுக் கிட்டே வந்திருக்கார்" என்றார் முரட்டு நாயக்கர்.

"அவர் நாமக்காரரில்ல. நம்ப வீட்டிலே சாப்பிட மாட்டாரே" என்றார் செட்டியார்

"கணக்குப் பிள்ளை வீட்டிலே சொல்லுங்கையா" என்றார் நொண்டித்தேவர்.

தபால்காரன் சாப்பாட்டிற்கு' அரிசி பருப்பு எடுத்துக்கொண்டு செட்டியார் கணக்குப்பிள்ளை வீட்டில் சொல்லப்போனார்.

"சிவசாமி செட்டியார் இங்குறது யாரு?" என்று சொல்லிக்கொண்டு ஒரு வண்ணான் வந்தான்.

"ஏனப்பா? இப்பத்தான் கணக்குப்பிள்ளை வீட்டிற்குப் போகிறார்."

"எல்லாம் நல்ல காரியந்தான்" என்றான் வண்ணான்.

"பெரிய பேரனுக்குச் சாந்திமுகூர்த்தமாயிருக்கும்" என்றார் நல்லம நாயக்கர்.

"ஆமைய்யா, பெண் ருதுவானால் செட்டிப்பிள்ளைகள் வண்ணானைத்தானையா அனுப்புவது வழக்கம்" என்று சொல்லிவிட்டுத் தமது அநுபவஞானத்துக்கு ஏற்ற மதிப்பை எல்லாரும் கொடுக்கிறார்களா என்று எல்லோரையும் ஒருமுறை சுற்றிப் பார்த்தார் முரட்டு நாயக்கர்.

"ஓலையைக் கொடப்பா வாசிப்போம்" என்றார் உபாத்தியாயர்.

உபாத்தியாயர் வாசித்துக்கொண்டிருக்கும்போது செட்டியாரும் வந்துசேர்ந்தார்.

"செட்டியாரையாவுக்கு ரெட்டைப் பிரைஸ் இல்ல அடிச்சிருக்கு. ஒரு பேரனுக்குக் கல்யாணம், இன்னொரு பேரனுக்குச் சாந்திமுகூர்த்தம்!" என்றார் நொண்டித் தேவர்.

"அந்த யோகத்தை ஏன் சொல்லுகிறீர்கள், ரூபாய் 500 பழுத்துப் போச்சு" என்றார் செட்டியார்.

"ரூபாய் போனாப்போகுதையா. கழுதை இன்னைக்கிப் போகும், நாளைக்கு வரும். அதைத் தள்ளுங்க. பேரன் கல்யாணத்தையும், சாந்தியையும் பார்க்கக் கொடுத்து வச்சிருக்கணுமே ஐயா; எல்லோருக்கும் கிடைக்குதா? நானும் ஒரு மலட்டுக் கழுதை இருக்கிறேன். லக்ஷரூபாய் கொடுத்தாலும் ஒரு பேரன் கல்யாணத்தைப் பார்க்க முடியுமா?" என்றார் முரட்டு நாயக்கர்.

* * * *

"அத்தான் வாருங்க! பேரனுக்கு நாளைக் கல்யாணமிங்க. இண்ணைக்கு யாரோ விருந்தாளிபோல வந்திருக்கியளே என்ன!" என்றார் ராமநாதன் செட்டியார்.

"ஒங்களைப்போல பட்டணக்கரையிலே இருந்தால், இண்ணைக்குப் போட்ட காயிதம் நாளைக்குக் கெடைச்சிரும். பாரெழுவு பட்டிக்காட்டிலே தபாலாபீஸா, ஒண்ணு? ஒங்க பத்திரிகை நேற்றுத்தான் கிடைச்சுது. இண்ணைக்குப் புறப்பட்டு வந்தேன்."

"பேரன் என்னமோ சொல்ருனே?"

"என்ன?"

"வெண்பட்டு வேணுமாம். 200 ரூபாயிலே வயிரக் கடுக்கன் வேணுமாம். ஒரு தங்க அருணுக்கொடியும் வேணுமாம்."

செட்டியார் சிரித்துக்கொண்டே, "இது நீங்கள் சொல்லுகிறீர்களா, பேரன் சொல்லுகிருனு?"

புன்முறுவலோடு, "நான் சொன்னு நம்பமாட்டிய. ஒங்க பேரனை நீங்களே தனியாக் கூப்பிட்டுக் கேளுங்க."

"அது சரி. அவன் சொன்னுல் என்ன, நீங்கள் சொன்னுல் என்ன? எல்லாம் ஒன்றுதான். மாவாத் தின்னுப் பணியாரம் இல்லை."

அன்றிரவு மேல்வீட்டுக்காரச் செட்டியிடம் போய் சிவசாமி செட்டியார் ஒன்றரை வட்டியில் ஐந்நூறு ரூபாய் கடன் வாங்கினுர்!

## - 4 -

# பேய்! பேய்!

எங்கள் ஊரிலிருந்து மேற்கே சுமார் நாற்பது மைல் தூரத்தில் மஹாலிங்க மலை இருக்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலையில் அது ஒரு குன்று. அங்கு மஹாலிங்கர்

கோயில் இருக்கிறது. ஆடி அமாவாசையன்று அங்கு பெரும் உற்சவம் ஒன்று நடக்கும். உற்சவத்திற்கு ஒரு வாரம் இருக்கும்பொழுதே எங்களூரிலிருந்து மொட்டை வண்டி, கூட்டு வண்டி, வில் வண்டி * முதலியவை நூற்றுக்கணக்கில் புறப்படும். ரயில், கார் முதலிய எவ்வகைப் போக்குவரவு சாதனமும், மஹாலிங்கமலை போவதற்குப் பிரயோஜனப்படுவதில்லை. இவ்வருஷம் என் தங்கை லக்ஷ்மியையும் மாப்பிள்ளையையும் எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்திருந்தோம். சாந்திக் கல்யாணம் ஆனபிறகு லக்ஷ்மி இப்பொழுதுதான் பிறந்தகம் வந்திருந்தாள். மாப்பிள்ளை ராமநாதன் இன்ஷூரன்ஸ் கம்பெனி ஏஜெண்டு. அவருக்கு மலைப் பிரயாணம் என்றால் வெகு பிரியமாம். எங்கள் ஊரிலிருந்து மஹாலிங்க மலைக்கு வண்டிகள் போவதைக் கண்டதும் அவரும் போக விரும்பினார். ஆகையால் நாங்களும் இவ்வருஷம் ஆடிமாதம் மலைக்குப் பிரயாணமானோம்.

ஒரு வில் வண்டி வாடகைக்கு அமர்த்திக்கொண்டு நான், என் தங்கை, மாப்பிள்ளை, அம்மா எல்லோரும் புறப்பட்டோம். புறப்படும்பொழுது இரவு சுமார் எட்டு மணி இருக்கும். எங்கும் மையிருள் சூழ்ந்திருந்தது. என்றாலும் வண்டிகள் நூற்றுக் கணக்கில் போய்க் கொண்டிருந்ததால் எங்களுக்குச் சிறிதும் பயமில்லை. அம்மாவுக்கு உடம்பு சௌகரியமில்லை. ஆகையால் கொஞ்ச நேரத்தில் வண்டியிலேயே முடக்கிப் படுத்துக் கொண்டாள். லக்ஷ்மி என்னை 'ஒரு கதை சொல்லண்ணா' என்று தொந்தரவு செய்துகொண்டிருந்தாள். நானும் அவள் தொந்தரவு பொறுக்கமாட்டாமல், "ஆகட்டும்" என்றேன்.

இதற்குள் மாப்பிள்ளை திடீரென்று, "பேய் பிசாசு உண்டென்று நம்புகிறீர்களா?" என்றார்.

நான் அநாயாசமாக, "பேயாவது பிசாசாவது? மனப்பேய்தான் பேய்" என்றேன்.

"ஆனால் என்னைப் பொறுத்தமட்டில் விஷயம் வேறு" என்றார் ராமநாதன்.

"இல்லாமல் என்ன அண்ணா? போன வருஷங்கூட எதிர்த்தாத்து ரங்கத்துக்குக் கறுப்புப் பிடிச்சு, படாத பாடு படுத்தலையோ?" என்றாள் லக்ஷ்மி.

ராமநாதனை நோக்கி, "நீங்கள் பேய் உண்டென்று நம்புகிறீர்களா என்ன?" என்றேன்.

"நானும் சென்ற வருஷம் குற்றாலம் போகும் வரையில் பேயாவது மண்ணாங்கட்டியாவது என்றுதான் இருந்தேன். ஆனால் அங்கு நடந்த ஒரு சம்பவம் என் அபிப்பிராயத்தை மாற்றிவிட்டது" என்றார்.

"என்ன சம்பவம்? சொல்லுங்களேன் கேட்போம்" என்றேன்.

"மிக்க பயங்கர சம்பவம்; சொல்வதற்குக்கூடப் பயமாக இருக்கிறது" என்ற பீடிகையுடன் ஆரம்பித்தார்.

சென்ற வருஷம் ஊரில் எனக்குத் தொழிலே சரியாய் நடக்கவில்லை. என்னடா செய்வது என்று நான் மிகவும் கவலையுடன் இருக்கும்பொழுது குற்றாலத்தில் சாரல் ஆரம்பித்தது. எனக்கு உடனே ஒரு யோசனை தோன்றியது. குற்றாலத்தில் அநேக பிரபுக்கள் வந்திருப்பார்கள். அங்கே சென்றால் ஏதாவது தொழில் நடக்கும். மேலும் மந்தமாருதத் தென்றற் காற்றையும் அநுபவித்தாற்போல இருக்கும் என நினைத்துக் குற்றாலத்திற்குப் பிரயாணமானேன். அங்கே சென்று பார்த்த

பொழுது இருப்பதற்கு ஜாகை எங்கும் கிடைக்கவில்லை. நான் குற்றாலம் முழுவதும் சுற்றி அலேந்தேன். ஆனால் பிரயோஜனமில்லே. கடைசியில் நான் வாடகை வீடு தேடிக் கொண்டிருப்பதைக் கண்ட ஒரு குள்ள மனிதன் என்னை நோக்கி வந்தான்.

"ஸார்! ஓர் அழகான வீடு இருக்கிறது. சொற்ப வாடகைதான். உங்களுக்கு வேண்டுமா?" என்றான்.

நான் மிகவும் சந்தோஷத்துடன், "அதற்காகத் தான் அப்பா இவ்வளவு நேரமாய் அலைகிறேன்" என்றேன்.

குள்ளன் வேறொன்றும் பேசாமல் என் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வெகு வேகமாகச் சென்றான். கடைசியில் ஒரு வீட்டின் வாசலை அடைந்ததும், சற்று நேரம் தயங்கி நின்றுகொண்டிருந்தான். பின்னும் தனக்குள்ளேயே 'கிடைக்கும்' என்று சொல்லிக் கொண்டு உள்ளே நுழைந்தான். நானும் அவன் பின்னால் சென்றேன். நாற்காலியில் ஒரு கிழவனார் உட்கார்ந்து பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்தார்.

"ஐயா! நமஸ்காரம்" என்றேன்.

அவர் என்னை ஏற இறங்க ஒருமுறை பார்த்தார். "என்ன சங்கதி? எங்கு வந்தீர்?" என்று கேட்பது போல இருந்தது அவருடைய பார்வை. இதற்குள் என்னைக் கூட்டி வந்த குள்ளன், "ஐயா வீட்டுக்காக வந்திருக்காக" என்றான்.

"நம்மிடத்தில் வீடு காலியில்லையே" என்றார் கிழவனார்.

என் சந்தோஷத்தில் மண் விழுந்தது.

"அருவிக் கரையோரத்து வீடு?" என்றான் குள்ளன்.

உடனே கிழவனார் குள்ளனையும் என்னையும் ஆச்சரியத்துடன் பார்த்து, "அதுதான் இருக்கிறதே!" என்றார்.

"அதைத்தான் ஐயா கேட்கிறார்" என்றான் குள்ளன்.

மீண்டும் என்னைக் கிழவனார் மிகுந்த ஆச்சரியத்துடன் நோக்கினார். பின்பு வீட்டைக் காண்பிப்பதற்குத் திறவுகோலை எடுத்துக்கொண்டு வந்தார். அது உண்மையிலேயே வெகு அழகான வீடாய்த்தான் இருந்தது. ஆனால் அதைத் திறந்து வெகு நாட்களானதுபோல் தோன்றியது. கிழவனார் வீட்டைச் சுத்தம் செய்துகொடுப்பதாகச் சொன்னார்.

"என்ன வாடகை?" என்றேன்.

"என்ன கொடுப்பீர்கள்? நீங்கள்தான் சொல்லுங்களேன்" என்றார்.

"எங்களூரிலெல்லாம் இம்மாதிரி வீட்டிற்குப் பத்து ரூபாய் கொடுப்போம்" என்றேன்.

"சரி, அப்படியே கொடுங்கள்" என்றார்.

என் ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. குற்றாலத்தில் ஐம்பது ரூபாய் கொடுத்தாலும் அம்மாதிரி வீடு கிடைக்காது. அறுபதுக்குமேல் கிறுகிறுப்பு என்பார்களே. அப்படி ஏதாவது கிழவனாருக்கு உண்டு போலும் என நினைத்து மிக்க மகிழ்ச்சியுடன் குள்ளனை நோக்கிக் கண்ணைச் சிமிட்டினேன். அவனும் கண் ஜாடை காட்டினான். உடனே நானும் மறு வார்த்தை பேசாமல் ஒப்புக்கொண்டேன். கிழவனார் சாவியை என்னிடம் ஒப்பித்துவிட்டுப் போகும்பொழுது ஓர் அறையைச் சுட்டிக் காட்டி, "அதை மட்டும் திறக்கவேண்டாம்" என்றார்.

வீடு கிடைத்த மகிழ்ச்சியில், அவர் என்ன சொல்கிறார் என்பதையே நான் கவனிக்கவில்லை.

## 3

அவ்வீட்டில் நான் குடியேறி இரண்டு மூன்று நாட்கள் ஆயின. நான் சிறிதுசிறிதாக என் தொழில் வேட்டையை ஆரம்பித்தேன். ஒரு நாள் நான் அருவியில் ஸ்நானம் செய்யச் சென்றேன். செல்லும் வழியில் ஒரு கனவானைச் சிநேகம் பிடித்தேன். என்னுடைய தொழிலே பிறருடைய நட்பையும் அறிமுகத்தையும் பொறுத்த தாகையால், எங்கள் நட்பை வளர்ப்பதற்குரிய வழிகளை நான் தேடிக்கொண் டிருக்கும்பொழுது, அவருக்குத் தமிழ்ப் பைத்தியம் உண்டென்று கண்டேன். உடனே மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகளைப் பற்றி வெகுவாகப் புகழ்ந்து, "வ. வே. சு. ஐயரின் நடையே ஒரு தனி தினுசு. அம்மாதிரி நடையழகு இக்காலத்தில் யாருக்கு வரும்?" என்றேன்.

"நானும் எதிரொலியாள், அமேன் மூக்கே முதலிய இரண்டொரு கதைகள் படித்திருக்கிறேன். ஆனால் அப்புத்தகம் முழுவதும் படித்ததில்லை" என்றார் அக்கனவான்.

"நான் வேண்டுமென்றால் கொடுக்கிறேன்; படித்துப் பாருங்களேன்?" என்றேன்.

பின்பு ஸ்நானம் முடிந்ததும், புத்தகம் கொடுப்பதற்காக அவரை வீட்டிற்கு அழைத்துச் சென்றேன். நான் வீட்டுக் கதவைத் திறந்துகொண் டிருக்கும் பொழுது அவர் திடுக்கிட்டு, "தாங்கள் இவ்வீட்டிலா வசிக்கிறீர்கள்?" என்றார். அவர் முகம் பீதியுற்றிருந்தது.

"ஆம், உள்ளே வாருங்கள்" என்று நான் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே, அவர், "வேஷ்டி ஈரமாய் இருக்கிறது. நான் அப்புறம் வருகிறேன்" என்று சொல்லி நழுவிவிட்டார்.

வலையில் அகப்பட்ட பக்ஷி தப்பித்துக்கொண்டதே என்று நான் மிகவும் வருந்தினேன்.

பின்பு அவர் என் வீட்டிற்கு வரவே இல்லை.

## 4

"ஸார்! சீட்டு விளையாடலாம் வருகிறீர்களா?" என்றார் எதிர்வீட்டு நண்பர் ஒருவர்.

"அதற்கென்ன, விளையாடலாம். நம்ம வீட்டிற்கு வாருங்களேன்?" என்றேன்.

"பரவாயில்லை. இங்கேயே வாருங்கள். இதர நண்பர்களும் இருக்கிறார்கள்" என்றார்.

சீட்டாட்டம் என் தொழிலுக்கு உதவி புரியும் உபகரணங்களில் ஒன்று. ஆகையால் நான் வேறு ஒன்றும் ஆக்ஷேபம் சொல்லாமல் சென்றேன். என்னைக் கண்டதும் சீட்டுக் கோஷ்டியாருள் ஒருவர் திடுக்கிட்டு, "நம்ம எதிர்த்த வீட்டு நண்பரையா கூப்பிட்டீர்கள்? சரி, பரவாயில்லை. எனக்கு அப்பொழுதே பிடித்துத் தலை வலித்துக்கொண்டிருக்கிறது. நீங்கள் விளையாடுங்கள்" என்று எழுந்து போய்விட்டார். "மூன்று பேர்களுக்குள் என்ன ஆட்டம் போடுவது?" என்று மற்ற இருவரும் எழுந்து போய்விட்டார்கள்.

அவர்களுடைய நடத்தையைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன். என்னை அவர்கள் ஒரு தீண்டாதான் எனக் கருதியதுபோலத் தோன்றியது. அவர்கள்

மட்டுமல்ல, இதர ஜனங்களும் என்னைப் புறக்கணித்தார்கள். நான் வலியச் சென்று பேசினாலும் சிலர் பேச மறுத்தார்கள். என்னை யாவரும் சமுசயப் பார்வையுடன் நோக்கினார்கள். ஜனங்கள் என் விஷயத்தில் நடந்து கொண்ட மாதிரி புதுமையாகத் தோன்றியது. நான் வாடகைக்குக் கேட்டபொழுது, கிழவனார் என்னை ஆச்சரியத்துடன் நோக்கியது, மிகக் குறைந்த வாடகைக்கு அவ்வீட்டை எனக்கு விட்டது, அதில் ஓர் அறையைத் திறக்கக்கூடாது என் என்னை எச்சரித்தது, காலையில் கனவான் வீட்டிற்குள் வர மறுத்தது, இப்பொழுது சீட்டுக் கோஷ்டியார் என்னைப் புறக்கணித்தது - எல்லாவற்றையும் யோசித்துப் பார்க்கையில், அவ்வீட்டில் ஏதாவது விசேஷம் இருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றிற்று. ஆகையால் அதன் மர்மத்தை அநேகரிடம் விசாரித்துப் பார்த்தேன். ஒருவரும் ரகசியத்தைச் சொல்ல முன்வரவில்லை. இறுதியில் ஒருவர் பின்வரும் கதையைச் சொன்னார் :

இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் அந்த வீட்டில் ஒரு முதலியார் வந்து குடியேறியிருந்தார். அமாவாசை இரவு. 'கும்' என்ற இருள் எங்கும் சூழ்ந்திருந்தது. சுமார் பத்து மணி இருக்கும். வெளியில் சாரல் பெய்து கொண்டிருந்தது. அச்சமயம் ஒரு வைர வியாபாரி இருப்பதற்கு இடம் எங்கும் கிடைக்காமல், தெருக்களில் அலைந்துகொண்டே இருந்தார். கடைசியில் அவ் வீட்டுக்கு வந்ததும், அன்றிரவு அங்கேயே தங்கி இருந்துவிட்டுக் காலையில் வேறு இடம் பார்க்கலாம் என்று நினைத்துக் கதவைத் தட்டினார். கதவு திறந்தது. முதலியார் வெளியே வந்தார். வைர வியாபாரி நனைந்து கஷ்டப் படுவதைக் கண்டு முதலியார் மனமிரங்கி

அவரை உள்ளே அழைத்துச் சென்று கொஞ்சம் சூடான பால் அவருக்குச் சாப்பிடக் கொடுத்தார். வியாபாரி பாலை அருந்திவிட்டுச் சற்று உட்கார்ந்து வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தார்.

முதலியார் அவரிடம் வந்து, "செட்டியாரையா, நான் ஒரு ஜதை வைரக் கடுக்கன் கட்டவேண்டும். தங்களிடத்தில் நல்ல கற்கள் இருந்தால் கொஞ்சம் காட்டுங்களேன்" என்றார்.

"அதற்கென்ன, பாருங்கள்" என்று சொல்லிச் செட்டியார் தம்மிடத்திலுள்ள வைரப் பட்டைகளை எல்லாம் எடுத்துக் காட்டினர்.

அவைகளைப் பார்த்தவுடன் முதலியார் கண்களில் பேராசை ஒளி பிரகாசித்தது. பின்னர், "செட்டியாரையா, உங்களுக்கு அதிகக் கஷ்டம் கொடுத்துவிட்டேன். வைரத்தின் பாகுபாடெல்லாம் பகலில் பார்த்தால்தான் தெரியும்.' இப்பொழுது எடுத்து வையுங்கள். படுக்கப் போகலாம்" என்றார்.

செட்டியார் அறையில் படுத்துக்கொண்டார். முதலியார் முற்றத்தில் படுத்துக்கொண்டார்.

மறுநாள் காலையில் அருவிக் கரையில் ஒரு பிணம் கிடந்தது. பிரேத விசாரணை செய்தோர், 'அருவியில் விழுந்து மரணம்' என்று குறித்துக்கொண்டு போய் விட்டார்கள்.

அன்றைத் தினத்திலிருந்து முதலியார் நாளுக்கு நாள் உடம்பு மெலிந்தார். அவருடைய முகத்தில் அச்சக் குறிகள் தோன்றின. அநேக தடவைகள் நடு ராத்திரியில் எழுந்து கொண்டு, "பேய்! பேய்!" என்று கத்தி வீட்டைத் திறந்துகொண்டு ஓடுவார். அவருடைய செய்கையைக் கண்டு ஜனங்கள் அதிசயித்தார்கள். கடைசியில் ஒரு நாள்



17117 அடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

காலை அவர் வீடு திறக்கப்படவில்லை. மத்தியான்னம் வெகு நேரம் வரை வீடு மூடப்பட்டிருந்தது. ஜனங்களுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. வீட்டுக் கதவைத் தட்டினார்கள். ஒரு பதிலும் இல்லை. கடைசியில் போலீஸார் வந்து கதவை உடைத்து உள்ளே சென்றார்கள். முதலியார் படுத்த படுக்கையிலேயே இறந்து கிடந்தார்! முகம் ஒரு புறமாக வலித்துக் கொண்டு பார்க்கப் பயங்கரமாய் இருந்தது. கால்கைகள் எல்லாம் சுளித்துக்கொண்டிருந்தன. மின்சார சக்தி பாய்ந்து இறந்தவனைப்போல் தோன்றியது.

அதிலிருந்து அவ்வீட்டிற்கு ஒருவரும் குடி வருவதில்லை. நான் செல்லும் வரை அது அடைக்கப் பட்டே இருந்தது.

நான் பேய் பிசாசுகளில் நம்பிக்கை இல்லாதவன். என்றாலும் அந்தக் கதையைக் கேட்டபின் தனியே அவ்வீட்டில் இருப்பதற்குப் பயமாகத்தான் இருந்தது. ஆனால் அதற்காக அவ்வீட்டை விட்டுச் செல்வது கோழைத்தனம் என நினைத்தேன். ஆகையால் ஒரு சமையற்காரனை வைத்து, வீட்டிலேயே சமைத்துச் சாப் பிடுவதெனத் தீர்மானித்தேன். எங்கும் சமையற்காரன் அகப்படவில்லை. ஒன்றிரண்டுபேர் அகப்பட்டவர்களும், நான் அவ்வீட்டில் இருக்கிறேன் என்று அறிந்தவுடன் என்னிடம் வேலைசெய்ய மறுத்துப் போய்விட்டார்கள். கடைசியில் கிராமப் புறத்து வாலிபன் ஒருவன், அவ்வீட்டின் மர்மம் தெரியாதவன் அகப்பட்டான். நான் சாதாரணச் சம்பளத்திற்கு இரண்டு மூன்று ரூபாய் அதிகமாகத் தருவதாகச் சொல்லவே, அவன் வெகு சந்தோஷத்துடன் சம்மதித்தான். அவன் பார்வைக்கு நல்ல திடகாத்திரமான வாலிபனாகத்

தோன்றினான். உடனே அவனை வீட்டிற்கு அழைத்துச் சென்று, வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்யச் சொல்லி விட்டு, நான் அவனுக்கு வேண்டிய சாமான்களெல்லாம் வாங்கிக் கொண்டுபோய்க் கொடுத்தேன். சாமான்களை எல்லாம் அவன் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, "நீங்கள் சுக்கு வாங்கிக்கொண்டு வரவில்லை போலிருக்கே" என்றான்.

"இல்லை" என்றேன்.

"வீட்டில் சுக்கு இல்லாமல் இருக்கக்கூடாது. வாய்வுக்குத்து, வயித்துவலி, எதுக்குமே அது கைகண்ட மருந்து. திடீரென்று வாயிலே, வவுத்துலே வந்திருச்சுண்ணு, அது கைவசம் இருந்து தீரணும்" என்றான்.

நான் அவன் சொல்வதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

அன்றிரவு போஜனம் முடிந்ததும் நாங்கள் படுக்கச் சென்றோம்.

சமையற்காரன் அந்த அறைக் கதவைத் திறந்து, "நான் இதில் படுத்துக்கொள்கிறேன்" என்றான்.

எனக்கு என்ன பதில் சொல்வதென்று தெரிய வில்லை. "ஏன், நீ என்னோடு படுத்துக்கொள்ளேன்" என்றேன்.

"இல்லை, நான் இவ்வறையில் படுத்துக்கொள் கிறேன். பயம் ஒன்றுமில்லை" என்றான்.

நான் அதுவரையும் அவ்வறையைத் திறந்ததே இல்லை. கிழவனார் எச்சரிக்கைக்காக அல்ல. என்றாலும் அதைத் திறக்கவேண்டிய அவசியமே எனக்கு ஏற்பட வில்லை. அவனுக்கு அவ்வறையைப் பற்றிய மர்மங்கள் ஒன்றும் தெரியாமல் இருப்பதே நலம் என நினைத்து, நான் வேறு ஆக்ஷேபம் ஒன்றும் சொல்லாமல் இருந்து

விட்டேன். அவன் உள்ளே சென்று கதவைத் தாழிட்டுப் படுத்துக்கொண்டான்.

நானும் முற்றத்தில் படுத்துக்கொண்டேன். சுமார் அரைமணி நேரம் சென்றிருக்கும். அறைக் கதவு திறக்கும் சப்தம் கேட்டது. என்னுடைய ஹிருதயம் 'தக், தக்' என்று அடித்துக்கொண்டது. அறையினின்றும் ஓர் உருவம் வெளியே வந்தது. நான் போர்வையை இழுத்து மூடிக்கொண்டேன்.

"நீங்கள் சுக்கு அப்புறம் வாங்கிக்கொண்டு வரவில்லையா?" என்று சப்தம் எழுந்தது. அது சமையற்காரனுடைய குரல்தான். எனக்குத் தைரியம் பிறந்தது.

"இல்லை" என்றேன்.

சமையற்காரன் சிறிது அதிருப்தியுடன் "ச்சு" என்றான்.

கதவு மீண்டும் தாழிடப்பட்டது. சமையற்காரன் படுக்கும் சப்தம் கேட்டது. நான் தூங்கிவிட்டேன்.

காலையில் துயிலெழுந்தேன். அறைக்கதவு இன்னும் சாத்தப்பட்டிருந்தது. முதல் நாள் வேலைக் களைப்பினால், சமையற்காரன் அயர்ந்து தூங்குகிறான் போலும் என நினைத்து, நான் அருவிக்கு ஸ்நானம் செய்யச் சென்றேன். ஸ்நானம் முடித்துக்கொண்டு திரும்பிவந்து பார்த்த பொழுது அறைக்கதவு இன்னும் சாத்தப்பட்டிருந்தது. எனக்குச் சந்தேகம் ஒரு புறம், பயம் ஒரு புறம். உடனே போலீசுக்கு ரிப்போர்ட் செய்தேன். சப் இன்ஸ்பெக்டரும் சில போலீசார்களும் வந்துசேர்ந்தார்கள். அறைக் கதவு உடைக்கப்பட்டது. உள்ளே சென்று பார்த்தோம். சமையற்காரன் படுக்கையில் பிணமாய்க் கிடந்தான்! கொடிய வேதனையால் இறந்தவன்போல் அவனுடைய

முகம் விகாரம் அடைந்திருந்தது. பார்த்தோர் அனைவரும் பயந்து நடுங்கிவிட்டார்கள்.

இவ்விடத்தில் லக்ஷ்மி, "ஆ!" என்று அலறி என்னைச் சேர்த்துக் கட்டிப் பிடித்துக்கொண்டாள்.

"அப்புறம்?" என்றேன் நான்.

"அப்புறம் என்ன? உடனே வீட்டைக் காலி பண்ணிவிட்டு, அன்று மத்தியான்ன ரெயிலிலேயே ஊர் வந்து சேர்ந்தேன். இப்பொழுது என்ன சொல்கிறீர்? பேய் உண்டென்று நம்புகிறீர்களா?"

"முதலியார் சாவுக்கும், சமையற்காரன் சாவுக்கும் வேறு காரணங்களும் சொல்லலாம் அல்லவா?" என்றேன் நான்.

"என்ன காரணம்? சொல்லுங்களேன் பார்ப்போம்."

"முதலியார் சாவுக்குக் காரணம் வெறும் பயந்தான். தன் வினை தன்னைச் சுடும். வைர வியாபாரியைக் கொன்றது அவரே ஆதலால், தான் கொலைகாரன் என்ற எண்ணமே அவரைக் கொன்றது. அது மனப் பேயே ஒழிய, மனிதப் பேயல்ல. சமையற்காரன் இறந்ததற்குக் காரணம் வேறு. அவன் சுக்கு வாங்கிக்கொண்டு வரச் சொல்லி மீண்டும் மீண்டும் வற்புறுத்தியதிலிருந்து, அவன் வாய்வுக்குத்து வியாதிக்காரன் என்று நாம் ஊகிக்க இடமுண்டு. மேலும் அவன் கொடிய வேதனையால் இறந்ததுபோல் சொன்னீர்கள். அதிலிருந்தும் அவன் வாய்வுக் குத்தினால்தான் இறந்திருக்க வேண்டும் என்று நான் எண்ணுகிறேன்" என்றேன்.

- 5 -

# யோகாஸனம்

## 1

ஐயா! வாசகரே! அப்படி ஒன்றும் இதைப் புறக்கணித்துவிட்டுப் போகவேண்டாம். நான் உங்களுக்கு யோக ரகஸ்யங்களைப் போதிப்பதற்காக வரவில்லை. கொஞ்சம் இதைப் படித்துப் பாருங்கள்.

தற்காலத்தில் தமிழ்நாட்டிலுள்ள சில பத்திரிகைகளில் தோன்றும் யோகாஸனக் கட்டுரைகளைப் படித்ததும், எனக்கும் பெரும் பீதி ஏற்பட்டுவிட்டது. 'ஏதடா இது! பத்திரிகைகளெல்லாம். தமிழர்கள் அனைவரையும் யோகிகள் ஆக்கியே தீர்வது என முனைந்து நிற்கின்றன; நாம் கர்நாடக மனுஷனைப்போல் அவைகளால் பாதிக்கப்படாமல் இருக்கிறோமே' என்று நினைக்க ஆரம்பித்தேன். பிறர் என்னைப் பிற்போக்காளனாகக் கருதுவது எனக்குச் சிறிதேனும் பிடிக்காது. யோகிகள் மலிந்த எதிர்காலத் தமிழ்நாட்டில் என்னுடைய இடம் எங்கிருக்கும் என்று நான் யோசித்துப் பார்த்தபொழுது என் மூக்கில் இரண்டு துளி நீர்கூட வந்துவிட்டது. (மூக்கால் அழுவது அப்படித்தானே!) அதனுடன் 'ஒப்புரவொழுகு', 'உலகத்தோடு ஒத்து வாழ்' என்னும் ஒளவையாரின் நீதி வாக்கியங்களும் ஞாபகத்திற்கு வரவே, 'இந்தத் தலைகீழ் நிற்கும் வித்தையை நாமுந்தான் கொஞ்சம்

கற்றுக் கொள்வோமே' என்று தீர்மானித்தேன் யோகிகளும், தபஸ்விகளும், முனிவர்களும், ரிஷிகளும் தங்கள் கரைகளில் தவஞ்செய்யும் பெருமையைக் கங்கையும் யமுனையுமே இதுவரை அநுபவித்துவந்தன. ஆனால் இப்பொழுது அந்தப் 'பெருமையை நமது காவிரியும், தாம்பிரபர்ணியுங்கூட அடையப்போகின்றன என்பதை நினைத்தவுடனே' என் மேனி புளகாங்கிதம் அடைந்தது.

பின்பு ஒரு சுபயோக சுபதினத்தில் நல்ல நேரமாகப் பார்த்து, இதுவரை யோகாஸனங்களைப்பற்றி வெளிவந்த கட்டுரைகளை எல்லாம் விரித்து வைத்துக்கொண்டு, சாய்வு நாற்காலியில் படுத்தவண்ணம் ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தேன்: நான் என் யோகாப்பியாசத்தைப்பற்றி நினைக்கும் போதெல்லாம், என் மனத்தில் பற்பல எண்ணங்கள் தோன்றும். முதலில் நான் யோகாஸனங்கள் கற்பது, பின்பு ஹடயோகியாவது, பின்னர் ராஜயோகி, பின்பு ஹைஸ்கூலிலும் கல்லூரிகளிலும் யோகாஸனத்தைப்பற்றி என் பிரசங்கங்கள், பத்திரிகாசியர்களெல்லாம் என்னைக் கட்டுரை எழுதுமாறு வேண்டிக்கொள்வது, தேசம் முழுவதும் என் கீர்த்தி பரவுவது, இத்யாதி, இத்யாதி. பின்னர் நான் இவ்வற்பக் கீர்த்தியையும் புகழையும் வெறுத்துத் தள்ளுவது, வீட்டை வெறுப்பது, வாசலை வெறுப்பது, சொத்தைத் துறப்பது, சுகத்தைத் துறப்பது, பரமஹம்ஸராவது, பால் நிலவில் என் அரண்மனையை விட்டு வெளியேற யத்தனிப்பது, மனைவி யசோதரையையும், குழந்தை ராகுலனையும் கடைசி முறை பார்த்துவிட்டு வரலாமென்று அந்தப்புரம் செல்லுதல் - இத்தகைய இன்பக் கனவுக் கண்டுகொண்டு, கற்பனை லோகத்தின்

உச்சியில் சஞ்சரித்துக்கொண்டிருக்கையில் என் மனைவி வீராயி வந்து, "விடியும்போதே இந்தப் பாழும் பத்திரிகையிலா விடியவேண்டும்? நாட்டாண்மைக்காரர் நேற்று உங்களைத் தேடிவிட்டுப் போனாரே. அந்த ஜட்ஜ்மெண்டைத் தமிழ்ப்படுத்திக் கொடுத்தாலும், நாலு காசு கிடைக்குமே. எழுந்திருந்து போங்கள்" என்றாள்.

என் மகன் மாடசாமி வந்து, "அப்பா, நாளைக்குக் கோட்டைக்குப் போனால் எனக்குப் பொரிகடலை வாங்கிக்கொண்டு வரமாட்டாயா?" என்று கேட்டான்.

## 2

ஆராய்ச்சிக் கட்டம் முடிந்தவுடன் அப்பியாசக் கட்டத்தில் இறங்கினேன். யோகாப்பியாசத்துக்கு வேண்டிய சாதனங்களெல்லாம் தயார் செய்ய ஆரம்பித்தேன். முதலில் ஒரு லங்கோடு தைத்துக் கொண்டேன். பின்பு ஒரு கமண்டலமும் தயார் செய்து கொண்டேன். 'டிஞ்சர் அயடின்' பாட்டில் ஒன்று வாங்க வேண்டுமென்று ஒரு யோசனை தோன்றியது. ஆனால் பின்னால் அந்த யோசனை நிராகரிக்கப்பட்டது. சிரசாஸனமும் மயூராஸனமும் பழகும்போது அதை வாங்கிக்கொள்ளலாம் எனத் தீர்மானித்தேன்.

ஒரு நாள் நான் லங்கோட்டைக் கட்டிக்கொண்டு, எனது யோகாப்பியாசத்தை ஆரம்பிப்பதற்குச் சித்தமாயிருக்கும்பொழுது என் மனைவி சாக்ஷாத் வீராயி அம்மாள் என் முன்பு பிரசன்னமானாள். "நாலு பிள்ளை குட்டி இருக்கிற இடத்தில், அபசகுனமா லங்கோட்டைக் கட்டிக்கொண்டு நிக்கிறீங்களே" என்றாள். அச்சமயம் என் நண்பன் சோமு முதலியும் வந்துசேர்ந்தான். என்

வீட்டில் உப்புமாப் பண்ணும்போதெல்லாம் சோமு முதலிக்கு எப்படியோ மூக்கில் வியர்த்துவிடும். ஏதாவது சாக்குச் சொல்லிக்கொண்டு வந்துவிடுவான். அவனைக் கண்டதும் என் மனைவி, "இலையில் பழையது போட்டு எவ்வளவு நேரமாகிறது? நான் எந்நேரம் வரைக்கும் காத்துக்கொண்டிருப்பது? வாருங்கள்" என்று சொன்னாள்.

நானோ சோமு முதலி வந்திருப்பதையும் கவனியாமல் பதுமாஸனம் போட ஆரம்பித்தேன். என் முழங்கால் தரையில் படவேமாட்டேன் என்றது. அதை ஒரு கையால் அழுத்தி அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தேன்.

"இது ஏனடா உனக்கு இந்தத் தொல்லை! இத்தனை வயசுக்கு மேலே உடம்பு வளையுமா? கலியுகத்தில் எங்காவது அஷ்டாங்க யோகம் சித்திக்கக் கேள்விப்பட்டிருக்கிறோமா?" என்று சோமு முதலி பிரசங்கம் செய்ய ஆரம்பித்துவிட்டான்.

உங்களுக்கு உள் அந்தரங்கத்தைச் சொல்லி விடுகிறேன். சோமு முதலியின் வயிறு வண்ணான் சால் போல் இருக்கும். குன்றக்குடிக்குக் காவடி எடுத்தாலும், அவனுக்கு யோகாஸனம் வராது. நான் யோகீசுவரனாகி விட்டால் எனக்குச் சிஷ்யனாகும் யோக்கியதை கூடத் தனக்கு இராதே என்று என்மேல் அவனுக்குப் பொறாமை.

ஆனால் நானா இதில் எல்லாம் ஏமாறுகிறவன்? என் யோகாப்பியாசத்தை விடாமுயற்சியுடன் பயின்றேன். பதுமாஸனம், சித்தாஸனம், ஹலாஸனம், தனுராஸனம், சர்வாங்காஸனம், பச்சிமோத்தானாஸனம், உட்டியாணம், நௌலி முதலியவைகளை ஒருமட்டாகப் பழகிவிட்டேன். ஆனால் அந்தப் பாழும் சிரசாஸனமும் மயூராஸனமும்

ஆண்டவன் என் தலையில் எழுதவில்லைபோலும்! நான் சிரசாஸனம் பழகும்போது, முதலில் கதவை அடைத்துக் கொண்டு, என் மனைவியை உதவிக்குப் பக்கத்தில் வைத்துக்கொள்வேன். என் மகனுங்கூட 'டிஞ்சர் அயடின்' முதலிய மருந்து வகையராக்களுடன் பக்கத்தில் நின்றுகொண்டிருப்பான். என்னுடைய யோகாப்பியாசத்திற்கு இத்தனை உதவி புரியக்கூடிய என் மனைவியையும் மக்களையும் பின்னால் ஒரு நாள் தனியே தவிக்கவிட்டு, நான் காட்டுக்குத் தவம் செய்யப்போகிறேன் என்பதை நினைக்கும்போது எனக்கே மிகப் பரிதாபமாயிருக்கும்.

கூடிய சீக்கிரத்தில் என் மனைவியின் உதவியால் ஒரு பிரயோஜனமுமில்லை என்று அறிந்தேன். அவளால் ஒரு தடவையாவது என் கால்களைப் பிடித்து நேரே நிறுத்த முடிவதில்லை. ஆகையால் என் மனைவியை நம்புவதைவிட ஒரு காரைச் சுவரை நம்பினாலும் புண்ணியமுண்டு என்று நினைத்துச் சுவரையே ஆதரவாக வைத்துப் பழக ஆரம்பித்தேன். வெகு சீக்கிரத்தில் அதுவும் பிரயோஜனமில்லை என்று அறிந்தேன். ஏனென்றால் என் கால்கள் சுவரில் போய் விழுவதற்கு முன்பே, இடது பக்கமோ, வலது பக்கமோ சாய்ந்து, நான் 'பொத்' என்று விழுவேன். அத்தனை தடவைகள் விழுந்தும், என் கால் எலும்புகள் ஒடியவில்லையென்றால் அது ஈசுவரக் கிருபை என்றுதான் சொல்லவேண்டும். 'கடவுள் கருணாநிதி, கருணைக் கடல், கருணை வெள்ளம்' என்று பக்தர்கள் சொல்வதை இப்பொழுதாவது நீங்கள் நம்புகிறீர்களா?

என் சிரசாஸனப் பயிற்சியால் நான் ஒரு சிறந்த உண்மையை உணர்ந்தேன். 'இவ்வுடல் மண்ணால் ஆனது; மீண்டும் அது மண்ணையே சேரும்' என்பதைச்

சிரசாஸனம் எனக்கு நிமிஷந்தோறும் நினைவுறுத்தியது. என் மகனும் அதனால் ஒரு பாடம் கற்றுக்கொண்டதாகச் சொன்னான். "அப்பா, பூமிக்கு ஆகர்ஷண சக்தி உண்டென்பதை நீ எவ்வளவு தெளிவாக விளக்கிக் காட்டுகிறாய்! நேற்று எங்கள் உபாத்தியாயர் அந்தப் பாடத்தை எத்தனையோ பரிசோதனைகளுடனும், உதாரணங்களுடனுந்தான் சொல்லிக் கொடுத்தார். ஆனால் என் மூளையில் அது ஏறவே இல்லை" என்றான்.

யோகாஸனப் பயிற்சியால் நான் அடைந்த நன்மை என்னவென்று கேட்கிறீர்கள்? ஐயோ! அந்தக் கண்ணராவியைத்தான் ஐயா, இப்பொழுது சொல்ல வருகிறேன். ஒவ்வோர் ஆஸனமும் எனக்கு ஒரு வரப்பிரசாதத்தைக் கொடுத்தது. ஹலாஸனத்தினால் முதுகெலும்பு வலி; சர்வாங்காஸனத்தினால் தொண்டை வலி, கழுத்து வலி; உட்டியாணம், நௌலி இவைகளினால் வயிற்று வலி, வயிற்றோட்டம்! எனக்கு இத்தனை வியாதிகள்கூடப் பெரிதாகத் தோன்றவில்லை. ஆனால் என் மனைவிக்கு என்ன பதில் சொல்லுவது? சோமு முதலி என்னை ஏளனம் செய்வானே, அவன் முகத்தில் நான் எங்ஙனம் விழிப்பது? இவ்வாறெல்லாம் நான் நினைத்துக்கொண்டிருக்கும்போது, சாக்ஷாத் சோமு முதலியே வந்துவிட்டான்!

"ஏனடா, நான் அன்றைக்கே சொன்னேனே, கேட்டாயா? இந்த யோகாஸனம் எல்லாம் நமக்கு வேண்டாம். இக்கலியுகத்தில் யோக வித்தையைப் பூரணமாகக் கற்றறிந்தவர் ஒருவருமே இல்லை என்று என்னவெல்லாமோ சொல்லிப் பார்த்தேன்; உன் காதில் ஏறவில்லை. இப்பொழுது இத்தனை

ரோகங்களுக்கும் அதிபதி யாகிவிட்டாயே; என்ன செய்யப்போகிறாய்?" என்று கேட்டான்.

நான் ஒன்றும் பதில் சொல்லத் தெரியாமல் பரக்கப் பரக்க விழித்தேன். சோமு முதலி உண்மையிலேயே நல்ல மனுஷன். கேள்வியைக் கேட்டுவிட்டுப் பதிலையும் அவனே சொல்லிவிட்டான். "நான் சொல்லுகிறேன், கேள்: ஏதோ ஆரம்பித்தது ஆரம்பித்து விட்டாய். யோகாப்பியாசத்தினால் வந்த நோயை, யோகாப்பியாசத்தினாலேயே தீர்க்கவேண்டும். ஆகையினால் உடனே உதகமண்டலத்துக்குப் புறப்பட்டுப் போ. நேற்றுத்தான் பத்திரிகையில் யோகானந்தர் படமும், அவர் நிறுவியிருக்கும் யோகாசிரமத்தின் படமும் பிரசுரமாகியிருந்தன. அவ்வாசிரமத்திற்குச் சென்று மூன்று நான்கு மாதங்கள் இருந்து, நன்றாய் ஆஸனம் பழகிக் கொண்டு வந்துவிடு" என்றான்.

மறுநாள் காலை வண்டிக்கு நான் உதகமண்டலம் போவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டுப் படுத்துக்கொண்டேன். அன்றிரவு எனக்குத் தூக்கம் ஏது? பல தடவை திடுக்கிட்டு எழுந்து இன்னும் விடியவில்லையா என்று பார்த்தேன். தூங்க ஆரம்பித்தால் யோகாஸனத்தைப்பற்றிய கனவுதான்! சுவாமி யோகானந்தர் என்னைக் கண்டவுடன், தாம் வெகுநாளாய் எதிர்பார்த்த சிஷ்யன் வந்துவிட்டதாக என்னை மலர்ந்த முகத்துடன் வரவேற்கிறார். எனக்கு அவர் யோக ரகஸ்யங்களை அறிவுறுத்துவதாகவும், ராஜ யோகம், பக்தி யோகம், கர்ம யோகம், ஞானயோகம் முதலியவை எனக்குச் சித்திப்பதாகவும், அதன்பின் நான் அமெரிக்கப் பிரயாணம் செய்வதாகவும், சர்வ மத சபையில் பிரசங்கம் செய்வதாகவும் கனாக் கண்டேன்.

பின்பு பாரத தேசம் திரும்புகிறேன். உலகெங்கும் என் புகழ் பரவுகிறது. கடைசியில் நான் இமயமலையிலுள்ள ஒரு குகையில் தவம் செய்கிறேன். அப்பொழுது என் மனைவி வந்து என்னை. "நாதா!" என்று கூப்பிடுகிறாள். "நீ யார்? உன்னை எனக்குத் தெரியாதே!" என்று நான் சொல்லுகிறேன். அவள் மீண்டும், "நாதா! நாதா!" என்று கெஞ்சுகிறாள். நான் ஒரே பிடிவாதமாய் நிஷ்டையில் ஆழ்ந்துவிடுகிறேன். என் மனைவி திடீரென்று என் தோள்களைப் பிடித்துக் குலுக்குகிறாள். நான் திடுக்கிட்டு விழித்தேன் என் தோள்களைப் பிடித்துக் குலுக்கிக்கொண்டு, "எழுந்திருங்கள். மணி ஏழாகிறது. நீங்கள் ரெயிலுக்குப் போகவில்லையா?" என்று என் மனைவி சொல்லிக்கொண்டிருந்தாள்.

எழுந்திருந்து கடிகாரத்தைப் பார்த்தேன். மணி ஏழு! எட்டு மணிக்கு வண்டி புறப்படுகிறது. ஆகையினால் அவசர அவசரமாய்க் காலைக் கடன்களை முடித்து, கோட்டை மாட்டிக்கொண்டு, பொத்தான்கள் கூடப் போடாமல் கிளம்பினேன். வாசற்படி இறங்கினேனோ இல்லையோ, அடுத்த வீட்டுச் செட்டியார் புன்முறுவல் செய்துகொண்டே வந்து, "ஏது, வெகு அவசரம் போலிருக்கு! எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டார்.

இந்தச் செட்டியார் சாதாரணமாய் நல்ல மனுஷர். ஆனால் அவரிடம் இருக்கும் ஒரு கெட்ட வழக்கம் என்னவென்றால், யார் வெளியே புறப்பட்டாலும் சரி, "எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டுவிடுவார். அவருக்கு நான் பல தடவை சொல்லியிருக்கிறேன்: "யாராவது ஒரு காரியமாய்ச் செல்லும்பொழுது, அவரிடம் 'எங்கே போகிறாய்?' என்று கேட்டால், அந்தக் காரியம்

ஜயமாவதில்லை ; ஆகையால் இனிமேல் அம்மா திரி கேளாதீர்" என்று சொல்லியிருக்கிறேன். ஆனால் அதை ஒன்றும் அவர் கவனிப்பதில்லை. அன்று நான் அவரிட மிருந்து தப்ப வேண்டுமே என்று எத்தனையோ சாமிகளை வேண்டியிருந்தேன். ஆனால் எங்கிருந்தோ எனக்குச் சனியன்போலத் தோன்றி, 'எங்கே போகிறீர்?' என்ற வெடிகுண்டையும் போட்டுவிட்டார். எனக்கு வயிற்றெரிச்சல் பொறுக்க முடியவில்லை. "நரகத்திற்குப் போகிறேன். நீங்களும் வருகிறீர்களா?" என்று கேட்டு விட்டேன்.

"சும்மா கேட்டேன், நீங்கள் எங்கே போகிறீர்கள் என்று" என அழுத்தந் திருத்தமாய்ச் செட்டியார் சொன்னார்.

இந்த அசட்டினிடம் என்ன சொல்வது! கடிகாரத்தைப் பார்த்தேன் ; இன்னும் பத்து நிமிஷங்களே இருந்தன. பகவானுடைய நாமத்தை உச்சரித்துக்கொண்டு, பின்னங்கால் பிடரியில் படும்படி விழுந்தடித்து ஓடினேன். ஸ்டேஷனையடைந்து டிக்கட் வாங்கிக்கொண்டு பிளாட்பாரத்துக்குள் நுழைந்தேன். வண்டி கிளம்பிவிட்டது! நான் ஓட ரெயில் ஓட, கடைசியில் வண்டியைப் பிடித்து ஏறி ஒருவாறாக உள்ளே சென்றேன்.

இத்தனை இடையூறுகளுக்கு அப்புறம் நான் ஒருவாறாக உதகை போய்ச் சேர்ந்தேன். ரெயிலை விட்டு இறங்கியதும், "யோகாசிரமம் எங்கிருக்கிறது?" என்று டிக்கட் கலெக்டரையே கேட்டேன். என் தைரியத்தைப் பாருங்களேன்! அவர் "தெரியாது" என்று சொல்லி விட்டார். பின்பு யோகானந்தரையும், யோகாசிர மத்தையும் தேடி ஊர் முழுவதும் அலைந்தேன். எங்கும்

அகப்படவில்லை. யோகானந்தரும் யோகாசிரமமும் உதகையில் இல்லை என்பதைத் தெரிந்துகொள்ளவே இவ்வளவு, அவசரப்பட்டேன் போலும்! யோக வித்தையைக் கற்பதற்குமுன் வீடுதிரும்புவதில்லை என்று தீர்மானம் செய்துகொண்டேன்.

சுவாமி சிகிச்சானந்தர் என்பவர், பம்பாயில் யோக சிகிச்சாசிரமம் ஒன்று வைத்திருப்பதாக நான் முன்னமேயே கேள்விப்பட்டிருந்தேன். அங்கே செல்லலாம் என்று புறப்பட்டேன்.

## 3

யோக சிகிச்சாசிரமத்தின் அதிசயங்களை நான் என்னென்று சொல்வது! உள்ளே நுழைந்தால், எங்கே பார்த்தாலும் மானிட அங்க அமைப்புப் படங்கள், யோகாஸனங்கள் செய்வதற்கு விதவிதமான கருவிகள், யந்திரங்கள்! சுவாமி சிகிச்சானந்தர் யோகாஸன வித்தையை அக்கு வேறு, ஆணி வேறுகப் பிரித்திருந்தார். பாருங்களேன்; ஆஸனங்கள் மட்டும் கற்றுக் கொடுப்பதற்கு மாதம் மூன்று ரூபாய்; பிராணு யாமத்திற்கு மாதம் ஐந்து ரூபாய்; இரண்டும் சேர்ந்து கற்றுக் கொடுப்பதானுல் மாதம் ஏழு ரூபாய். எப்படிச் சிக்ஷா விகிதம்? யோக வித்தையை ரூபாய், அணு, பைசாவாக மாற்றிய பேர்வழி லேசானவராக இருப்பாரா? இப்படியெல்லாம் நான் யோசனையில் ஆழ்ந்திருந்தேன்.

அப்பொழுது சுவாமிஜியே வந்துவிட்டார். உடனே நான் அவரிடத்தில் என் விருத்தாந்தம் முழுவதும் சொன்னேன். "நாளைக் காலையில் வந்து என்னைப்

பார்" என்று சொல்லிவிட்டுச் சுவாமிஜி போய் விட்டார்.

மறுநாள் காலை சென்றேன்.

"சிரசாஸனம் போடு, பார்ப்போம்" என்றார்.

"அதுதானே எனக்கு வராது" என்றேன்.

"அப்படிச் சொல்லு. அதுதான் காரணம்" என்று அவருடைய சிஷ்யர்களில் ஒருவரை ஒரு யந்திரம் கொண்டுவரும்படி கட்டளையிட்டார். அது வந்தவுடன் அதற்குள் என்னை நிறுத்திப் பூட்டிவிட்டு எல்லோரும் போய்விட்டார்கள். மூச்சு விடுவதற்காக என் முகப்பக்கம் மட்டும் திறக்கப்பட்டிருந்தது. அன்று மாலை ஆறு மணிக்குத்தான் என்னைத் திறந்து விட்டார்கள். அன்றிரவு முழுவதும் நான் பட்ட பாடு ஆண்டவனுக்குத்தான் தெரியும். தலை வலி, கண் குத்து, காது வலி, பல் வலி எல்லாம் பொறுக்க முடியவில்லை. மறுநாள் காலையில் சுவாமிஜியினிடத்தில் போய் முறையிட்டேன். "இன்னும் இரண்டு நாட்களில் எல்லாம் சரியாகிவிடும்" என்று அன்றும் என்னை அந்த யந்திரத்தில் தலை கீழாக நிறுத்திப் பூட்டி வைத்து விட்டார்கள்!

அன்றிரவும் ஒரே வலி. என் பிராணன் போய்விடும் போல் இருந்தது. ஆகையினால் அதை விட்டுத் தப்புவதற்கு ஒரு யோசனை செய்தேன். காலையில் எழுந்ததும் சுவாமிஜியினிடம் சென்று, "சுவாமிஜி, நான் தங்களுக்கு என் நன்றியை எவ்வாறு தெரிவித்துக் கொள்வேன்? என் ரோகங்களெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் விலகிவிட்டன. நான் இன்று ஊர் செல்கிறேன். விடை யளிக்கவேண்டும்" என்று நமஸ்காரம் செய்துகொண்டு நின்றேன்.

"சரி! தாங்கள் போகலாம். ஆனால்..." என்று சொல்லி என் கையில் ஒரு காகிதத்தைக் கொடுத்தார். 'பில்' கொடுக்கும் உரிமையைச் சர்க்கார் இங்கிலீஷ் டாக்டர்களுக்குத்தான் கொடுத்திருக்கிறார்கள் என்று நான் நினைத்துக்கொண்டிருந்தேன். யோகீசுவரர்களும் அந்த லைசென்ஸைப் பெற்றிருக்கிறார்கள் என்று அப்பொழுதுதான் எனக்குத் தெரியவந்தது. இரண்டாம் வார்த்தை பேசாமல் இருபத்தைந்து ரூபாயை எண்ணி மேஜையின்மீது வைத்தேன்.

"ஏய் டைபிஸ்ட்! ஒரு சர்டிபிகேட்டு டைப் செய்து கொண்டு வா" என்று சுவாமிஜி கட்டளையிட்டார்.

ஐந்து நிமிஷங்களில் அதுவும் வந்து சேர்ந்தது. அதில் என் ரோகங்களின் விவரமும், அவை யோக சிகிச்சையினால் இரண்டே நாட்களில் குணமான விந்தையும் எழுதப்பட்டிருந்தன. 'பிள்ளையார் பிடிக்கப் போய் அது பூதமான கதைபோலிருக்கிறதே' என்று நினைத்துக்கொண்டு, அதிலும் கையொப்பமிட்டுக் கொடுத்துவிட்டுத் 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று வெளியே கிளம்பினேன்.

## 4

எனக்கு இன்னும் யோகாஸனத்தின் மீதுள்ள நம்பிக்கை மாத்திரம் போகவில்லை. பத்திரிகைகளுக்கு யோகாஸனக் கட்டுரைகள் எழுதிய யோகீசுவ ரானந்தரின் ஆசிரமம் ஸ்ரீநகரில் இருந்தது. ஆகையால் அவரையும் போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்று தீர்மானித்து ரெயில் ஏறினேன்.

நான் யோகீசுவரானந்தரின் ஆசிரமத்தை அடைந்த

போது, அவருடைய சிஷ்ய கோடிகளில் சிலர் வெளியில் உட்கார்ந்திருந்தார்கள். நான் சுவாமிஜியைப் பார்க்க வேண்டுமென்று அவர்களிடத்தில் சொன்னேன்.

"சுவாமிஜிக்கு உடம்பு சௌகரியமில்லை; இப்பொழுது பார்க்க முடியாது" என்று அவர்களில் ஒருவர் சொன்னார்.

"உடம்புக்கு என்ன?" என்று நான் கேட்டேன்.

"மூல வியாதியால் மிகவும் கஷ்டப்படுகிறார்."

"பச்சிமோத்தானாஸனம் செய்தால் மூல வியாதி பறந்தோடிப் போகுமே!" என்று என்னையும் அறியாமல் சொல்லிவிட்டேன். பின்பு நாம் எவ்விடத்தில் இருக்கிறோம் என்று ஞாபகத்துக்கு வரவே கைகட்டி வாய் புதைத்து, "ஏதோ சிறியேன் தெரியாமல் சொல்லி விட்டேன்; மன்னிக்க வேண்டும்" என்றேன். இதற்குள் தபால்காரன் வந்து ஒரு கட்டுக் காகிதங்களைக் கொடுத்துவிட்டுச் சென்றான். அவைகளெல்லாம் என்னைப்போல் யோகாஸனங்கள் பயின்றவர்கள் எழுதிய கடிதங்கள். ஒருவருக்கு வயிற்றுவலி, வேறொருவருக்கு வயிற்றுக் கடுப்பு, மற்றொருவருக்கு வயிற்றோட்டம், இன்னும் ஒருவருக்குத் தலைவலி, பின்னொருவருக்குக் கண்வலி, பிறிதொருவருக்கு மார்பு வலி, எஞ்சியவருக்கு மூலம்! எல்லாம் ஆஸனப் பயிற்சியால் வந்த விளைவு! அதற்கெல்லாம் என்ன செய்வதென்று சுவாமிஜியின் உதவியை நாடியிருந்தார்கள். அவைகளையெல்லாம் சிஷ்யர்கள் சுவாமிஜிக்கு வாசித்துக் காட்டினார்கள். அவருக்குக் கோபம் பொறுக்க முடியவில்லை. "பதஞ்சலி யோக சூத்திரத்தில் இரண்டு சூத்திரங்களுக்கு அரை குறையாய் அர்த்தம் படித்துக்கொண்டு நான் பத்திரிகையில் ஏதாவது எழுதினால், அதைப் பேசாமல்

படித்துவிட்டுச் 'சிவனே' என்று கிடக்காமல் இவர்களை யார் அப்பியாசம் செய்யச் சொன்னது? இந்த ஜன்மத்தில் நான் உட்டியாணமும் செய்தறியேன். நௌலியும் செய்தறியேன். நான்கு நாட்களாக நான் படும் பாடு பகவானே அறிவார். என்னை மலச்சிக்கலுக்கு என்ன செய்வதென்று கேட்டால், நான் என்ன சொல்வேன்! பத்திரிகைக்காரன் கொடுக்கும் காசு, இந்தக் கடிதங்களுக்குப் பதில் எழுதக்கூடக் காணுது. ஏ கிருஷ்ணனந்தா! 'இனிமேல் யோகாஸனக் கட்டுரை என்ருல் எழுத முடியாது' என்று ஆசிரியருக்கு இன்றே ஒரு கடிதம் எழுதிவிடு" என்று சொன்ஞர்.

மறுவார்த்தை பேசாமல் நான் ஆசிரமத்தை விட்டு மெதுவாய் நழுவினேன்.

## - 6 -

# மாற்ருள் பிள்ளை

"ஒரு பானைச் சோற்றையும் ஒருமிக்கத் திங்குது. அழுகிற பிள்ளையை அம்த்தத் திறனில்லை. கொண்டா இங்கே பிள்ளையை" என்று கத்திஞள் தங்கம்மாள்.

"அழுகாதே அப்பா, அழுகாதே" என்று சொல்லிக் கொண்டே ஒரு குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்தான் ஒரு சிறுவன். அவன் பெயர் சுந்தரம்.

"எட்டு வயசு எருமை மாட்டுக்கு ஒரு குழந்தையை வச்சிருக்கத் தெரியாது? திங்கத் தெரியுமா? தின்னி மாடு" என்று சொல்லிக்கொண்டே சிறுவன் முதுகில்

இரண்டு அடி வைத்துப் பிள்ளையை அவன் கையினின்றும் பிடுங்கிக்கொண்டாள் தங்கம்மாள்.

சிறுவன் அழுதுகொண்டே வெளியில் ஓடிவிட்டான்.

தங்கம்மாள் மாரியப்பஞ் செட்டியாருக்கு இரண்டாம் பெண்டாட்டி. சுந்தரம் அவருடைய முதல் தாரத்துக்குப் பிறந்த ஒரே புதல்வன். அவனுக்கு ஒரு வயதாய் இருக்கும்பொழுது, அவனுடைய தாயான பார்வதியம்மாள் வைகையில் குளிக்கப் போயிருந்தாள். ஐப்பசி மாதம். வைகையில் இக்கரைக்கும் அக்கரைக்கும் தண்ணீர் போய்க்கொண்டு இருந்தது. படித்துறையில் குளித்துக்கொண்டிருந்த பார்வதியம்மாளுக்குத் திடீரென்று கால் நழுவிவிடவே, கரையற்ற வெள்ளம் கருணையுமற்று அவளை இழுத்துக்கொண்டு சென்று விட்டது. தகனம் செய்வதற்குக்கூட அவள் பிணம் கிடைக்கவில்லையே என்று மாரியப்பஞ் செட்டியார் துடியாய்த் துடித்தார். பச்சைக் குழந்தை சுந்தரத்தின் முகத்தைப் பார்க்கும்போதெல்லாம் அவர் நெஞ்சம் பதைத்தது. தாயில்லாக் குழந்தையை எங்ஙனம் வளர்க்கப்போகிறோம் எனத் தவியாய்த் தவித்தார். மனைவி இறந்த துக்கத்தையும் மறந்து மகன் கதியை எண்ணி எண்ணி மனம் புண்ணுனார். போனதை எண்ணி மனம் புழுங்குவதில் பிரயோசனம் இல்லை எனத் தீர்மானித்து, பிள்ளையை வளர்ப்பதற்காகத் தாம் உடனே இரண்டாவது கல்யாணம் பண்ணிக்கொள்வதே உசிதமென எண்ணினார். ஆகையால் மனைவி இறந்த ஒரு மாதத்திற்குள்ளேயே செட்டியார் மறு விவாகம் செய்து கொண்டார்.

செட்டியாருக்குப் பலசரக்கு வியாபாரம். மத்தியான்னம் அவர் சாப்பிட வரும்பொழுது, தெருவில்

சுந்தரம் விளையாடிக்கொண்டு இருப்பதைப் பார்த்து, அவனையும் சாப்பிடுவதற்காகக் கூடவே கூட்டிக்கொண்டு வந்தார். சாப்பிடும்பொழுது. அவன் முதுகில் ஐந்து விரல் தடம் இருப்பதைக் கண்டு, "இது யாரப்பா அடித்தது?" என்று கேட்டார்.

சுந்தரம் உண்மையைச் சொல்வதற்கு அஞ்சி, கண்ணீர்விட ஆரம்பித்தான். "அப்பாவைக் கண்டவுடன் அழுகை வந்திடும் போலிருக்கு. எந்தச் சுளிப் பயலோடு விளையாண்டு அடி வாங்கிகிட்டு வந்தே? உள்ளத்தைச் சொல்லேன்?" என்று சொல்லி அவன் கன்னத்தில் தங்கம்மாள் 'பளீர்'. என்று இன்னொர் அறை கொடுத்தாள்.

சுந்தரம் விம்மி விம்மி அழ ஆரம்பித்தான். அவனை அமர்த்துவதற்கு வேறு வழி ஒன்றும் தெரியாமல், "இன்னொரு கரண்டி நெய் ஊற்று. பாவம், அழுகிறான்!" என்றார் செட்டியார்.

"இப்படிச் செல்லம் கொஞ்சிக் கொஞ்சித்தானே பிள்ளையைக் கெடுத்துப் பிட்டிய. எட்டு வயசாகுதே எருமை மாட்டுக்கு. ஒரு புள்ளை வச்சிருக்கத் தெரிஞ்சிருக்கா. அடிச்சு வளக்காத புள்ளை அதென்ன புள்ளை?" என்று செட்டியாருக்குப் பிள்ளை வளர்க்கும் விதத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்தாள் தங்கம்மாள்.

* * *

"மாடு வர்ர நேரமாச்சு. சட்டுணு இந்த விதையை ஆட்டு. மாடு வந்ததும் வைக்கணும்" என்று சுந்தரத்தைப் பருத்தி விதை அரைக்கச் சொல்லிவிட்டுத் தங்கம்மாள் தண்ணீர் எடுக்கப் போய்விட்டாள்.

கடுந்தவம் செய்துகொண்டு காலம் தள்ளும்

சிவபெருமானை விஷ்ணு மோஹினி உருவெடுத்துக் கலைத்ததுபோல், எதிர்த்த வீட்டு ராமன் அங்கு வந்து சேர்ந்தான்.

"அடே, சுந்தரம்,' கிளித்தட்டு விளையாடப் போறோம்; வரையா?"

"நான் வரமாட்டேன் அப்பா. மாடு வரத்துக்குள்ளே விதை அரச்சிரணும். இல்லை யின்னா எங்கம்மா வந்து உதைப்பாள்" என்றான் சுந்தரம்.

"ஒரு ஆட்டை ஆடீட்டு, அப்புறம் வந்து அரைக் கலாமடாப்பா."

"ஒரு ஆட்டை ஆடினா, அப்புறம் விட மனம் வருமா?"

"நீ இப்ப விளையாட வந்தியானா, அப்புறம் எல்லோரும் வந்து விதை அரச்சுக் குடுப்போமப்பா" என்று தனது கடைசி மோகனாஸ்திரத்தை எறிந்தான் ராமன்.

"உன் தந்திரமெல்லாம் எனக்குத் தெரியும்" என்றார் விதை அரைக்கும் தபஸ்வி.

ராமன் தோற்று ஓடிவிட்டான்.

சுந்தரத்தின் கைதான் உரல் குழவியைச் சுற்றிக் கொண்டிருந்தது. அவன் மனமெல்லாம் கிளித்தட்டில் இருந்தது. தெருவில் பையன்கள் சப்தமிடும் பொழுது, 'பூனை இல்லாத இடத்தில் எலிகள் கொம்மாளம் அடிக்கின்றன' என்று சுந்தரம் நினைத்துக் கொள்ளுவான். "நான் இருந்தேனானால், சுப்பையா முதல் தட்டை விட்டுப் போய்க்கிருவானா?" என்று அவனை அறியாமலே அவனுடைய வாய் மெள்ளச் சொல்லிற்று. அதே சமயம் தெருவில் "உப்பு!" என்று உரத்துக் கூவிக்கொண்டு ஒருவன் ஓடினான். "ஓங்க

மேலே இன்னைக்குப் பத்து உப்பு வைக்கிறோம் பாருங்கடா!" என்று அந்தக் கக்ஷிக்காரப் பையன்களெல்லாம் பெருமை யடித்துக் கொண்டார்கள். "எங்க பக்கம் சுந்தரம் மட்டும் இருக்கணும். அப்புறம் பார்க்கலாம், நீ உப்புக் கொண்டுபோற கெட்டிக் காரத்தனத்தை" என்றான் எதிர் கக்ஷியில் ஒருவன்.

அதைக் கேட்டதும் சுந்தரத்திற்கு உச்சி குளிர்ந்து விட்டது. தன்னையறிந்த முனிவர்கட்கும் தற்பெருமையை வெல்வது கடினம். விதை அரைப்பதை விட்டுவிட்டு, கிளித்தட்டு விளையாட ஓடிவிட்டான் சுந்தரம்.

சிறிது நேரத்தில் தங்கம்மாள் தண்ணீர் எடுத்துக் கொண்டு திரும்பி வந்தாள். விதை அரைக்காமல் இருப்பதைப் பார்த்ததும், அவளுக்குக் கோபம் பொறுக்க முடியவில்லை. காளி அவதாரம் எடுத்து விட்டாள். துடைப்பமும் கையுமாய்த் தெருவிற்குச் சென்று, சுந்தரம் கையைப் பிடித்துக்கொண்டு அவன் முதுகில் ஏழெட்டு அடி கொடுத்தாள்.

"அம்மா! அம்மா! இனிமே விளையாடப் போகலே. நீ சொன்னபடி கேக்கிறேன், விட்டிரம்மா, விட்டிரம்மா" என்று துடித்தான் சுந்தரம்.

"நீ கெட்ட கேட்டிற்கு உனக்கு விளையாட்டு வேறேயா? போய் விதை அரை போ" என்று இன்னோர் அடி கொடுத்தாள்.

விம்மி விம்மி அழுதுகொண்டே விதை அரைத்தான் சுந்தரம்.

"சட்ணு விதை அரைத்துவிட்டு எங்கயாவது தொலஞ்சு போ. இன்னைக்கு ராத்திரி ஒனக்குச் சோறு கிடையாது" என்றாள் தங்கம்மாள்.

விதை அரைத்து மாட்டிற்குத் தண்ணீர் காட்டி விட்டு, சிம்னியைத் துடைத்து விளக்கேற்றினன். பின்பு சாப்பிடுவதற்கு அம்மாவின் தயவை எதிர் பார்த்திருந்தான்.

தங்கம்மாள் தன் மகனுக்குச் சோறு போட்டு உண்ணச் சொன்னுள். அவன் உண்ண மாட்டேன் என்று பிடிவாதம் செய்தான். "இன்னுங் கொஞ்சம் நெய் விடறேன் அப்பா சாப்பிடு. தம்பி சமத்தில்ல" என்று அவனைக் கெஞ்சிக் கூத்தாடினுள்.

பக்கத்தில் நின்றுகொண்டிருந்த சுந்தரம், "அம்மா, வயிறு பசிக்குதம்மா, கொஞ்சம் சோறு போடம்மா" என்று கெஞ்சினன்.

"தங்கச் சிலே போலெ பிள்ளை சோறுங்க மாட்டேங்குதே இண்ணு நான் தவிக்கிறேன். இப்ப உனக்கென்ன கொள்ளை வந்திருச்சு?" என்று அவன் மேல் சீறி விழுந்தாள்.

"அம்மா வயிறு பசிக்குதே."

"பால் ஊற்றுகிறேன். சோறு உங்கிறியாப்பா?" என்ருள் தங்கம்மாள்.

"ஆகட்டும் அம்மா" என்று ஆவலுடன் சொன்னன் சுந்தரம்.

"உனக்குத்தான் இப்ப ஆத்திரமாச் சொல்ருக. தொலே எங்கையாவது. நீ பக்கத்திலே நிண்ணு வயிறு எரிஞ்சுக்கிட்டிருக்கத்தான் பிள்ளை சோறுங்க மாட்டேன் என்கிறது" என்று சொல்லிக்கொண்டே தங்கம்மாள் பிரம்பை எடுத்தாள். பிரம்பைக் கண்டாளே இல்லையோ, ஓட்டமெடுத்துவிட்டான் சுந்தரம். ஊர்ச் சத்திரம் ஒன்றில் போய்ப் படுத்தவன், பசி பொறுக்க மாட்டாமல், அப்படியே அயர்ந்து தூங்கிவிட்டான்.

காலையில் எழுந்து, இப்பொழுதாவது கொஞ்சம் சோறு கிடைக்குமா என்று வீட்டுக்குச் சென்றான்.

"ராத்திரி எல்லாம் எங்கே அவிஞ்சு கெடந்தே? ஒங்கப்பன் எனக்குக் கொலைகாரிப் பட்டங்கட்டி, ஊரெல்லாம் எம் மண்டையைத் தூத்துறார். அவருக்கு ஓம் மூஞ்சியைக் காட்டீட்டு வா. அப்பத்தான் இன்னைக்கு ஒனக்குச் சோறு" என்று சுந்தரத்தைத் துரத்தி விட்டாள்.

மகனைக் கண்டதும், மாரியப்பஞ் செட்டியார் மகிழ்வுடன் வீட்டிற்கு வந்தார். வீட்டில் கோதுமை உப்புமாச் செய்திருந்தது ஆனால் சுந்தரத்துக்குக் கிடைத்தது என்னவோ ஒரு வாரமாய்ப் புளித்த பழைய சோறுதான்.

"அவனுக்குக் கொஞ்சம் உப்புமாப் போடுடீ" என்றார் செட்டியார்.

"வளர்ர பிள்ளைக்கு அதிகாலையிலே பழைய நுதான் போடணும். இந்த வயசிலேயே பிள்ளைக்குப் பலகாரமெல்லாம் குடுத்து வழக்கப்படுத்தாதிய" என்றாள் தங்கம்மாள்.

"நம்ம பிள்ளையா, குட்டியா, எக்கேடு கெட்டும் போகுது இண்ணு தைரியமாய்ப் போட" என்று சொல்லிக்கொண்டே தன் பிள்ளைக்கு உப்புமாவைக் கொட்டினாள்.

*    *    *

தங்கம்மாள் தன் மாற்றாள் பிள்ளைக்குச் செய்யும் கொடுமையைப் பார்த்துக் கண்ணீர் வடிக்காதவர்கள் அந்தத் தெருவில் ஒருவரும் இல்லை. சுந்தரம் பசியாய்க் கிடந்து தவிக்கும்பொழுது, சிலர்

தங்கள் வீட்டிற்கு அவனைக் கூப்பிட்டுச் சோறு போடுவார்கள். சிலர் தங்கள் வீடுகளில் செய்த தின் பண்டங்களைக் கொடுப்பார்கள். இது தங்கம்மாளுக்குத் தெரிந்துவிட்டால், 'வீடு வீடாய்ப் போய் எச்சிச் சோறு தின்னுவிட்டு வருதே, எச்சிக்கலை நாய்" என்று திட்டுவாள்.

செட்டியார் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு பிராமணத்தி . யம்மாள் வந்து குடியேறி ஒரு வருஷம் ஆகிறது. தனக்குச் சொந்த ஊர் பரமக்குடி என்றும், தன் பொல்லாத விதி வசத்தால், தன் கணவனையும் ஒரே ஆண் குழந்தையையும் ஒரே நாளில் இழக்க நேரிட்டதென்றும் அத் துக்கம் பொறுக்கமாட்டாமல், அவ்வூரையே விட்டு மதுரைக்குக் குடிவந்து விட்டதாகவும் சொன்னாள். சுந்தரத்தின் முகத்தைக் கண்டவுடன், அவள் தன் குழந்தையைப் பறிகொடுத்த துக்கத்தைக் கூட மறந்தாள். அவன் பசியாயிருக்க அவள் மனம் பொறுது. அவனை அன்புடன் தன் வீட்டிற்கு அழைத்து, வயிருரச் சோறு போட்டு அனுப்புவாள். அவன் கண் கலங்குவதைப் பார்த்தால், அவளுடைய் நெஞ்சு துடிக்கும். அவன் கண்களைத் துடைத்து, அழுகையை அமர்த்தி, அவனுக்குத் தின்பண்டங்கள் கொடுத்து அனுப்புவாள். அவனுடைய தம்பிக்கும் அதில் கொஞ்சம் கொடுக்குமாறு சொல்லுவாள். தன் ஒரு குழந்தையின் மீது வைத்த குறுகிய அன்பு விதி வசத்தால் தவறி விடவே, பொதுவாய் எல்லாக் குழந்தைகளின் மேலும் ஒரு பேரன்பாய் மலர்ச்சியுற்றது.

இங்ஙனம் இருக்கத் தங்கம்மாள் கர்ப்பமுற்ருள். என்ன காரணமோ தெரியவில்லை, அவளுக்குப் பிறந்த குழந்தைகளெல்லாம் ஒரு வருஷம் அல்லது இரண்டு

வருஷங்கள் இருந்து, இறந்து போய்க்கொண்டே இருந்தன. தலைப் பிள்ளையாகிய சிற்றம்பலம் ஒருவன் தான் பிழைத்திருந்தான். அவன் தான் அவளுக்கு உயிர்.

இப்பொழுது தங்கம்மாள் எட்டு மாதக் கர்ப்பவதி. வீட்டில் சமையல் முதலான காரியங்களைக்கூட அவளால் சரிவரச் செய்ய முடியவில்லை. பிள்ளைகள் வேளையில் சாப்பாடு கிடைக்காமல் தவித்தன. சில சமயங்களில் செட்டியாரே கடைக்குப் போவதை விட்டு விட்டுச் சமையல் செய்வார். இங்ஙனம் அக்குடும்பம் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண் டிருப்பதை அறிந்த பர்வதம்மாள் (பிராமணத்தியின் பெயர்) அவர்களுக்கு உதவி செய்ய முன் வந்தாள். பர்வதம் குழந்தையையும் கணவனையும் இழந்ததிலிருந்து, வீட்டைவிட்டு வெளி யேறுவதே இல்லை. ஆடவர்கள் முகத்திலும் விழிப்ப தில்லை. ஆகையால் சாமான்களை எல்லாம் எடுத்துக் கொண்டுபோய்த் தன் வீட்டிலேயே சமையல் செய்து அவர்களுக்குக் கொண்டுவந்து வைப்பாள். தங்கம் மாளுக்கு வேண்டிய சேவை சுச்ருஷைகள் எல்லாம் செய்வாள்.

சிற்றம்பலம் மிகவும் பலஹீனமான பையன். அவனுக்கு எப்பொழுதும் ஏதாவது ஒரு வியாதி வந்து கொண்டே இருக்கும். சில சமயம் ஜுரம், சில சமயம் பேதி, இருமல், ஒன்றும் இல்லாவிட்டால் ஜலதோஷம், ஏதாவது ஒன்று அவனை விட்டு அகலாமல் இருந்தே தீரும். பலஹீனச் சிறுவர்களுக்கு மழைக்காலம் மிகக் கெட்ட காலம். காற்றுக்கே ஜலதோஷம் பிடிக்கும் போது, சிறுவர்கள் எம்மட்டு?

ஒரு நாள் நல்ல மழை பெய்திருந்தது. தெரு வெல்லாம் தெப்பக்குளமாய் இருந்தது. சிற்றம்பலத்துக்கு

அன்று கொண்டாட்டம், சிறுவர்களுக்குத் தண்ணீரில் விளையாடுவதை விடச் சந்தோஷகரமான 'விளையாட்டு வேறு என்ன இருக்கிறது? தங்கம்மாள் எழுந்திருக்க முடியாமல் வீட்டில் படுத்த படுக்கையாய்க் கிடந்தாள். சிற்றம்பலம் தெருவில் கொம்மாளம் அடிக்க ஆரம்பித்தான். இரண்டு மூன்று மணி நேரம் விளையாடிய பின், வீட்டிற்கு வந்து சேர்ந்தான். நன்றாய் ஜலதோஷம் பிடித்துக்கொண்டது. மூக்கு ஆறாய் ஓட ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் தலைவலி என்று படுத்துக்கொண்டான். உடம்பு நெருப்பாய்க் காய்ந்தது. 'ஹீர் ஹீர்' என்று இளைத்து இரும ஆரம்பித்தான். பிள்ளைகளை ஒன்றன் பின் ஒன்றாய்ப் பறி கொடுத்த தங்கம்மாளுடைய ஹிருதயம் துடித்தது. அத்தகைய பயங்கரச் சப்தத்தை அவள் பல தடவை கேட்டிருக்கிறாள். அதன் அர்த்தம் அவளுக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் என்ன செய்வாள் பாவம்! ஒரு மஞ்சள் துண்டை எடுத்துத் தன் மகனுக்குத் தூபங் காட்டுவதற்குக் கூடச் சக்தி யற்றவளாய் இருந்தாள். உடனே ஒரு யோசனை தோன்றியது. சுந்தரத்தை அனுப்பிப் பர்வதம்மாளைக் கூட்டி வரச் சொன்னாள்.

பர்வதம்மாள் பையனைப் பார்த்ததும் திடுக்கிட்டாள். 'அட பாவி! குழந்தைக்கு நன்றாய் ஜலதோஷம் பிடித்துக்கொண்டதே. டாக்டரை உடனே கூப்பிட்டு வரச் சொல்லடி'' என்றாள். டாக்டர் வந்து ஏதோ மருந்துகள் கொடுத்துவிட்டுச் சென்றார். அன்று இரவு முழுவதும் சிற்றம்பலம் தூங்கவில்லை. படுக்கையில் இங்கும் அங்கும் உருண்டு புலம்பிக்கொண்டு இருந்தான். பர்வதம்மாளும் இரவு முழுவதும் கண்

விழித்து, அவன் பக்கத்திலேயே இருந்து, அவனுக்கு வேண்டிய சேவை சுச்ருஷைகளெல்லாம் செய்துகொண்டிருந்தாள். டாக்டரை உடனே கூட்டிக்கொண்டு வந்தது மிகவும் நல்லதாய் விட்டது. நாலைந்து தினங்களுக்குள் பையன் சௌக்கியமடைந்து விட்டான். ஆனால் அந்த ஐந்து நாட்களுக்குள் பையன் எலும்புந் தோலுமாகி விட்டான். அவனைப் பார்க்கவே பயங்கரமாய் இருந்தது. உண்மையைச் சொல்லுவோமானால், பர்வதம்மாளின் தவப் பயன்தான் பையன் பிழைத்ததென்று சொல்ல வேண்டும். தாயார் தூங்குவாள். தகப்பனும் தூங்குவார். ஆனால் பர்வதம்மாளின் கண்களில் தூக்கம் எட்டிக் கூடப் பார்க்காது. அவளுடைய பசியும் தாகமும் எங்கு ஒளிந்துவிட்டன என்று தெரியவில்லை. ஊரிலுள்ள கோயில்களுக்கெல்லாம் தேங்காய் உடைப்பதாக நேர்ந்தாள். தன் பிள்ளையைக்கூடத் தாய் அம்மாதிரி கவனிக்க மாட்டாள். அம்மாதிரி அதற்குச் சிகிச்சை செய்து வந்தாள்.

ஒரு நாள் காலை நேரம். பையன் சிற்றம்பலம் படுக்கையில் தூங்கிக்கொண்டிருக்கிறான். செட்டியார் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு இருக்கிறார். தங்கம்மாள் கட்டிலில் படுத்துக்கொண்டிருக்கிறாள். பர்வதம்மாள் தலையில் முக்காடு போட்டுக்கொண்டு பையன் படுக்கையினருகில் உட்கார்ந்திருக்கிறாள். திடீரென்று செட்டியார் பர்வதம்மாளை நோக்கி, "அம்மா, நீங்கள்தாம் எங்கள் பிள்ளைக்கு உயிர்ப் பிச்சை கொடுத்தீர்கள். நீங்கள் செய்த உபகாரத்தை நாங்கள் உயிரோடு இருக்கும் வரை மறக்க மாட்டோம்" என்ருர்.

இந்த அம்மாளைச் சாதாரணப் பெண் என்று நினைக்கக் கூடாது. சாக்ஷாத் பார்வதி தேவியே நம்

பிள்ளையைக் காப்பாற்ற ஒரு பெண்ணுருவம் எடுத்து வந்திருக்கிறாள். இந்த அம்மாள் இல்லாவிட்டால், நம் பையன் என்ன கதி அடைந்திருப்பானோ, தெரியாது. தாயே! உங்களிடத்தில் எனக்கு ஒரே ஒரு பிரார்த்தனை. பிள்ளை பிழைப்பதும் சாவதும் ஈசுவர சங்கற்பம். என்றாலும், நம் முயற்சியிலும் ஒன்றுமில்லை என்று சொல்ல முடியாது. நான் துர்ப்பாக்கியவதி. இப்பொழுது உங்களுடைய புண்ணியந்தான் என் மகன் பிழைத்தது. இந்த ஒரு குழந்தையையும் ஈசுவரன் என்னிடமிருந்து பிடுங்கிக் கொள்ளுவானோ என்று நான் அஞ்சுகிறேன். இன்றிலிருந்து நீங்கள் இவனை உங்கள் பிள்ளையென்று நினைத்துக் கொள்ளுங்கள். உங்கள் பிள்ளையான பிறகு, அவன் ஒரு வேளை பிழைக்கலாம். நான் பாவி. என்னிடம் இருந்தால், பிள்ளைக்கு ஏதாவது நோய் வந்துகொண்டே இருக்கிறது. இன்றிலிருந்து நீங்களே அவனுக்குத் தாயாக இருங்கள். அவனை உங்கள் வீட்டிற்குக் கூட்டிப் போய் விடுங்கள். அல்லது எங்கு வேண்டுமானாலும் கூட்டிப் போங்கள். உங்கள் கையில் பையனை ஒப்பித்த பின் எனக்கு ஒரு கவலையும் இராது. உண்மையில் தாங்கள் தாம் அவனுக்குத் தாய்" என்றாள் தங்கம்மாள்.

"அம்மா! கடவுள் குழந்தையைக் காப்பாற்றுவார். ஏன் அம்மா இவ்வளவு பயப்படுகிறாய்?"

"இல்லை அம்மா, நான் சொல்வது நிஜந்தான். இதுவரை எனக்கு மூன்று குழந்தைகள் பிறந்து இறந்திருக்கின்றன. இந்த ஒரு மகனாவது பிழைத்திருக்கட்டும்."

பர்வதம்மாளின் கண்களில் கண்ணீர் துளும்பியது. "அம்மா, நான் உயிரோடு இருக்கும் வரை, உன் பிள்ளைக்கு என்னால் இயன்ற சேவை செய்வேன்.

ஆண்டவன் அவனுக்கு நீண்ட ஆயுள் கொடுக்க வேண்டும். இதுதான் என் பிரார்த்தனை" என்று சொன்னாள்.

சிற்றம்பலம் இன்னும் தூங்கிக்கொண்டிருந்தான். அவனுக்கு மருந்து கொடுக்கவேண்டிய நேரமாகி விட்டது. அவனை எழுப்பி மருந்தைக் கொடுக்கலாமென்று பர்வதம்மாள் அவனை எழுப்பினாள். பிள்ளை எழுந்திருக்க வில்லை. உடனே திடுக்கிட்டுக் கூச்சலிட்டாள். சிற்றம்பலத்தின் உடம்பு 'ஜில்'லென்று இருந்தது. முகம் வெளுத்துவிட்டது. அவள் உள்ளம் துடித்தது. ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள். அவள் கண்களினின்று கண்ணீர் மாலை மாலையாக வடிந்தது. பையனை மார்போடு கட்டித் தழுவிக்கொண்டு, "அடி பாதகி! அதிருஷ்ட மற்றவளே!" என்று கதறினாள். தங்கம்மாளும் செட்டியாரும் முட்டி மோதிக்கொண்டு அழுதார்கள்.

தங்கம்மாள் என்ன நினைத்தாள்; இப்பொழுது எப்படி முடிந்தது? யமனுக்கு ஏமாற்றுவதில்தான் இன்பம் போலும்! அவனை யாவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சமயம் அவன் வருவதில்லை. நோயாளி எப்பொழுது குண மடைந்து வருகிறானோ, எப்பொழுது வீட்டிலுள்ளவர்கள் எல்லாரும் இனிமேல் பிழைத்துக் கொள்ளுவான் என்று கவலையற்றுச் சந்தோஷமாக இருக்கிறார்களோ, அச்சமயத்தைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததுபோல், திடீரென்று யமன் வருகிறான். நாள் முழுவதும் அவ்வீடு துக்கமயமாக இருந்தது. உயிருக்கு உயிர் வாங்கிக்கொண்டு போக யமன் தயாராக இருந்தால், தன் உயிரைக் கொடுத்துப் பிள்ளையைக் காப்பாற்றி யிருப்பாள் பர்வதம்மாள்.

தங்கம்மாள் மகன் இறந்த சோகத்தால், நாளுக்கு

நாள் இளைக்க ஆரம்பித்தாள். அவளுடைய நோயும் நாளுக்கு நாள் அதிகரித்தது. எலும்பும் தோலுமாக இருந்தாள். இறுதியில் ஈசுவரன் கிருபையில் அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஆனால் தங்கம்மாள் குழந்தை பிறந்த பின் வெகு நாட்கள் உயிரோடிருக்க வில்லை. அவளுக்குத் தன் இறுதிக் காலம் கிட்டிவிட்டது போல் தோன்றியது. பார்வதம்மாள் அவள் பக்கத்தில் உட்கார்ந்து கண்ணீர் வடித்துக்கொண் டிருந்தாள். செட்டியாரும் ஒரு புறம் உட்கார்ந்திருந்தார். தங்கம்மாள் கணவனைப் பக்கத்தில் அழைத்து, "நான் இன்னும் சில மணி நேரத்தில் இவ்வுலக வாழ்வை விட்டு நீங்கி விடுவேன். என் குழந்தையைப் பற்றிய கவலைதான் பெரும் கவலையாக இருக்கிறது. எனக்குப் பின் அதை யார் காப்பாற்றுவார்கள்?" என்று கண்ணீர் விட்டாள்.

"அந்தக் கவலை உனக்கு வேண்டாம், அம்மா. என் மகன் சுந்தரத்தை நான் எப்படி வளர்க்கிறேனோ, அதைவிடப் பன்மடங்கு அதிகமாக உன் குழந்தையை வளர்ப்பேன்" என்றாள் பார்வதம்மாள்.

மாரியப்பஞ் செட்டியார் திடுக்கிட்டு நோக்கினார். அநேக வருஷங்களுக்கு முன்னால் வைகை வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகப்பட்ட அதே பார்வதி அங்கு உட்கார்ந்திருப்பதைக் கண்டார்!

## - 7 -

# மதியாதார் தலைவாசல்

“என்ன சார், இவரை ஒரு மனுஷரென்று நினைத்து நாம் பார்க்க வந்தால், அவர் நம்மை உட்காரவாவது சொன்னாரா? நேற்று வரைக்கும் தாசில்தாராக இருந்தவர் தானே ஸார்? இன்று சிரஸ்தேதார் ஆனவுடன் தலையில் கிரீடமா ஏறிவிட்டது? நானுந்தான் மாஜிஸ்திரேட் ஆகப்போகிறேன். சிரஸ்தேதார் ஆக எத்தனை நாளாகும்? மனுஷனை மனுஷன் மதிக்க வேண்டும் ஸார்” என்றார் அப்பாதுரை முதலியார்.

நாகராஜபுரம் தாசில்தாராக இருந்த கண்ணபிரான் முதலியார் அன்றுதான் ஜில்லா ஹுஜூர் சிரஸ்தே தாராக வந்திருந்தார். அன்றைத் தினம் காலையில் அப்பாதுரை முதலியாரும், குமாரசாமிப் பிள்ளையும் எலுமிச்சம்பழம், பூமாலை முதலியவைகளுடன் அவரைப் பார்க்கச் சென்றிருந்தார்கள். அங்கு நடந்த சம்பவத்தைப் பற்றித்தான் அப்பாதுரை முதலியார் மேற்கூறியவாறு குமாரசாமிப் பிள்ளையிடம் சொன்னார்.

“என்ன இருந்தாலும் உத்தியோக கர்வம் கொஞ்சம் இருக்கத்தானே செய்யும்?” என்றார் குமாரசாமிப் பிள்ளை.

“இந்தச் சிடுமூஞ்சி முகத்தில் நான் இனி விழிக்கப் போவதில்லை. நம் வேலை உண்டு, நாம் உண்டு. ஒருவனிடத்தில் போய் நாம் ஏன் ஸார் கையைக் கட்டிக் கொண்டு நிற்கவேண்டும்? மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்” என்றார் அப்பாதுரை முதலியார்.

ஆனால் குமாரசாமிப் பிள்ளையின் சித்தாந்தம் வேறு. மிதிக்கும் காலை முத்தமிட்டால்தான் கலியுகத்தில் காரியம் சாதிக்கலாம் என்பது அவருடைய கொள்கை. திறமையையோ புத்தி சாதுர்யத்தையோ இந்தக் காலத்தில் யார் பார்க்கிறார்கள்? எல்லாம் ஆட்களைக் 'குல்லா'ப் போடுவதிலும், 'காக்காய்' பிடிப்பதிலுந்தான் காரியம் இருக்கிறது என்று அவர் அடிக்கடி சொல்வது வழக்கம்.

* * * *

மறுநாள் காலை சிரஸ்தேதார் ஆபீஸ் காகிதங்களைப் பார்த்துக் கையெழுத்திட்டுக் கொண்டிருந்தார். அங்க வஸ்திரத்தை இடுப்பில் கட்டிக்கொண்டு, கையில் இளம் வெற்றிலைக் கட்டுடன் குமாரசாமிப் பிள்ளை வீட்டிற்குள் நுழைந்தார். சிரஸ்தேதார் அவரைப் பார்த்து, "என்ன ஓய், எங்கு வந்தீர்?" என்று கேட்டார். "ஒன்றுமில்லை இ...இ...இ..." என்று தந்த வரிசைகளைக் காட்டினார் குமாரசாமிப் பிள்ளை.

"எங்கு வந்தீர்? சும்மா சொல்லுமேன்?"

"ஒன்றும் இல்லை. காய்கறி வாங்குவதற்காகச் சந்தைக்குப் போயிருந்தேன். நல்ல வெற்றிலையாக இருந்தது. எஜமானுக்காக ஒரு கட்டு வாங்கிக்கொண்டு வந்தேன்" என்றார். ஏறக்குறைய நாற்பது வயசாகி மாதம் 68 ரூபாய் சம்பளம் வாங்கும் மேல் வகுப்புக் குமாஸ்தாவாக இருந்தபோதிலும். மேல் உத்தியோகஸ்தர்களை 'எஜமான்' என்று அழைப்பதற்குக் குமாரசாமிப் பிள்ளை கொஞ்சமும் கூசுவதில்லை. இன்று ஓர் 'எஜமான்' விதைத்தால் நாளை ஒன்பது 'எஜமான்' அறுக்கலாம் என்பது அவருடைய எண்ணம்.

"எங்கே! வெற்றிலை ரொம்ப நன்றாய் இருக்கிறதே!" என்றார் சிரஸ்தேதார்.

அவருடைய முகத்தில் ஒரு புன்சிரிப்புத் தோன்றியது. "எஜமானுக்கு ஸ்பெஷலாக............" என்று இழுத்தார் குமாரசாமிப் பிள்ளை.

"நம்ம வீட்டு வேலைக்காரப் பயல்களுக்கு இந்த மாதிரி வெற்றிலை வாங்கத் தெரியவில்லையே!"

"எஜமானுக்கு நானே தினந்தோறும்........."

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம் ஐயா. நீர் அந்தக் கடையை நம்ம பயலுக்குக் காட்டிவிட்டால், அவன் தினமும் வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறான்" என்றார் சிரஸ்தேதார்.

* * *

அன்றைத் தினத்திலிருந்து நாள் தவறாமல் சிரஸ்தேதார் வீட்டிற்கு வெற்றிலைக்கட்டு போய்க் கொண்டிருந்தது. அதனுடன் அந்த அந்தப் பருவத்தில் விற்கும் பழங்களும் காய்கறிகளும் அவ்வப்போது போய்க் கொண்டிருக்கும். ஆபீஸ் நேரங்களில் கண்ணபிரான் முதலியார் எங்காவது மலஜல பாதைக்கு வெளியே கிளம்பினால், "எஜமான் வெயிலில் போகிறீர்களே!" என்று குமாரசாமிப் பிள்ளை அவருக்குக் குடை பிடித்துக் கொண்டு செல்வார்.

இங்ஙனம் மாதங்கள் சில சென்றன. நாராயணபுரம் தாலுகா தாசில்தாராக இருந்த ராமகிருஷ்ண ஐயர் திடீரென்று வாய்வுக் குத்தினால் இறக்கவே, ஒரு மாஜிஸ்திரேட்டுப் பதவி காலி விழுந்தது. ரெவினியூ, அக்கவுண்ட், கிரிமினல் பரீக்ஷைகளெல்லாம் தேர்ச்சி பெற்றவர்களில் ஸீனியர் குமாஸ்தாவாகிய அப்பாதுரை முதலியாருக்கே அந்தப் பதவி கிடைக்குமென்று

குமாஸ்தாக்கள் எல்லாரும் பேசிக்கொண்டார்கள். ஆனால் இரண்டு மூன்று தினங்களுக்கு அப்புறம் குமாரசாமிப் பிள்ளையை பரமன்குடி டெபுடி தாசில்தாராகவும், பரமன்குடி டெபுடி தாசில்தாரை நாராயணபுரம் தாசில்தாராகவும் நியமித்து உத்தரவு வந்தபொழுது யாவரும் பிரமித்துப் போனார்கள்.

குமாரசாமிப் பிள்ளை கிரிமினல் பரீக்ஷை தேரு விட்டாலும் மிகவும் திறமையான நிர்வாகஸ்தரென்றும், அப்பாதுரை முதலியாருக்கு நிர்வாகத் திறமை போதாது என்றும், கலெக்டருக்குக் 'கான்பிடென்ஷியல் நோட்' எழுதிக் குமாரசாமிப் பிள்ளையை மாஜிஸ்திரேட் பதவிக்குச் சிரஸ்தேதார் சிபார்சு செய்திருந்தார்.

* * *

பரமன்குடியில் குமாரசாமிப் பிள்ளை வீட்டு வாசலில் ரெவினியூ இன்ஸ்பெக்டர்களும், ஆபீஸ் குமாஸ்தாக்களும் நின்றுகொண்டு வேலைக்காரனிடம், "எஜமான் இருக்கிறார்களா?" என்று கேட்டார்கள். அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் உள்ளிருந்த குமாரசாமிப் பிள்ளை புன்சிரிப்புக் கொண்டார். அவர் விதைத்த விதை இப்போது பலன் கொடுக்க ஆரம்பித்து விட்டதல்லவா!

இதே சமயத்தில் அப்பாதுரை முதலியாரின் விஷயம் வேறு. ஒரு மோட்டார் லைசென்ஸ் பேப்பர் எழுதி வைப்பதற்குச் சில நாட்கள் தாமதமாகி விட்டது. "என்ன முதலியார்! உத்தியோகஸ்தர்கள் மாதிரி சரியாய்ப் பதினொரு மணிக்கு ஆபீசுக்கு வந்தால் வேலை நடக்குமா? என்ன இருந்தாலும் நீர் குமாஸ்தாதானே?

எட்டு மணிக்கே ஆபீசுக்கு வந்தால்தான் காரியம் நடக்கும்" என்றார் சிரஸ்தேதார்.

## - 8 -

# கன்றைக் கொன்ற பசு

### 1

**பா**பரை எதிர்த்து நின்ற சிங்கம், சித்தூர் ராணா ஸாங்கா இறந்துவிட்டான். மந்திரிகளால் விஷம் இட்டுக் கொல்லப்பட்டான் என்ற வதந்தி உலவி வந்தது. அவனுடைய மூன்றாவது மகன் ரத்னா பட்டத்திற்கு வந்தான். ரத்னாவுக்குப் பின்பு அவனுடைய சகோதரன் விக்கிரமஜித் சித்தூர் சிம்மாஸனம் ஏறினான். ராணா விக்கிரமஜித் உயர்குலத்து ராஜபுத்திரத் தலைவர்களுக்கும் பிரபுக்களுக்கும் உரிய மரியாதைகளையும் வெகுமதிகளையும் சாதாரணப் போர் வீரர்களுக்கு அளித்ததால் வெகுசீக்கிரம் செல்வாக்கு இழந்தான். பெரும் பிரபுக்களை அரச சபையிலேயே அவமரியாதையாக நடத்த ஆரம்பித்தான். போர்ச் செருக்கு வாய்ந்த ராஜபுத்திரத் தலைவர்களால் இதைப் பொறுக்க முடியவில்லை. ஆகையால் அவனைச் சிம்மாசனத்தினின்றும் நீக்கினார்கள். ராணா ஸாங்காவினுடைய கடைசிப் புத்திரன் உதயசிங் ஆறு வயசுப் பாலகனாக இருந்தான். டில்லியில் மொகலாய வம்சம் வேரூன்றிவிட்டது. அவர்களுடைய கண்ணுக்குச் சித்தூர் கறுப்பாக இருந்தது. இத்தகைய காலத்தில், ஒரு பச்சைப் பாலகனைச் சிம்மாசனம் ஏற்றுவது அறிவுடைமை ஆகாது. ஆகையால், பிரிதிவிராஜனுடைய ஆசை மகனாகிய பன்பீரைச் சிம்மாசனம் ஏற்றினார்கள்.

பன்பீர், முதலில் ராஜ பதவியை வேண்டாமென்று மறுத்தாலும், சிம்மாசனத்தில் உட்கார்ந்த சிறிது நேரத்திலேயே, அதன் சொகுசு தென்பட்டுவிட்டது. அதை விடுவதற்கு அவனுக்கு மனம் இல்லை. அந்தச் சுகத்தைத் தன் வாழ்க்கை முழுவதும் அநுபவிக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. இரவின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்தான். கொலைகாரன் சூரியனுக்கு அஞ்சுவதுபோல் கடவுளுக்குக்கூட அஞ்சுவதில்லை. இருளும் கொலையும் சகோதரர்கள். ஆகையால் ஒன்றின் குற்றத்தை மற்றொன்று வெளிப்படுத்தாது என்று கொலைகாரன் நினைக்கிறான்.

## 2

இரவு வந்தது. தாதி பன்னு உதயசிங்குக்குப் பாலும் சாதமும் ஊட்டித் தொட்டிலில் படுக்க வைத்தாள். தனக்கு வரப்போகும் அபாயத்தைக் கொஞ்சமும் அறியாத குழந்தை தூங்கியது. திடீரென்று அந்தப்புரத்தினின்றும் பெண்களின் அழுகைக் குரல் கேட்டது. தாதி திடுக்கிட்டு விழித்தாள். ராஜகுமாரன் சாப்பிட்ட மீதத்தை வாங்கிக்கொண்டு போவதற்கு அரண்மனை நாவிதன் அறைக்குள் நுழைந்தான்.

"ஏன் இந்தக் கூக்குரல்?" என்று மெல்லிய குரலில் பன்னு பயத்துடன் நாவிதனைக் கேட்டாள்.

"உனக்குத் தெரியாதா? அந்தக் கொலைகாரப் பாவி பன்பீர், ராஜா விக்கிரமஜித்தைக் கொன்றுவிட்டான்" என்றான் நாவிதன்.

"நிஜமாகவா?"

"ஆம்."

பன்னுவின் மனத்தில் திடீரென ஒரு பயங்கர

எண்ணம் குடிகொண்டது. அவள் உடம்பெல்லாம் நடுங்கியது. பன்பீரின் ரத்த தாகம் ஓர் உயிரோடு தணியாது என்று நினைத்தாள். அடுத்தாற்போல் பச்சைக் குழந்தை உதயசிங்கின் உயிருக்கு ஆபத்து வரும் என்பது அவளுக்கு ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. அவள் உதயசிங்கின் தாதி. ராஜகுமாரனின் உயிர் அவளிடத்தில் ஒப்பிக்கப் பட்டிருந்தது. அவனைக் காப்பாற்றுவது அவளுடைய கடமை. பன்பீரோ கொடிய மூர்க்கன். அவனுடைய கரங்களினின்றும், ஸாங்கா விருக்ஷத்தின் கடைசிக் கிளையை எங்ஙனம் காப்பாற்றுவது? சிங்கத்தின் குட்டி சிங்கம் என்பார்கள். "மொகலாயச் சேனையைத் தோற் கடிக்காமல் சித்தூரில் நுழையமாட்டேன்" என்று சபதம் செய்த ராணா ஸாங்கா, அதை நிறைவேற்று வதற்குள் இறந்துவிட்டான். அந்தச் சபதம் இன்னும் நிறைவேறவில்லை. அதற்குள் ராணாவின் குலவிளக்கை அவிய விடுவதா? ஒருகாலும் கூடாது என்று தீர்மா னித்தாள்.

நாவிதனிடத்தில் ஒரு பழக் கூடையைக் கொடுத்து, "இதைப் பத்திரமாகக் கோட்டைக்கு வெளியில் கொண்டுபோய், நதிக்கரையில் காத்துக்கொண்டிரு; நான் கூடிய சீக்கிரம் வருகிறேன்" என்றாள்.

## 3

ரத்தம் ஒழுகும் கத்தியுடன் பன்பீர் அறைக்குள் நுழைந்து, "எங்கே உதயசிங்?" என்று உறுமினான். பன்னாவிற்கு வயிற்றில் தீப்பற்றியது. என்ன செய்வாள்? பதில் சொல்ல அவளுடைய உள்ளம் மறுத்தது; வாய் மறுத்தது; கண் மறுத்தது; கை மறுத்தது; அவளது ஒவ்வோர் அங்கமும் மறுத்தது! தன்னிடத்தில் ஒரு

கத்தி இருந்தால், இந்தக் கொலைகாரனை ஒரே குத்தில் கொன்றுவிடலாமே என்று நினைத்தாள். அதற்குள் பன்பீர் மீண்டும் கர்ஜித்தான்: "எங்கே உதயசிங்?"

"அதோ" என்று சொல்ல வாயெடுத்தாள். வார்த்தை தொண்டையிலேயே விக்கிக்கொண்டது. கை மட்டும் நடுங்கிக்கொண்டே தொட்டிலைக் காட்டியது.

மூர்க்கன் தொட்டிலை அணுகினான். கவலையற்றுத் தூங்கிக் கொண்டிருந்த குழந்தையின் இதழ்களில் புன்னகை தவழ்ந்தது. கொலையும், பேராசையும், கோபமும் பன்பீர் முகத்தில் குடி கொண்டிருந்தன. கோபி குருடன்! அவனுடைய கத்தி, அந்தப் பச்சைக் குழந்தையின் மார்பில் பாய்ந்தது.

பன்னா 'ஓ'வென்று அலறினாள். இந்தக் கொடுந் தொழிலை அவ்வளால் பார்க்க முடியவில்லை. கண்களை இறுக மூடிக்கொண்டாள். "ஸாங்காவின் கடைசிப் புத்திரனும் இறந்துவிட்டான்; ராணாவின் வம்சம் அழிந்தது; பெயர் சொல்ல ஒரு பிள்ளைகூட இல்லையே!" என்று அந்தப்புர ஸ்திரீகள் எல்லோரும் ஓலமிட்டு அழுதார்கள். எல்லோரின் துக்கத்தைக் காட்டிலும் பன்னாவின் துக்கம் அளவுகடந்ததாக இருந்தது. விம்மி விம்மி அழுதாள். குழந்தையின் அருமை பெற்று வளர்த்த அவளுக்கு அல்லவா தெரியும்? அவ்விரவே அவசர அவசரமாக அதற்கு அந்திமக் கிரியைகளைச் செய்து முடித்துவிட்டுப் பின்பு நாவிதனைச் சந்திக்க ஓடினாள்.

## 4

நாவிதன் பழக் கூடையைத் தூக்கிக்கொண்டு கோட்டை வாசலைக் கடந்து வெளியேறினான். சிறிது

தூரம் சென்றதும், கூடையிலிருந்த பழம் அழ ஆரம்பித்தது! நாவிதன் திடுக்கிட்டு நின்முன். பழம் அழுகக் கண்டிருக்கிருன்; ஆனல் அழக் கேட்டதில்லே. ஆகையால் ஆச்சரியத்துடன், கூடையை இறக்கிப் பார்த்தான். என்ன அதிசயம்! உதயசிங் கால்களை உதறி அழுது கொண்டிருந்தான். அரண்மனே மெத்தையின் சுகம் பழக்கூடையில் வருமா?

சிறிது நேரத்திற்குப் பின் பன்னு வந்து சேர்ந்தாள்.

நாவிதன் வெகு ஆச்சரியத்துடன், "அந்தக் கொலைகாரனுக்கு என்ன பதில் சொன்னய்?" என்று கேட்டான்.

"என் மகனைக் காட்டினேன்."

"பன்னு!"

"ஆம்."

"பாவி! கொன்றுவிட்டான?"

"ஆம்."

அவளுடைய கண்களினின்றும் கண்ணீர் மாலை மாலையாக வடிந்தது. கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "என் ராஜு! என் செல்வம்!! என்று உதயசிங்கைத் தூக்கி முத்தமிட்டாள்.

## 5

பன்னுவின் கடமை இதனுடன் முடிந்துவிடவில்லை. ராஜபுதனப் பாலைவனத்தில், பசி என்றும் தாகம் என்றும் பாராமல், உள்ளங்கால் வெள்ளெலும்போட, ராஜகுமாரனைத் தூக்கிக்கொண்டு, ஊரூராய்க் கடந்து சென்று கடைசியில் தியோலாவை அடைந்தாள். அதை அந்தக் காலத்தில் ஆண்டுகொண்டிருந்த சிங்ராவின் தகப்பன், சித்தூருக்காகத் தன் உயிரைக் கொடுத்த

வீரன். அவனிடத்தில் தன் விருத்தாந்தம் முழுவதையும் சொல்லி, உதயசிங்கை ஒப்பித்தாள். தந்தையின் வீரம் மகனிடத்தில் இல்லை. பன்பீரின் கொடுங்கோலுக்கு அஞ்சி, அரசகுமாரனுக்கு அடைக்கலம் மறுத்தான்.

பின்னர் பன்னு டாங்கர்பூருக்குச் சென்றாள். அவ்வரசனும் உதவி செய்ய மறுத்தான். ஆனால் பன்னு சிறிதேனும் மனம் தளரவில்லை. எங்ஙனமாயினும் ராணாவின் புத்திரனை, வயசு வரும் வரையில் மறைவாக வைத்திருந்து, சித்தூருக்கு ராஜாவாக்க வேண்டுமென்று தீர்மானித்துவிட்டாள். ஆகையால் ஏதோ வழியாக அராவலி மலைக் கணவாய்களைக் கடந்து, நெடுந்தூரம் சென்று, இறுதியில் கோமல் மீர் அடைந்தாள். அஸ்ஸா ஸா என்பவன் அந்த நகரின் கவர்னர். அவனிடம் சென்று, உதயசிங்கை அவன் மடியில் வைத்து, "இவன்தான் உம்முடைய ராஜா! இவனைக் காப்பாற்றும்" என்றாள். அஸ்ஸா ஸா உல்லாசப் பூங்காவில் தன் தாயுடன் ஏதோ பேசிக்கொண்டு அமர்ந்திருந்தான். இப்படித் திடீரென்று பைத்தியக்காரி போலக் கிழிந்த ஆடையும், தூசுபடிந்த மேனியுமாக ஒருத்தி வந்து ஒரு குழந்தையைத் தன் மடியிலிட்டு, "இவன்தான் உம்முடைய ராஜா" என்றதைக் கேட்டு அவன் திடுக்கிட்டு விட்டான்.

"யார் நீ, பைத்தியம்!" என்பது போலப் பன்னுவைப் பார்த்தான்.

பன்னு பன்பீரின் கொடூரத்திற்குத் தப்பி வந்த விவரத்தையும், அந்தக் குழந்தைதான் ராணா ஸாங்காவின் கடைக்குமாரன் உதயசிங் என்பதையும் சொன்னாள்.

பன்பீர் ராணா விக்கிரமஜித்தையும் குழந்தையையும்

கொன்றுவிட்டான் என்ற செய்தி அவளுக்கு முன்னே அஸ்ஸா ஸாவுக்கு எட்டியிருந்தது. அதனால் அவன் கேலியாகச் சிரித்து, "என்ன கதை பேசுகிறாய்!" என்று அதட்டினான்.

பன்னு அதுதான் ராணா ஸாங்காவின் குழந்தை என்பதை அடையாளங்களுடன் நிரூபித்தாள். அப்போதும் அவனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. "போ, போ" என்று மடியில் இருந்த குழந்தையைக் கீழே உதற முயன்றான்.

அவன் அருகில் நின்ற அவன் தாய் அவனைக் கையமர்த்தி, "ஆனால் பன்பீர் கொன்றுவிட்டதாகச் சொல்லப்படும் குமாரன் யார்?" என்று கேட்டாள் பன்னுவிடம்.

பன்னுவின் கண்களிலிருந்து பிரவாகம் எடுத்தது. மிகவும் தயக்கத்துடன் அடைத்த குரலில், "இந்தப் பாவி பெற்ற பிள்ளை. அந்தச் சண்டாளன் ராணா விக்கிரமஜித்தைக் கொலை செய்த செய்தி கேட்டவுடன், என் ராஜாவின் தொட்டிலில் என் மகவைத் தூங்க வைத்தேன்" என்றாள்.

அஸ்ஸா ஸாவும் அவன் தாயும் பிரமித்துக் கற்சிலைகளாகிவிட்டனர்.

இதுவும் சாத்தியமா!

அதிசய அதிர்ச்சி தீர்ந்து சுய பிரக்ஞை வந்தவுடன், அஸ்ஸா ஸாவுக்குத் தன் நிலைமையின் ஞாபகம் வந்தது. கொடுங்கோலன் பன்பீரின் வாளை ஏமாற்றிய ராஜ குமாரனைத் தான் அபயம் கொடுத்து வளர்ப்பது உசிதமா என்று யோசனை பிறந்தது. தயங்கினான்.

அவன் தயக்கத்தைக் கண்ட அவன் தாய் சீறி எழுந்து, "மகனே! உன் குழந்தைப் பருவத்தில், விஜய

வீரர்களாய் நித்தியத்துவம் பெற்ற ராஜபுத்திர ரத்தினங்களின் கதைகளைக் கலந்து உனக்குச் சோறு ஊட்டினேனே! அதன் பலனு இந்தத் தயக்கம்? பார்; கொஞ்சம் யோசித்துப் பார். நீ இதுவரை கேட்டுள்ள ரஜபுத்திர வீரச் சரிதங்களிலே எந்த வீரனாவது, அல்லது வீரப் பெண்மணியாவது இத்தகைய மகத்தான வீரமும் தியாக புத்தியும் காட்டியது உண்டோ? மனித சரித்திரத்திலேயே இது தனித்து நிற்கும் தியாகமன்றோ! கேவலம் ஒரு தாதி தான் சுமந்துபெற்ற மதலையை அந்த அரக்கன் வாளிலே நேருக்கு நேர் தூக்கிக் கொடுத்து, இதைக் காப்பாற்றிக்கொண்டு வந்திருக்கிறாள். நீ ஓர் ஆண் மகன். கண்ணுக்குத் தெரியாத தூரத்திலுள்ள அந்தக் கொடுங்கோலன் கத்தியை நினைத்து நடுங்குகிறாய்! பேஷ்!" என்றாள்.

அஸ்ஸா ஸாவினுடைய நெஞ்சம் கொதித்தது. குழந்தையை அள்ளி மார்புடன் அணைத்துக்கொண்டு பன்னாவைப் பார்த்தான்.

## 6

குழந்தையைத் தழுவி முத்தமிட்டுச் சித்தூர் திரும்பினாள் பன்னா. அவள் கண்ணீர் குழந்தையை நனைத்து அவள் கண்களையும் மறைத்தது. ஆயினும் இந்தப் பன்னா என்னும் நக்ஷத்திரத்தைக் கால வெள்ளத்தாலும் மறைக்க முடியுமோ!

- 9 -

# சரித்திர ஆராய்ச்சி

"இந்தியனுக்கு ஏது ஸார் மூளை?" என்றார் ஒருவர்.

"உண்மை; முற்றிலும் உண்மை. நமது சரித்திரத்தை எழுதுவதற்கு நம்மால் முடியவில்லை. ஒரு வி. ஏ. ஸ்மித்தோ, லேன்பூலோ, ராபர்ட்ஸோ, அல்லது எல்பின்ஸ்டனே வேண்டியிருக்கிறது" என்று இன்னொருவர் முதலில் பேசியவரை ஆமோதித்தார்.

"ரமேச் சந்திர தத்தர், பி. தி. ஸ்ரீநிவாஸையங்கார், டாக்டர் கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் முதலியவர்களைப் பற்றி என்ன ஸார் சொல்லுகிறீர்கள்?" என்றேன் நான்.

"ஆயினும், ஆங்கில ஆசிரியர்களோடு ஒப்பிடுமாறு, அவர்கள் ஒன்றும் பிரமாதமாய்ச் செய்துவிடவில்லையே!" என்றார் முதலில் பேசியவர்.

"இன்று பாருங்களேன். வில்லியம் டானியல் என்னும் ஆங்கில ஆசிரியர் பண்டை மதுரையைத் தோண்டி எடுத்து, அநேக அரிய விஷயங்களைக் கண்டு பிடித்திருக்கிறார். இப்படி எந்த இந்தியன் ஸார், செய்திருக்கிறான்?" என்று கேட்டார் இரண்டாவது நபர்.

அவர் சொல்லிய வில்லியம் டானியல் என்பவர் எங்கள் கல்லூரிச் சரித்திர ஆசிரியர். எங்களுக்கு இந்து தேச சரித்திரம் கற்றுக் கொடுப்பவர். 'வெட்டியெடுக்கப் பட்ட மதுரை' என்னும் விஷயத்தைப் பற்றிச் சர்வ கலாசாலை (ஸெனட் ஹவுஸ்) பேரவையில் சென்ற ஒரு வாரமாக அவர் பிரசங்கம் செய்துகொண்டிருந்தார்.

அதில் ஒரு சொற்பொழிவுக்கு நாங்கள் பஸ்ஸில் போய்க் கொண்டிருந்தபோதுதான் மேற்கண்ட சம்பாஷணை நடந்தது.

*　　　*　　　*

அக்காலத்தில் நான் பி. ஏ. ஆனர்ஸ் முதல் வகுப்பில் படித்துக்கொண் டிருந்தேன். சரித்திரப் பாட மென்றால் எனக்கு வெகு உற்சாகம். அதிலும் இந்துதேச சரித்திரமென்றால் குதூகலந்தான். எங்கள் ஆசிரியர்தாம் அதற்குக் காரணம் என்று சொல்லலாம். வில்லியம் டானியல் ஆங்கிலேயர் ஆயினும் பாரத தேசத்தின்மீது பற்று மிகுந்தவர். இந்து தேச சரித்திரத்தில் அபார ஞானமுடையவர் என்றும் சிறந்த ஆராய்ச்சியாளர் என்றும் பெயர் பெற்றிருந்தார். கல்லூரி விடுமுறை நாட்களில் தென்னிந்தியா முழுவதும் பிரயாணம் செய்து கொண்டிருப்பார். சரித்திர சம்பந்தமான பழைய நகரங்களையும் கோட்டைகளையும் அரண்மனைகளையும் பார்வையிடுவார். புராதனக் கோயில்களிலுள்ள சிற்பங்களையும், சித்திரங்களையும், கல்வெட்டுக்களையும் பரிசோதிப்பார். "இந்தியச் சிற்பியும் சித்திரகாரனும் வாளா இருந்த காலமே இல்லை. புராதன இந்தியக் கோவில்களிலுள்ள சிற்பங்களையும் சித்திரங்களையும் வைத்தே, இந்திய சரித்திரத்திலுள்ள பள்ளங்களை மேவி விடலாம்" என்பது அவருடைய கொள்கை. "குஷான் வம்சத்திற்கும் குப்த வம்சத்திற்கும் நான் பாலம் கட்டி விடுகிறேன், பார்!" என்று அவர் அடிக்கடி விருது கூறுவதுண்டு. இரண்டு நாட்கள் சேர்ந்தாற்போல் விடுமுறை இருந்தாலும், அவர் ஊரில் இருக்கமாட்டார். திருச்சி மலைக் கோட்டையிலுள்ள சித்திரங்களையோ,

மதுரை மீனாக்ஷியம்மன் கோவிலிலுள்ள சிற்பங்களையோ பரீக்ஷித்துக்கொண்டிருப்பார். சோழ ராஜ்யத்தின் தலை நகரமாகிய உறையூரும் காவிரிப்பூம்பட்டினமும், இப்பொழுது பூமிக்குள் புதைந்து கிடக்கின்றன என்றும், அவற்றை வெட்டியெடுத்தால், பண்டைக் கால இந்தியாவின் சரித்திரத்தை அறிவதற்கு அது அரிய சாதனமாக இருக்குமென்றும் அவர் அடிக்கடி கூறுவது வழக்கம். ஒரு சமயம் மதுரையிலிருந்து சில ரோமானிய, கிரேக்க நாணயங்களைக் கொண்டுவந்து எங்களுக்குக் காட்டினார்.

*　　　*　　　*

அவ்வருஷம் கிறிஸ்துமஸ விடுமுறையில் நாங்கள் அவரவர்கள் சொந்த ஊர்களுக்குச் சென்றோம். வில்லியம் டானியலும் சரித்திர ஆராய்ச்சி சம்பந்தமாக வழக்கம் போல் புறப்பட்டார். சுமார் பதினைந்து தினங்களுக்கு அப்புறம், ஒரு நாள் நான் தினசரிப் பத்திரிகையைப் பிரித்த பொழுது, பெரிய எழுத்துக்களில் பின் வரும் தலைப்புகளைக் கண்டு திடுக்கிட்டேன்: "கடைச் சங்கத்தின் இருப்பிடம் — பழைய மதுரை வெட்டியெடுக்கப்பட்டது — இந்து தேச சரித்திரத்தில் அநேக நூதன உண்மைகள் வெளியாகின்றன." வெகு ஆவலுடன் கீழே படித்துப் பார்த்தேன். பண்டைக் காலத்து மதுரை தற்கால மதுரைக்குக் கிழக்கே நாற்பது மைல் தூரத்தில் இருக்கிறதென்றும். கடைச் சங்கம் அங்கு இருந்ததாகக் கருதுவதற்கு அநேக சாதனங்கள் கிடைத்திருப்பதாகவும், அங்கு வெட்டியெடுக்கப்பட்ட சாமான்களினின்றும் இன்னும் அநேக உண்மைகள் வெளியாவதாகவும், அவற்றை எல்லாம் கண்டு

பிடித்தவர் மிஸ்டர் வில்லியம் டானியல் என்பதையும் கண்டு, மகிழ்ச்சியும் சிறிது பெருமையும் கொண்டேன். அன்று முதல் பத்திரிகையை ஆவலுடன் பார்த்தேன். வெட்டியெடுக்கப்பட்ட மதுரையைப் பற்றி நாள் தோறும் ஏதாவது செய்தி வந்துகொண்டே இருந்தது. சுமார் ஒரு சதுர மைல் வெட்டியிருப்பதாகவும், மிஸ்டர் வில்லியம் டானியல் மிக உற்சாகமாக வேலை செய்கிறார் என்றும் நான் பத்திரிகைகளினின்றும் அறிந்தேன். எங்கள் ஆசிரியர் நாவினின்றே எல்லா விஷயங்களையும் கேட்க எனக்கு மிக ஆவலாக இருந்தது. ஆகையால் கல்லூரி திறக்கும் நாளை எதிர் பார்த்துக்கொண்டிருந்தேன்.

* * *

கல்லூரி திறந்தது. நானும் சென்னை போய்ச் சேர்ந்தேன்.

ஆனால் அங்கு ஒரு பெரும் ஏமாற்றம் என்னைக் காத்துக்கொண்டிருந்தது. எங்கள் சரித்திர ஆசிரியர் வில்லியம் டானியல் இன்னும் சென்னை வந்து சேரவில்லை! அவருடைய ஆராய்ச்சி முடிவதற்கு இன்னும் இரண்டு மாதங்கள் ஆகுமென்றும், அதுவரை அவர் ரஜா வாங்கியிருக்கிறார் என்றும் மாணவர்கள் பேசிக் கொண்டார்கள். அவர் வரவை நாங்கள் அனைவரும் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு இருந்தோம். இரண்டு மாதங்கள் கழிந்த பிறகு, அவர் சென்னை வந்தார். உடனே அவருடைய ஆராய்ச்சியைப் பற்றிச் சர்வ கலாசாலைப் பேரவையில் தொடர்ச்சியாக அநேக பிரசங்கங்கள் செய்யுமாறு பல்கலைக் கழகத்தார் வேண்டிக் கொண்டார்கள். அந்தப் பிரசங்கங்களில் ஒன்றுக்குத்

தான் நாங்கள் அன்று பஸ்ஸில் போய்க் கொண்டிருந்தோம்.

* * *

வெட்டியெடுக்கப்பட்ட மதுரையில் கிடைத்த சில சாமான்களைப்பற்றி, அன்றைச் சொற்பொழிவில் அவர் விவரித்துக் கூறினார். கடைச் சங்கப் புலவர்கள் நாற்காலிகளில் உட்கார்ந்து தங்கள் ஆராய்ச்சிகளை நடத்தியிருக்கவேண்டும் என்று ஆரம்பத்திலேயே யாவரும் திடுக்கிடும்படி ஒரு வெடிகுண்டைப் போட்டார். அங்கு அகப்பட்ட பொருள்களில் ஓர் இரும்பு மடக்கு நாற்காலியும், ஒரு மர நாற்காலியும் இருக்கின்றன என்றும், அவற்றிலிருந்து சங்கப் புலவர்கள் நாற்காலிகளில் உட்கார்ந்து தங்கள் விவாதங்களை நடத்தினார்கள் என்று நாம் அநுமானிக்க இடம் இருக்கிறதெனவும் சொன்னார். கடைச் சங்க காலத்தை கி. பி. முதல் நூற்றாண்டாக நிர்ணயிக்கலாம் எனவும், ஆகவே சுமார் இரண்டாயிர வருஷங்களுக்கு முன்பே, தென்னிந்தியாவில் இரும்பு சாதாரணமாக உபயோகத்தில் இருந்ததாக அறியக் கிடப்பதாகவும், இரும்பில் மடக்கு நாற்காலி செய்திருப்பது பண்டைத் தமிழர்களுடைய நுண்ணிய அறிவையும் வேலைத் திறத்தையும் காட்டுகிறது எனவும் கூறினார்.

சிறிது நேரத்தில் மிஸ்டர் வில்லியம் டானியல் துரையின் உற்சாகம் கரை மீறி எழுந்தது. "பண்டைப் பாண்டிய நாட்டின் தலை நகராகிய மதுராபுரியில் வெட்டியெடுக்கப்பட்ட பொருள்களில், தண்ணீரை நீராவியாக்கி மீண்டும் அதைக் குளிர வைக்கும் கண்ணாடிக் குழாய் ஒன்றும், இரண்டு மூன்று சோதனைக் குழாய்களும்

கிடைத்திருப்பது கவனிக்கத் தக்கது. இவ்விரண்டு சாமான்களும் அங்கு எப்படிக் கிடைத்திருக்கக் கூடும் என்பதை யோசித்து யோசித்து என் மூளை குழம்பி விட்டது. கண்ணாடிக் குழாய்கள் யவன நாட்டிலிருந்து வந்ததாகக் கொண்டாலும், அவை என்ன காரியத்திற்காக இங்கு உபயோகப்படுத்தப்பட்டன என்பது நாம் கவனிக்க வேண்டிய விஷயம். எனது நீண்ட ஆராய்ச்சியில் எனக்குத் தோன்றுவது என்னவென்றால், பண்டைத் தமிழ்ச் சங்கத்தில் புலவர்கள் இலக்கிய ஆராய்ச்சி மட்டும் நடத்தவில்லை, ரஸாயன பௌதிக ஆராய்ச்சிகளும் நடத்தினார்கள் என்பதே. இதை எவரும் மறுக்க இயலாதவாறு நிரூபிப்பதற்கு வேண்டிய சாதனங்கள் இப்பொழுது என் கைவசம் இருக்கின்றன என்று நான் உங்களுக்கு உறுதி கூறுகிறேன். (பலத்த கரகோஷம்.) பண்டைத் தமிழகத்தில் விஞ்ஞானப் புலவர்களும் இருந்திருக்கவேண்டும் என்பது வெள்ளிடைமலை. முதல், இடைச் சங்கங்கள் வெறும் தமிழாராய்ச்சிக் கழகங்களாகவே இருக்க, கடைச் சங்கம் எல்லா வித ஆராய்ச்சிகளும் நடந்த ஒரு சர்வகலாசாலையாக மாறியிருக்கவேண்டும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. நாளந்தா, காசி சர்வகலாசாலைகளைக் காட்டிலும், புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட இம்மதுரைச் சர்வகலாசாலை எவ்வகையிலும் பின்னடைந்ததல்ல என்பதே எனது அபிப்பிராயம் (கேளுங்கள்! கேளுங்கள்!). ஆனால் இந்த விஷயத்தில் ஆராய்ச்சி போதாது. இத்துறை இப்பொழுது புதிதாகத் திறக்கப்பட்டிருக்கிறது. வேலை செய்பவர்கள் மிகச் சொற்பம். இந்திய மாணவர்கள் இத்துறையில் இறங்கி ஆராய்ச்சி செய்ய முன்வருவார்களானால், அது தமிழ் நாட்டிற்கும், சரித்திரத்திற்குமே

செய்த ஒரு மாபெருஞ் சேவையாகும் (மீண்டும் கரகோஷம்).

"கடைசியாக உங்களுக்கு ஒரு சந்தோஷச் செய்தியைத் தெரிவித்துவிட்டு, இன்றைப் பிரசங்கத்தை முடித்துக்கொள்கிறேன். சுமார் மூன்று வாரங்களுக்கு முன்பு ஓர் இடத்தை வெட்டிக்கொண்டிருந்தோம். அது மண்ணில் புதைந்த ஒரு மாளிகை போல் தோன்றியது. செங்கல்கள் குவியல் குவியலாகக் கிடைத்தன. அத்தகைய மாளிகைகள் அடுத்தடுத்துச் சுமார் ஐந்தாறு தோண்டி யெடுக்கப்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு, ஆகாயத்தை யளாவும் அரச மாடங்களாக இருந்த அக்கட்டிடங்கள் இன்று வெறுஞ் செங்கற் குவியல்களாக இருப்பது என்னே பரிதாபம்! என்னே காலத்தின் கோலம்!

"அம் மாளிகைகளைப் பற்றி நமக்குக் கவலையில்லை. அவற்றில் கிடைத்த சில ஏட்டுச் சுவடிகளைப்பற்றி உங்களுக்குக் கூற விரும்புகிறேன். ஐம்பெருங் காப்பியங் களில் இதுவரை அகப்படாதிருந்த 'வளையாபதி' என்ற சங்கநூல் இப்பொழுது கிடைத்துவிட்டது என்பதை அறிய நீங்கள் குதூகல மடைவீர்கள். அப் பண்டைத் தமிழ் நூல்களை நன்கு ஆராயுங் காலை, அற்புதமான சில விஷயங்கள் வெளியாகின்றன. கி. பி. மூன்றாவது நான்காவது நூற்றாண்டுகளில் இந்து தேச சரித்திரத்தைப் பற்றி இதுவரை ஒன்றும் தெரியவில்லை. அச்சமயத்தில் இந்தியா முழுவதும் பாண்டியர்களது ஏகாதிபத்தியத்தில் இருந்தது என்பதைக் காட்ட நமக்குச் சில ஆதாரங்கள் இப்பொழுது கிடைத்திருக்கின்றன. புதிதாய் அகப்பட் டிருக்கும் இக் காப்பியத்தை ஆராயுங்காலை, "சிந்துவில் சங்கொடி நாட்டிய மாறன்" "பஞ்சநதம் வென்ற

குஞ்சர முடையோன்" "திருநகர் வென்ற இருநெடுந் தோளான்" என்னும் அடிகளைக் காண்கிறோம். எப்பொழுது, யார் காலத்தில் பாண்டிய சாம்ராஜ்யம் பஞ்சாப், காஷ்மீரம் முதலிய நாடுகள்வரை பரவி யிருந்தது என்பது இன்னும் நிச்சயமாகத் தெரியவில்லை. இவ்விஷயத்தில் இன்னும் நீண்ட ஆராய்ச்சி செய்தல் அவசியம்" என்று சொல்லி முடித்தார்.

சர்வகலாசாலையில் வில்லியம் டானியலின் பிரசங்கங்கள் முடிந்தன. நாடெங்கும் அவரைப்பற்றியும், அவருடைய ஆராய்ச்சியைப் பற்றியுமே பேச்சாக இருந்தது. சர்வகலாசாலை அவருக்கு டாக்டர் பட்டம் கொடுத்தது. சர்க்கார் அவருக்கு ஸர் பட்டம் கொடுத்தார்கள். 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும்' என்னும் பழமொழியைப் பின்பற்றித் துரையவர்களும், 'வெட்டியெடுக்கப்பட்ட மதுரை' 'பாண்டிய சாம்ராஜ்யம்' என்னும் இரண்டு புத்தகங்களை எழுதி வெளியிட்டார். அவை ஆயிரக் கணக்கில் விலையாயின. கூடிய சீக்கிரத்தில் அவருக்குச் சீமையிலேயே ஒரு சர்வ கலாசாலையில் இந்திய சரித்திர ஆசிரியர் வேலை கிடைக்கவும் புறப்பட்டுப் போய்விட்டார்.

* * *

ஸர் வில்லியம் டானியல் சீமை சென்று இரண்டொரு வாரங்களாயின. நானும் என் நண்பன் ஜகந்நாதனும் எங்கள் ஊருக்குச் சென்றோம். எங்கள் ஊருக்குச் செல்லும் வழியில்தான் மதுரை இருக்கிறது. ஆயினும் நாங்கள் அதுவரை அந் நகரைப் பார்த்ததே இல்லை. ஆகையால் மதுரையில் இறங்கினோம். மீனாக்ஷி யம்மன் கோவில், புதுமண்டபம், திருமலை நாயக்கர்

மஹால் முதலிய இடங்களைப் பார்த்தோம். அங்கிருந்து நாற்பது மைல் தூரத்தில்தான் புதிதாய் வெட்டியெடுக்கப் பட்ட மதுரை இருக்கிறதென்று எங்களுக்குத் தெரியும். ஆகையால் அதையும் பார்த்துவிட்டு வரலாமென்று எங்களுக்கு ஓர் ஆவல் தோன்றியது. மறுநாள் காலை பஸ்ஸில் அவ்விடத்திற்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கு ஒரு பழம் பொருட்காட்சிசாலை (Museum) கட்டியிருந்தார்கள். அதைப் பார்த்துவிட்டு, வெட்டியெடுக்கப் பட்ட நகரத்தைப் பார்க்கச் சென்றோம். அங்கு இன்னும் வேலை நடந்துகொண்டிருந்தது. நாங்கள் அதைப் பார்த்துக்கொண்டு வரும்போது, பக்கத்துக் கிராமவாசிகள் இருவர் ஏதோ பேசிக்கொண்டு செல்லும் சப்தம் கேட்டு, அவர்கள் என்ன பேசுகிறார்களென்று நான் கவனித்தேன்.

ஒருவன் :—இதென்ன அண்ணே! ஏதோ வெட்டிகிட்டிருக்காங்க, மூணு, நாலு மாசமாப்புடுச்சு?

மற்றொருவன் :—நாலஞ்சு மாசங்களுக்கு முன்னே, ஒரு வெள்ளைக்காரத் தொரை வந்தான். ரெண்டு, மூணு நாளா என்னமோ இந்த இடத்தைச் சுத்திச் சுத்திப் பார்த்தான். அப்புறம் 50, 60 ஆளைக் கொண்டுவந்து வெட்டச் சொல்லிச் செங்கல்களை வண்டி வண்டியா ஏத்திக்கிட்டுப் போயிட்டான்.

ஒருவன் :—இங்கு முன்னாலே என்ன இருந்தது அண்ணே?

மற்றொருவன் :—அது ஒனக்குத் தெரியாதா? 30, 40 வருஷத்திற்கு முன்னே, அந்த இடத்திலே, சங்கிலித் தேவன் இண்ணு ஒருவன் அஞ்சாறு செங்கல் காளவாசல் வச்சிருந்தான். அப்புறம் ஒரு பெரிய வெள்ளம் வந்து ஒரே மணல் மேவிப் போய், எல்லாம் பூமிக்குள்ளே

அமுங்கிப் போச்சு. நாங்கூட நாலு வருஷத்துக்கு முன்னாலே, வீடு கட்டறதற்கு அதிலே இருந்துதான் செங்கல் தோண்டி எடுத்துக்கிட்டுப் போனேன். இப்ப அந்த வெள்ளக்காரப் பயல் வந்து, அவ்வளவு செங் கல்லையும், வண்டி வண்டியா ஏத்திகிட்டுப் போயிட்டான்.

*  *  *

நாங்கள் இருவரும் இந்தச் சம்பாஷணையைக் கேட்டுத் திடுக்கிட்டோம்.

"சரித்திர ஆராய்ச்சியின் லக்ஷணம் எப்படி இருக்கிறது?" என்றான் என் நண்பன்.

## - 10 -

# லஞ்சம்

வேங்கடராம நாயுடு தாலுகா ஆபீஸ் பியூன். மாதம் பதினாறு ரூபாய் சம்பளம். ஆனால் சம்பளத்திற்கு ஏற்ற குடும்பமில்லை. ஆண் ரகத்தில் நாலு, பெண் ரகத்தில் மூன்று. ஆக மொத்தம் ஏழு குழந்தைகள். இது தவிர யமனுக்கு 'டிமிக்கி' கொடுத்துக்கொண்டுவரும் எழுபது வயசுள்ள சுமங்கிலியான தாயார். 'சுமங்கிலி' என்று சொன்னதிலிருந்தே 'தகப்பனார் ஒருவர் இருக்கிறார்' என்று சொல்ல வேண்டிய அவசியமே இராது. ஒற்றைப் படை நம்பர் ஆகாதென்று டஜனைப் பூர்த்தி செய்ய அவருடைய தங்கையும் விதவையாகிச் சென்ற வருஷம் வந்து சேர்ந்தாள்.

வேங்கடராம நாயுடு ராம பக்தர். எந்நேரமும் ராம நாமம் ஜபித்த வண்ணமாகவே இருப்பார். தினந்

தோறும் பெருமாள் கோவிலுக்குப் போகத் தவற மாட்டார். பட்டை பட்டையாக நாமம் போட்டுக் கொள்வார். அவர் தமக்கே நாமம் சாத்தப் படிந்திருந்தாரேயொழிய, மற்றவர்களுக்கு நாமம் சாத்தும் வித்தையை இன்னும் அவர் கற்றுக்கொள்ள வில்லை. குமாஸ்தாக்கள் ஆபீஸில் ஒன்றிரண்டு லஞ்சம் வாங்குவதை அவர் பார்க்க நேரிட்டால், 'ராமா! ராமா!' என்று மனத்துக்குள்ளேயே ஜபித்துக்கொள்வார். அந்தப் பாதகத் தொழிலைப் பார்த்த பாவத்தைப் போக்கிக் கொள்வதாக அவர் நம்பிக்கை. தாலுகா ஆபீஸில் வேலை பார்த்துக்கூடத் தாமரை இலை நீர்போல், வேங்கடராம நாயுடு லஞ்சம் வாங்காமல் இருந்தது யாவருக்கும் வியப்பாகவே இருந்தது.

வேங்கடராம நாயுடுவுக்கும் வாழ்க்கையில் ஒரு நம்பிக்கை இருந்தது. அவருக்குப் பன்னிரண்டு வருஷம் 'சர்விஸ்' ஆகிறது. அடுத்த வருஷம் டபேதார் அப்துல் காதர் சாகிப் பென்ஷன் வாங்கப்போகிறான். அவனுக்குப் பின்பு, இருக்கிற பியூன்களிலெல்லாம் நாயுடுதாம் 'சீனியர்'. அப்துல் காதருக்கு அப்புறம் டபேதார் வேலை நாயுடுவுக்குத்தான். டபேதார் வேலை வந்துவிட்டால் மாதம் இருபது ரூபாய் சம்பளம் கிடைக்கும். அப்புறந்தான் தம் மகளுக்குக் கல்யாணம் செய்ய வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்தார் நாயுடு.

* * *

"சாமி, எல்லாரும் கையெழுத்துக் காயிதம் குடுத்திட்டாங்க. நீங்க ஒருத்தர்தான் பாக்கி. மணி பத்தாச்சு. நான் புறப்பிடப் போறேன்" என்றார் வேங்கடராம நாயுடு.

“ ஓய் நாயுடுகாரு, கொஞ்சம் பொறும் ஓய். ஆப்காரி ஸ்டேட்மெண்ட் நாளைப் போகாட்டா கலெக்டர் கண்ணு முழியைப் புடுங்கிப்புடுவான். இதோ தந்திட்டேன். கொஞ்சம் பொறும் ” என்ருர் ஆப்காரி குமாஸ்தா.

நாயுடு பொறுமைசாலி. கொஞ்ச நேரம் பொறுத்து அதையும் வாங்கிக்கொண்டு, எல்லாவற்றையும் கையெழுத்துப் பெட்டியில் போட்டுத் தூக்கிக்கொண்டு தாசில்தார் வீட்டிற்குப் போனுர். மாடிக்குச் சென்று தாசில்தார் அறையை அணுகிய போது, அவருடன் யாரோ ஒருவர் பேசிக்கொண்டிருக்கும் சத்தம் கேட்டது

“ ஐந்நூறு ரூபாய் கொடுத்துவிடுகிறேன். எஜமான் கிருபை செய்து, ஏலத்தை என் பேருக்கு முடித்துவிட வேண்டும். ”

“ முழு ரூபாயாய் ஒரு ரூபாய் கொடுத்துவிட வேண்டும். அதற்குக் குறைந்தால் என்னிடத்தில் பேசவே வேண்டாம். மூவாயிரம் ரூபாய் பெறக்கூடிய நிலம் ” என்ருர் தாசில்தார்.

நாயுடு மூக்கில் விரலை வைத்துக்கொண்டு, பக்கத்தில் இருந்த பியூன் ஒருவனை, “ என்ன நடக்கிறது உள்ளே ? ” என்று கேட்டார்.

“ சத்தம் செய்யாதே ! ” என்று ஜாடை காட்டிக் கொண்டே, “ ‘ சம்திங் ’ நடக்குது, ‘ சம்திங் ’ ! இப்ப உள்ளே போகாதே ” என்ருன் அந்தப் பியூன்.

“ தாசில்தார் எசமான் கூடவா இப்படி ! ” என்று வாயைப் பிளந்தார் நாயுடு.

“ நீ தான் பைத்தியம் ! எசமானுக்குமா பைத்தியம் ? ” என்ருன் பியூன்.

“ எஜமான் ! கிருபை செய்யணும். ஓங்க பேரைச் சொல்லி நான் பிழைச்சுக்கிருவேன். எசமான் பெரிய

மனசு பண்ணணும்.'' உள்ளே இருந்து சத்தம் வந்தது.

"அந்தப் பேச்சே பேச வேண்டாம். ஆயிரத்துக்குக் குறைந்தால் காரியம் நடக்காது" என்றார் தாசில்தார்.

உடனே பத்து நோட்டுக்கள் எண்ணும் சத்தம் கேட்டது. தாசில்தார் இந்த விஷயத்தில் எல்லாம் கறாரான பேர்வழி என்பது வந்தவருக்குத் தெரியும்.

* * *

மறுநாள் ரெவினியூ டிபாஸிட் ரிபண்டு வெளச்சர் எடுத்துக்கொண்டு ஒருவன் தாலுகா ஆபீஸிற்கு வந்தான். கோழிக் குஞ்சை நோக்கி வட்டமிடும் கருடனைப்போல், நாயுடு அவனை வட்டமிட்டார்.

"எட்டணா கொடுக்கிறேன். சீக்கிரம் இதை மாற்றிக் கொடு."

"முழு ரூபாயாய் ஒரு ரூபாய் கொடுத்துவிட வேண்டும். அதற்குக் குறைந்தால் காரியம் முடியாது" என்றார் நாயுடு. தாசில்தாரிடத்தில் படித்த பாடம்! ஒரு தப்பிதங்கூட இல்லாமல் ஒப்பித்தார். ஆனால் முடிவு?

வந்தவன் எஸ். எஸ். எல். ஸி. படித்தவன். சிறிது சட்டம் தெரிந்தவன். உடனே ஹெட் அக்கவுண்டெண்டிடம் போய்ச் சொல்லிவிட்டான்.

இரண்டு நாட்களுக்கு முன்னால் ஹெட் அக்கவுண்டெண்டு நாயுடுவைத் தம் வீட்டிற்குத் தண்ணீர் எடுக்கச் சொன்னார். நாயுடு மறுத்துவிட்டார். அதிலிருந்து அவர் நாயுடுவின்மேல் கண்ணாகவே இருந்தார். இப்பொழுது அவர்மீது ஒரு 'ரிப்போர்ட்' வரவே, உடனே அவனிடம் ஒரு வாக்குமூலம் வாங்கி, தாசில்தாருக்கு 'ரிப்போர்ட்' செய்துவிட்டார்.

சில நாட்களுக்குப் பின் தாசில்தார் நாயுடுவை விசாரணை செய்தார். நாயுடு குற்றத்தை ஒப்புக் கொண்டார். நீதி தவறாத தாசில்தார் தமது கடமையைச் செய்தார். நாயுடுவின் சம்பளத்தில் இரண்டு ரூபாய் குறைக்கப்படும் என்றும், டபேதார் வேலைக்கு அவர் சிபார்சு செய்யப்பட மாட்டார் என்றும் தீர்ப்பளிக்கப் பட்டது.

நாயுடு வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டார்!

மறுநாள் காலைத் தபாலில் தாசில்தாருக்கு 'ஆர்டர்' ஒன்று வந்தது. அவரை டிவிஷனல் டிப்டி கலெக்டராகப் 'பிரமோஷன்' செய்திருப்பதாக அதில் கண்டிருந்தது.

ஊரார் அனைவரும் அவருக்கு ஒரு தேநீர்க் கச்சேரி வைத்துப் பிரிவுபசாரப் பத்திரம் ஒன்றும் வாசித்துக் கொடுத்தார்கள். அந்தப் பத்திரத்தில் தாசில்தார் தர்மத்திற்குக் கட்டுப்பட்டவரென்றும், நீதி தவறாதவ ரென்றும், தற்காலத்தில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்குவதை அவர் எவ்வளவு வெறுக்கிறார் என்பது, ஒரு பியூனுக்கு அவர் விதித்த தண்டனையி லிருந்தே தெரியவருகிறதென்றும் குறிப்பிட்டிருந்தது.

* * *

அன்றிரவு நாயுடு வீட்டிற்குத் திரும்பியபொழுது அவருடைய மகன் மூன்றாவது வகுப்பில் வாசிக்கும் பையன் பழைய பாடங்களைப் படித்துக்கொண்டிருந்தான்.

"சத்தியமே ஜயம்!" "தர்மம் தலை காக்கும்!" என்று உரத்துப் படித்தான்.

## - 11 -

# ஆண்டாள் கல்யாணம்

காலை சுமார் 4-30 மணி இருக்கும்.

"யாரையா தெற்கே போகிறது? திருமங்கலம், ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு, ராஜபாளையம்!" என்று ஒரே மூச்சில் தொண்டை கிழியக் கத்தினான், ரகுநாத விலாஸ் பஸ் சர்வீஸ் கண்டக்டர்.

நான் பஸ் மானேஜரிடம் போய், "ஸ்ரீவில்லி புத்தூருக்கு ஒரு டிக்கட்டுக் கொடுங்கள்" ,என்று சொன்னேன். மானேஜர், பக்கத்தில் உட்கார்ந்திருந்த காக்கி ஷர்ட் பேர்வழி ஒருவரிடம், "என்ன ஐயா, உங்கள் ஆட்கள் இன்னும் வரக் காணோம். கார் இன்னும் ஐந்து நிமிஷத்திற்குள் புறப்படப் போகிறது. உங்கள் டிக்கட்டைக் கான்ஸல் பண்ணி இவருக்கு ஒரு டிக்கட் போடப் போகிறேன். நீங்கள் அடுத்த காரிலேதான் போக வேண்டியிருக்கும். என்ன சொல்லுகிறீர்கள்?" என்றார்.

"என்ன ஐயா, அநியாயம்? நேற்று இரவே பணங் கொடுத்து டிக்கட் வாங்கியிருக்க இப்படி அநியாயம் பண்ணலாமா? கொஞ்சம் பொறுங்கள். அரை நிமிஷத்தில் வந்துவிடுவார்கள்" என்று கெஞ்சினார் காக்கி ஷர்ட் பேர்வழி.

"அப்போ, டிக்கட் காலியில்லை ஸார்" என்றார் மானேஜர்.

"நான் நேற்றுச் சாயந்தரமே வந்து ஒரு டிக்கட் வேண்டுமென்று கேட்டதற்கு, காலை 5 மணிக்கு வரச்

சொன்னீர்கள். நான் 4-30 மணிக்கே வந்திருக்கிறேன். இப்பொழுது டிக்கட் இல்லை என்றால் நான் எங்கே போவது ? " என்று மன்றாடினேன்.

"எடுங்க ஸார், ரூபாயை எடுங்கள். என்ன செய்வது ? நேற்றே சொல்லியாய்விட்டது. சொன்ன சொல் மாறுவது அழகல்ல. 'ஓவர் லோடா'னாலும் பரவாயில்லை எடுங்கள் ரூபாயை !" என்று வேண்டா வெறுப்போடு சொன்னார் மானேஜர்.

எனக்குப் பரம சந்தோஷம். வாதாடி வழக்காடி ஒரு டிக்கட் வாங்கிக்கொண்ட என் சாமர்த்தியத்தை நானே மெச்சிக்கொண்டேன். காரில் இடமே காலி இல்லாதபோது 'கண்டக்டர்' ஏன் தொண்டை கிழியக் கத்தினான் என்பது எனக்குக் கொஞ்சமேனும் விளங்கவில்லை.

டிக்கட் கிடைத்துவிட்டது. இனிமேல் என்னவேண்டுமானாலும் செய்யலாமல்லவா ? "கார் எப்பொழுது புறப்படப்போகிறது ? கொஞ்சம் காபி சாப்பிட்டுவிட்டு வருகிறேனே ?" என்று கேட்டேன். கேட்டதுதான் தாமதம். மானேஜருக்குக் 'கரை மீறி எழுந்தது வெஞ்சினம்.' "விடிய விடிய ராமாயணம் கேட்டுச் சீதைக்கு ராமன் சிற்றப்பன் என்கிறீர்களே ! இந்தா புறப்பட்டாச்சு ஸார் இன்னா ?" என்று அவர் கடுகடுத்தார்.

"காலையில் ஒன்றும் சாப்பிடவில்லை" என்று பரிதாபகரமான குரலில் மீண்டும் விண்ணப்பித்துக் கொண்டேன்.

"மற்றப் 'பாசெஞ்சர்'கள் எல்லோரும் காபி சாப்பிடத்தான் போயிருக்கிறார்கள். இன்னும் அரை நிமிஷத்தில் வந்துவிடுவார்கள். அவர்கள் வருவதற்குள்

நீங்கள் வருவதாக இருந்தால், போகலாம்!" என்று மானேஜர் அருள் புரிந்தார்.

நான் ஓட்டோட்டமாய்ப் பக்கத்திலுள்ள ஹோட்டலுக்குச் சென்று ஒரு கப் காபி மட்டும் நாப்பொசுக்கச் சாப்பிட்டுவிட்டு ஓடோடியும் வந்தேன். நல்ல வேளையாக மற்றப் 'பாசெஞ்சர்'கள் இன்னும் வரவில்லை. என்னைக் கண்டதும் மானேஜர் காக்கி ஷர்ட் பேர்வழியைப் பார்த்து, "என்ன ஐயா, உங்கள் ஜனங்கள் இன்னும் வரவில்லை; கார் புறப்படப் போகிறது. அப்புறம் என்னைக் குறை சொல்லாதீர்கள்!" என்று விரட்டினார்.

"இந்தா வந்து விட்டார்கள்; கொஞ்சம் பொறுங்கள்" என்று சமாதானப்படுத்தினார் பக்கத்தில் இருந்த பேர்வழி.

மணி ஆறு ஆகிவிட்டது. காபி சாப்பிடப்போன 'பாசெஞ்சர்'களும் இன்னும் வந்தபாடில்லை.

கொஞ்ச நேரத்தில் ஐயங்கார் ஒருவர் வந்து, "ராஜபாளையம், 3 டிக்கட் இருக்கிறதா?" என்று கேட்டார்.

மானேஜருக்கும் காக்கி ஷர்ட் பேர்வழிக்கும் மறுபடியும் 'லடாய்'. மானேஜர் கறாரானவர். அந்த வழுவழுத்த பேர்வழி என்ன கெஞ்சியும் கேளாமல் அவருடைய 5 டிக்கட்டுகளில் 3 டிக்கட்டுகளைக் 'கான்சல்' செய்து, ஐயங்காருக்குக் கொடுத்துவிட்டார். காலத்தின் மதிப்புத் தெரியாத விளக்கெண்ணெய் ஆசாமிகளுக்கு இப்படித்தான் புத்தி புகட்டவேண்டும். அடுத்தாற்போல் என்னைப் பாருங்கள்! 5 மணிக்கு வரச் சொன்னதற்கு 4-30 மணிக்கே வந்துவிட்டேன் அல்லவா? அதனால்தான் எனக்கு டிக்கட் கிடைத்தது. கைமேல் பலன்!

* * *

மணி ஏழாகி, எட்டாகி, ஒன்பதும் அடிக்கப் போகிறது. காபி சாப்பிடப்போன 'பாசெஞ்சர்'களையும் காணவில்லை. காக்கி ஷர்ட் பேர்வழியின் மீது 2 டிக்கட்டிற்கு ஆளையும் காணவில்லை. நான் எப்படியும் 11 மணிக்கு ஸ்ரீவில்லிபுத்தூரில் இருக்கவேண்டும். ஆகையால் நான் மானேஜரைச் சற்றுக் கோபிக்க ஆரம்பித்தேன்.

அதற்கு அவர், "இந்தியர்களுடைய விஷயமே இப்படித்தான் ஸார். காலத்தின் அருமை அவர்களுக்குக் கொஞ்சமேனும் புரிவதில்லை. என்ன இருந்தாலும் வெள்ளைக்காரன் வெள்ளைக்காரன்தான்!" என்று பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார். ஆனால் திடீரென்று என் கதராடையைப் பார்த்ததும் பேச்சை மாற்றி, "காந்தியைப் பாருங்க, ஸார்? 'மஹாத்மா' என்கிற பட்டம் அவருக்கே தகும். மணி என்றால் மணி; நிமிஷம் என்றால் நிமிஷம். காலத்தின் அருமை என்றைக்குத்தான் நம்ம ஜனங்களுக்குத் தெரியப் போகிறதோ?" என்று பரிதவித்தார்.

காக்கி ஷர்ட் பேர்வழி தமக்குள்ளேயே சிரித்தார். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை...

மணி 10 ஆகிவிட்டது. நானும் ஐயங்காருடைய ஜனங்களும் காரில் போய் உட்கார்ந்துகொண்டோம். காக்கி ஷர்ட் பேர்வழி மெதுவாக எழுந்திருந்து, கண்ணைக் கசக்கிக்கொண்டே காரண்டை வந்து, டிரைவரது ஆசனத்தில் உட்கார்ந்து, காரை ஓட்ட ஆரம்பித்தார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவர் 'டிரைவ'ராக இருப்பாரென்று நான் சிறிதேனும் சந்தேகிக்கவில்லை.

கார் புறப்பட்டது. ஸ்ரீவில்லிபுத்தூருக்கு என்று தானே நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை. எங்கள்

முன்னோர் செய்த தவப் பயன்தானோ என்னவோ, நாங்கள் மதுரை முழுவதும் ஊர்வலம் சென்றோம்! டிரைவர் புண்ணியத்தில், இப்பொழுது மதுரையில் எனக்குத் தெரியாத தெரு இல்லை. கண்டக்டரும், "ஸ்ரீவில்லிபுத்தூர், ஒரு ஆள், ஒரு ஆள்" என்று கத்திக் கொண்டே வந்தான். எங்கள் காரில் ஓர் ஆளுக்குமேல் இடமில்லை என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே! மற்றப் 'பாசெஞ்சர்'கள் எல்லாரும் காபி சாப்பிடப் போயிருப்பதாகத்தான் இன்னும் கண்டக்டர் சொல்லிக் கொண்டு வந்தான். மணி பன்னிரண்டு ஆனது அவனுக்கு ஞாபகம் இல்லைபோலும்!

கார் நிலயத்திற்குப் போனதும் அங்கேயுள்ள பாசெஞ்சர்களை ஏற்றிக்கொண்டு புறப்பட வேண்டியது தான் தாமதம் என்று டிரைவர் (காக்கி ஷர்ட் பேர்வழி) என்னைச் சமாதானப்படுத்திக்கொண்டே வந்தார்.

"உம்முடைய மீதமுள்ள இரண்டு டிக்கட் என்ன ஆச்சு?" என்று நான் டிரைவரைக் கேட்டேன்.

"மானேஜர் பொல்லாதவர், ஸார்! இதற்குள் அதையும் 'கான்ஸல்' செய்திருப்பார்!" என்றார்.

பாவம்! இப்படியே தினந்தோறும் அவருடைய டிக்கட்டுகளெல்லாம் 'கான்சல்' செய்யப்படுவதை யோசிக்கையில் பரிதாபகரமாக இருந்தது.

மணி ஒன்று அடித்தது. கார் நிலயம் வந்துசேர்ந்தது. மானேஜர் தம் சாமர்த்தியத்தினால் நாலைந்து பிரயாணிகளைச் சேர்த்திருந்தார். அவர்களையும் ஏற்றிக் கொண்டு சுமார் இரண்டு மணிக்குக் கார் மதுரையை விட்டுக் கிளம்பியது. வழியில் அநேக திருக்கண்கள். ஒவ்வொரு திருக்கண்ணிலும் குறைந்தது அரைமணி யாவது நிற்கும். இப்படியாகக் கல்லுப்பட்டி போய்ச்

சேர மணி நான்கு ஆகிவிட்டது. அதற்குத் தெற்கே பிரயாணம் வெகு 'குஷி'.

வலது பக்கம் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் வரிசை. அவற்றை மேகங்கள் வந்து முத்தமிடும் அழகிய காட்சி. இயற்கையன்னை அம் மலைகளில் நின்று கூத்தாடுகின்றாள். அவ் வனப்பைக் கண்டு களித்துக் கொண்டே செல்கையில், கீழ்ப் புறம் ஒடிந்து விழுவது போல் ஒரு குன்றும், அதன்மேல் ஒரு புராதனக் கோவிலும் தென்பட்டன. இயற்கையழகு எங்கெங்கு இருக்கிறதோ அங்கெல்லாம் தமிழர்கள் ஒரு கோயிலைக் கட்டியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் அநேகமாகக் குன்று தோறும் ஒரு கோவிலைப் பார்க்கலாம். தமிழர்களுடைய இயற்கை மோகத்தைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டே வருகையில், "அது கோபாலசாமி கோவில் ஸார்!" என்றான் கண்டக்டர்.

தூக்கத்திலிருந்து விழித்தவன்போல், "என்ன சொன்னாய்?" என்றேன்.

"கோபாலசாமி ஸ்ரீ ஆண்டாளைக் கல்யாணம் பண்ணுவதற்காக வந்தார். இந்த மலைக்குப் பக்கத்தில் வந்ததும், ஆண்டாளுக்கும் ஸ்ரீரங்க மன்னருக்கும் கல்யாணமாகிவிட்டது என்ற செய்தி அவருக்குத் தெரிந்தது. உடனே அவர் இம் மலையிலேயே தங்கி விட்டார்" என்று கண்டக்டர் சொன்னான்.

"அவர் உங்கள் பஸ்ஸில் வந்தார் போலிருக்கு? அதனால்தான் காலம் தவறிவிட்டது!" என்றேன்.

கண்டக்டர் சிரித்துக்கொண்டே, "ஏமாந்தது கோபாலசாமி மட்டுமல்ல, ஸார். திருத்தங்கல் பெருமாள், திருவண்ணாமலைப் பெருமாள், காட்டழகர், எல்லோரும் ஏமாந்தவர்கள் தாம்!" என்றான்.

"அவர்களும் உங்கள் பஸ்ஸில் சென்றிருக்கலாம்!" என்றார் ராஜபாளையத்து ஐயங்கார்.

"எல்லோருக்கும் முன்னதாகச் சென்று கல்யாணம் செய்துகொண்ட ஸ்ரீரங்க மன்னர் எந்தக் காரில் சென்றார்?" என்று நான் கேட்டேன்.

"அவர் இந்தப் பஸ் சர்விஸ்களையே நம்புவதில்லை. ஸ்ரீரங்கத்திலிருந்து நடந்தே வந்துவிட்டாராம்!" என்றார் என் பக்கத்தில் ஒருவர். "ஆசாமி கால் நடையாக உலகத்தை மூன்று தடவை சுற்றி யிருக்காராம்" என்றார் அவர் மீண்டும்.

"முயலும் ஆமையும் கதைபோல் இருக்கே!" என்றான் ஐயங்காருடைய பையன். அவன் இரண்டாம் வகுப்பு வாசிக்கிறானாம்.

"எல்லோரும் காலம் தவறுவதனால் உண்டாகும் தீமைகளைப் பற்றித்தான் பேசுகிறார்களே தவிர, ஒருவராவது அதனால் உண்டாகும் நன்மைகளைப்பற்றிப் பேசக் காணோம்!" என்றார் டிரைவர்.

"என்ன நன்மை ஐயா?" என்றேன் நான்.

"இந்தப் பஸ்களெல்லாம் பெருமாள்களைக் குறித்த நேரத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் கொண்டுபோய்ச் சேர்த்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்று சற்று யோசித்துப் பாருங்கள். ஒரு பெண்; ஐந்து மாப்பிள்ளைகள். கல்யாணப் பந்தலில் ஒரே கலாட்டா தான்!" என்றார் டிரைவர்.

மேற்கூறிய சம்பவம் நடந்து ஏறக்குறைய இரண்டு மாதங்கள் இருக்கும். மீண்டும் ஸ்ரீவில்லிபுத்தூருக்குப் போகவேண்டி இருந்தது. ரகுநாத விலாஸ் மானேஜரிடம் சென்று, "முதல் கார் எப்பொழுது போகிறது?" என்று கேட்டேன்.

"சரியாய்க் காலை 5 மணிக்குப் புறப்படும்; நீங்கள் 4-30 மணிக்கே வந்தால்தான் இடம் கிடைக்கும்" என்றார் மானேஜர்.

"என்ன ஐயா! என்னிடத்திலுமா உங்கள் கடையை விரிக்கிறீர்கள்?" என்றேன்.

"ஓ! நீங்களா? நான் யாரோ என்று நினைத்தேன். நாங்கள் என்ன ஸார் செய்வது? விருதுநகர் - தென்காசி ரெயில்வே போட்டாலும் போட்டான். எங்கள் வாயில் மண்தான். அதற்கப்புறந்தான் நான் பஞ்சதந்திரம் படிக்க ஆரம்பித்தது" என்றார் மானேஜர்.

சிரித்துக்கொண்டே, "நான் எத்தனை மணிக்கு வர?" என்று கேட்டேன்.

"நீங்கள் எதற்கும் 4-30 மணிக்கே வந்துவிடுங்கள். ஆள் சேர்ந்துவிட்டால் ஒருவேளை 5 மணிக்கே புறப்பட்டாலும் புறப்பட்டுவிடும்" என்று மானேஜர் சொன்னார்.

அவர் சொன்னதை நான் நம்பி மறு நாள் 4-30 மணிக்கே சென்று பஸ்ஸில் ஏகசக்ராதிபத்தியம் செலுத்தினேன்!

# - 12 -

## கண்டதும் காணாததும்

### 1

**சா**ந்திநிகேதனத்திலிருந்து, அன்றுதான் என் சொந்த ஊருக்குத் திரும்பி வந்திருந்தேன். நான்கு வருஷங்

களுக்குள் ஊரில் எத்தகைய மாறுதல்! முன்னால் கூரை வீடு இருந்த இடத்தில் இப்பொழுது காரைவீடும், காரை வீடு இருந்த இடத்தில் மாடிவீடுமாய் இருந்தன. நாங்கள் விளையாடின மைதானங்களில் எல்லாம் இப்பொழுது நெல் குற்றும் யந்திரங்களும், துவரை உடைக்கும் யந்திரங்களும், பஞ்சாலைகளும் நின்றன. அந்த மைதானங்களில் கிளித்தட்டும், நொண்டித்தட்டும் விளையாடிக் களித்த சிறுவர்கள் இப்பொழுது விளையாடுவதற்கு இடம் இல்லாத காரணத்தாலோ என்னவோ, பஞ்சாலைகளுக்குச் சென்றுகொண்டு இருந்தார்கள். ஆம், விருதுநகர் ஒரு பெரிய வியாபாரப் பட்டணமாகிவிட்டது. எல்லாம் நாலே வருஷங்களுக்குள்! நான் விட்டுப்போன ஊர் வேறு; இன்று வந்து காணும் ஊர் வேறு.

ஊர் வளர்வதோடு, அதிலுள்ள ஜனங்களும் வளர்கிறார்கள். ரத்தினம் என்னோடு படித்துக்கொண்டிருந்தவன். நரிபோல் மெலிந்து குள்ளமாயிருந்தான். அன்று அவனைப் பார்க்கும்போது அடையாளமே தெரியவில்லை. ஆறடி உயரம், அதற்கேற்ற பருமன். அவனுக்குக் கல்யாணமாகி, இரண்டு குழந்தைகளும் இருக்கின்றனவாம். எல்லாம் சென்ற நாலு வருஷங்களுக்குள்! நான்கு வருஷங்களுக்குள் உலகமே இப்படி மாறியிருக்கிறதா, அல்லது விருதுநகர் மட்டுந்தான் மாறியிருக்கிறதா என்று நான் ஆச்சரியமுற்றேன்.

மாலையில் கடைவீதியைச் சுற்றிப் பார்க்கலாமென்று புறப்பட்டேன். குறுகலான பழைய கடைத்தெருதான். அதில் நடமாடும் ஜனங்களோ, முன்னைவிடப் பன்மடங்கு அதிகம். முன்பு கட்டைவண்டிகளும், ஒரு மணிக்கு ஓரிரண்டு குதிரை வண்டிகளும் அக்கடைத்தெருவில்

போய்க்கொண் டிருக்கும். இது தவிர, மனித நாகரிகத்திற்கு மாசெனத் தோன்றும் கைவண்டிகளும் சில இங்குமங்கும் செல்லும். ஆனால் இப்பொழுதோ கார்களும், பஸ்களும், லாரிகளும், சைக்கில்களும் அதே ரஸ்தாவில் பறந்துகொண்டிருக்கின்றன.

கடைவீதியில் ஜனங்கள் அவசர அவசரமாகத் தேனீக்கள் போல் தங்கள் தங்கள் வேலையைக் கருதிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் அநேகர் எனக்கு முற்றும் புதியவர்கள். எஞ்சிய சிலர் எனக்குத் தெரிந்தவர்கள். காலக்கொற்றன் அவர்களுடைய உருவங்களில் புதுமைச் சாந்து பூசி வைத்திருக்கிறான்: எனினும் அப்பூச்சை ஊடுருவிப் பார்க்கையில், பழைய குப்பனையும், கந்தனையும், ரங்கனையும், ராமனையும் பார்த்தல் கஷ்டமல்ல. சிலர் என்னோடு படித்தவர்கள்; சிலர் என்னோடு விளையாடினவர்கள்; சிலர் எனக்கு அறிமுகமானவர்கள். அவர்கள் அனைவரும் என்னைக் கண்டதும் கட்டித் தழுவி க்ஷேமம் விசாரிப்பார்கள் என்று நினைத்தேன். பெரும் ஏமாற்றம்! சிலர் ஒரு கண் பார்வையால் மட்டும் தங்கள் பழக்கத்தைத் தெரிவித்தார்கள். சிலர் ஒரு புன்சிரிப்பு; சிலர் ஒரு வார்த்தை. நான் அவர்களைக் குறை கூறவில்லை. இருபதாம் நூற்றாண்டின் உலகம் அவசர உலகம். பூமி வேகமாய்ச் சுற்றுகிறதோ என்னவோ, அது வான சாஸ்திரிகளைக் கேட்டால்தான் தெரியும். ஆனால் உலகத்திலுள்ள காரியங்கள் வேகமாய் நடக்கின்றன. அது விருதுநகரில் போய்ப் பார்த்தால் தெரியும்.

ஆனால், இந்த அவசர உலகத்திலுங்கூட இரண்டொருவர் தங்கள் அன்பிற்கும் ஆர்வத்திற்கும் ஆசைக்கும் சிறிது நேரம் கண்டுபிடித்துக்

கொள்கிறார்கள். கிடைக்காவிடில் திருடிக்கொள்கிறார்கள்.

"அடே, எப்படா வந்தாய்?" என்பான் ஒருவன். "அடே, கிராப் வைத்திருக்கிறாயே?" என்று இன்னும் ஒருவன் தலை மயிரைப் பிடித்து இழுப்பான். "நீ போட்டிருந்த கடுக்கன் எங்கேடா?" என்று மற்றொருவன் காதைப் பிடிப்பான். "அடே, உனக்குத் தொந்திகூட வைத்திருக்கே?" என்று வேறொருவன் வயிற்றில் ஒரு குத்து வைப்பான். 'அவசர உலகம் இவர்களையும் அடித்துக்கொண்டு போயிருக்கக் கூடாதா? என் அப்பளாக் குடுமியையும், அழுக்கடைந்த கடுக்கனையும் ஞாபகமூட்ட இவர்களை யார் வரச் சொன்னது?' என்று நினைப்பேன். இவ்வாறு க்ஷேமம் விசாரித்துவிட்டு, அவர்களும் தங்கள் தங்கள் காரியங்களைப் பார்க்கச் சென்றுவிட்டார்கள். ஆனால், எனக்கு என்ன வேலை? படித்தவர்களுக்குத்தான் இந்தக் காலத்தில் வேலை இல்லையே! என் வழியே நான் சும்மா போய்க்கொண்டிருந்தேன்.

"என் கண்ணு வந்துட்டானே! என் பாப்பா வந்துட்டானே! என் செல்வம் வந்துட்டானே!" என்று பாடிக்கொண்டே என் முன்னால் ஒரு மனிதன் வந்து நின்றான். அவனைக் கண்டதும் நான் திடுக்கிட்டு நின்றேன். "இந்தாப்பா அரையணா; போத்தி ஹோட்டலில் உழுந்து வடை வாங்கிச் சாப்பிடு" என்றான் அம்மனிதன். பின்பு திரு திருவென்று என்னை விழித்துப் பார்த்தான். "இதா என் கண்ணு? இதா என் பாப்பா? இவன் யாரோ பெரியவனாயிருக்கிறானே! இது என் கண்ணும் இல்லை, பாப்பாவும் இல்லை. நான் உனக்கு அரையணாக் கொடுக்கமாட்டேன்" என்று ஓட

ஆரம்பித்தான். சிறிது தூரம் ஓடி நின்றான். "தியாகு! ஓரணா கேக்காதே. நான் குடுக்க மாட்டேன். தாத்தா திட்டுவாரப்பா. அரையணா வாங்கிறியா? வாங்கிக்கோ" என்று மீண்டும் என்னிடம் வந்தான். கண்களில் ததும்பிய கண்ணீரை என்னால் அடக்க முடியவில்லை. "கூடலிங்கம்!" என்றேன். "எனக்குப் பைத்தியம் பிடிச்சிருக்கின்னா அழுகிறே? நான் ஒன்னோடே பேச மாட்டேன், போ. எனக்குத்தான் பைத்தியம் பிடிக்கிலியே!" என்று சொல்லிக்கொண்டு ஓடியே போய்விட்டான்.

என்னால் மேலே செல்வதற்கு முடியவில்லை அப்படியே திரும்பினேன். மனம் சிந்தனையில் ஆழ்ந்தது கால்கள் என்னை வீட்டை நோக்கி இழுத்துச் சென்றன "எங்கேயப்பா போயிருந்தாய்? உனக்காகச் சேமியாக் கேசரி பண்ணியிருக்கேன். கால் கை கழுவு" என்று தண்ணீர் எடுக்கப் போனாள் பாட்டி. "இப்பொழுது வயிறு பசிக்கவில்லை. இன்னும் கொஞ்ச நேரம் கழித்துச் சாப்பிடுகிறேன், பாட்டி" என்று சொல்லிவிட்டு மாடிக்குச் சென்று மெத்தையில் படுத்துக்கொண்டேன் கூடலிங்கத்தின் முந்திய வாழ்க்கை என் மனத்தின் முன்னால் ஒரு படம்போல் தோன்றியது.

கூடலிங்கம் சிறுவயசு முதல் எங்கள் கடையில் வேலைக்கு இருந்தவன். எட்டு வயசாய் இருக்கும்பொழுது நாலுரூபாய் சம்பளத்திற்கு வந்தான். இருபத்தைந்து வருஷங்கள் எங்கள் கடையிலேயே உண்மையாக உழைத்தான். முதுமைப் பருவத்தில் என் தாத்தா கடைக்குப் போவதை நிறுத்திவிட்டார். வேதாந்த விசாரணையில் காலத்தைக் கழிக்க ஆரம்பித்தார்

காசுகளை எண்ணின கை கைவல்ய நவநீதத்தைப் பிடிக்க ஆரம்பித்தது. பத்து ரூபாய்க்கும், இருபது ரூபாய்க்கும் கோர்ட்டுகளுக்குச் சென்று வழக்காடிய, நா, ஞான வாசிட்டம் படிக்க ஆரம்பித்தது. நானோ சிறுவன்; தந்தையோ தனிக் குடித்தனம் நடத்திக்கொண் டிருந்தார். அக்காலமெல்லாம் எங்கள் கடையை ஒழுங்காய் நடத்தியவன் கூடலிங்கந்தான். அல்லும் பகலும் உழைத்து, எங்களுக்குச் சம்பாதித்துக் கொடுத்தான். இத்தனைக்கும் அவனுக்கு நாங்கள் கொடுத்தது மாதம் நாற்பது ரூபாய் சம்பளந்தான். என்னைச் சிறுபிள்ளையிலிருந்து எடுத்து வளர்த்தவன் அவன்தான். என்னைக் கண்டால் அவனுக்கு உயிர் நான் கடைக்குப் போகும்போதெல்லாம் எனக்குக் காசு கொடுப்பான்.

அவனுக்குக் கல்யாணம் நடந்தது. கல்யாணச் செலவில் பாதி என் தாத்தா ஏற்றுக்கொள்வதாக ஒப்புக்கொண்டார். எங்கள் வீட்டில் எல்லோரும் கல்யாணத்திற்குச் சென்றிருந்தோம். ஆனால் அவனுக்கு ஒரே ஒரு வருத்தந்தான். நாங்கள் அவன் வீட்டில் ஒரு வேளை சாப்பிடவில்லை என்பது. கெஞ்சிக் கூத்தாடினான் தாத்தா கர்நாடக மனுஷர்; சம்மதிக்கவில்லை. "தியாகு வாவது ஒரு வேளை சாப்பிடட்டும்" என்றான். எனக்கு இஷ்டந்தான். அவன் அவ்வளவு கெஞ்சிக் கேட்டுக் கொள்ளும்பொழுது சாப்பிட்டால் என்ன கெட்டுப் போகிறது என்று என் குழந்தையுள்ளம் கூறியது ஆனால் தாத்தாவின் ஆக்ஞைக்கு அஞ்சினேன்.

காலம் சென்றது. அவனுக்குச் சில குழந்தைகளு பிறந்தன. எத்தனை நாள்தான் கூலிக்கு வேலை செய்து கொண்டிருப்பான்? தனிக்கடை வைக்கவேண்டுமென்

அவனுக்கு ஆசை தோன்றியது. எனக்கும் என பாட்டிக்கும் மிகவும் வருத்தம். தாத்தாவுக்கும் வருத்தந் தான். ஆனால் வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. "அவன் போவது நியாயந்தானே? அவனுக்கும் பிள்ளை குட்டிகள் பெருகிவிட்டன. சொத்துச் சுகம் வேண்டும் என்று ஆசை இருக்கும் அல்லவா?" என்றார். கூடலிங்கமும் வேறொருவனும் பங்காகக் கடை வைத்தார்கள். அவர்கள் கடை ஆரம்பித்துப் புதுக்கணக்குப் போடும்பொழுது, என் தாத்தாவும் கூட இருந்து, கூடலிங்கத்தின் கணக்கில் இருநூறு ரூபாய் வரவு வைத்து ஆசீர்வதித்து விட்டு வந்தார். அவன் போன பிறகு எங்கள் கடை சரியாய் நடக்கவில்லை. பின்னால் வந்த வேலைக்காரர்கள் அவனைப்போல் நம்பிக்கையாய் வேலை செய்யவில்லை. ஆகையினால் நஷ்டம் ஏற்பட்டது. நாங்கள் கடையை எடுத்துவிட்டோம். கூடலிங்கம் கடை விமரிசையாய் இரண்டு மூன்று வருஷங்கள் நடந்தது. நல்ல லாபம் கிடைத்தது. அதற்கு அப்புறம்.........இது நான் சாந்தி நிகேதனத்திற்குப் போனபின் நடந்த விஷயம். என் தாத்தா ஒரு கடிதத்தில், கூடலிங்கத்தின் பங்காளி ஒருநாள் 4000 ரூபாயை எடுத்துக்கொண்டு எங்கோ ஓடி விட்டானென்றும், கூடலிங்கம் கையில் வைத்திருந்த கொஞ்ச நஞ்சம் பணத்தையும் கடன்காரர்கள் பறித்துக் கொண்டார்களென்றும் எழுதியிருந்தார். அப்பொழுது அவனுக்குப் பைத்தியம் பிடிக்கவில்லையோ, அல்லது அது எனக்குத் தெரியக்கூடாதென்று தாத்தா எழுத வில்லையோ, அவ்விஷயம் எனக்கு அன்று மாலை கடை வீதியில்தான் தெரியவந்தது.

என்ன வாழ்க்கை! என்ன உலகம்! பணத்தைத் திருடிக்கொண்டு போனவன் மனைவி மக்களுடன்

பினங்கிலோ சிங்கப்பூரிலோ சுகமாய்க் காலங் கழித்துக் கொண்டிருப்பான். ஆனுல் ஒரு பாவமும் அறியாத கூட்டலிங்கமோ பெண்டு பிள்ளைகளைத் தவிக்கவிட்டுத் தானும் பைத்தியமாய் அலைகிருன். இதற்கு ஏதாவது காரணம் உண்டா? உலகத்தில் நடக்கும் காரியங்களை மேற்பார்த்து, ஒழுங்கு செய்ய ஒரு நாயகன் இருந்தால், இத்தகைய அசம்பாவிதங்கள் சம்பவிக்குமா? நெல் விளைத்தவனுக்குப் புல்லும், புல விளைத்தவனுக்கு நெல்லும் முளைப்பதைத்தான் நாம் கண்கூடாகக் காண்கிறேம். செய்கை ஒன்று இருக்கப் பலன் ஒன்று கிடைக்கிறது. காரியத்திற்குக் காரணத்தையும், காரணத்திற்குக் காரியத்தையும் நாம் காண்பதில்லை.

இத்தகைய எண்ணங்களால் என் மனத்தில் கலவரம் ஏற்பட்டது. உள்ளம் குமுறிக்கொண் டிருந்தேன். பாட்டி சாப்பிடக் கூப்பிட்டாள். பசி இல்லை என்று சொல்லிவிட்டேன். தூங்க யத்தனித்தேன். தூக்கமும் வரவில்லை. வெகுநேரம் வரைக்கும் புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருந்தேன். பின்பு எப்பொழுது தூங்கினேனே, தெரியவில்லை.

## 2

நவராத்திரி உற்சவம் ஆரம்பமாகியது. மைசூரில் நடக்கும் தசராக் கண் காட்சிச் சாலைக்கு என்னுடைய படங்கள் சில அனுப்புமாறு எனக்கு அழைப்பு வந்தது. மைசூரில் தசரா உற்சவத்தை நான் பார்த்திராததால், சில நல்ல படங்களை எடுத்துக்கொண்டு நானே புறப்பட்டேன். வழியில் பங்களூரையும் பார்த்துவிட்டுச் செல்லலாமென்று அங்கு இறங்கி ஒரு ஹோட்டலில்

தங்கினேன். டாட்டா விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்தில் என் நண்பர் ஒருவர் இருந்தார். அவரைச் சந்திக்கலாம் என்று நான் அன்று மாலை புறப்பட்டேன். சேஷாத்திரி புரத்தினின்றும் மல்லேசுவரத்திற்குப் போகும் வழியில் ராஜா மில் இருக்கிறது. நான் அந்த ஆலையை அணுகும் பொழுது, ஆலையரக்கன் தனது பயங்கரமான வாயைத் திறந்து கத்துவதுபோல் சங்கு ஊதியது. வேலை முடிந்து விட்டது. அடுத்த நிமிஷம் எனக்கு முன்னால் ஒரு பேரிரைச்சல் கேட்டது. புற்றிலிருந்து ஈசல் கிளம்புவது போல், ஆலை வாசலினின்றும் நூற்றுக்கணக்கான ஜனங்கள் வெளியேறிக்கொண்டிருந்தனர். அவர்களுள் தாய்மாரைப் பார்க்கப்போகும் சிறுவர்கள் எத்தனையோ, குழந்தைகளைப் பார்க்கச் செல்லும் தாய்மார் எத்தனையோ! அவர்களில் ஒருவன் தன்னை ஆவலுடன் எதிர்பார்த்து நின்றுகொண்டிருக்கும் சிறுமியைப் புன்சிரிப்புடன் நெருங்கினான்.

"உனக்கு எத்தனை தடவை சொல்றது, மாரியாயி, இங்கு வரவேண்டாமென்று? நீ வராட்டா, உனக்கு நான் மிட்டாய் வாங்கிட்டு வரமாட்டேனா?"

"நான் அதுக்காக வரல்லே. உன்னை அம்மா சீக்கிரம் கூட்டிகிட்டு வரச் சொன்னா."

"ஒம்பது மணிக்குத்தானே ரெயில்? அதுக்கு இப்பவே என்ன?" என்று சொல்லிக்கொண்டே மாரியாயியை மிட்டாய்க் கடையண்டை கூட்டிச் சென்றான், அம் மனிதன்.

இதற்குள் ஆலையினின்றும் வெளியேறிய ஜனத்திரள் சிறிது சிறிதாக அநேக சந்துகளிலும் பொந்துகளிலும் போய் மறைந்தது. நான் செல்லும் வழி சரிதானா என்று நிச்சயப்படுத்திக்கொள்வதற்காக, மிட்டாய்க் கடையில்

நின்றுகொண்டிருந்த அம்மணிதனைப் பார்த்து, "டாட்டா கழகத்திற்கு எப்படிப் போவது?" என்று கேட்டேன். "இப்படித்தான் போகணும். இருங்க. நானும் இந்தப் பக்கந்தான் போகிறேன்" என்றான்.

முறுக்கு, மிட்டாய் முதலியவைகளை வாங்கிச் சிறுமியின் கையில் கொடுத்து, அவளைக் கூட்டிக்கொண்டு என்னை நோக்கி வந்தான். அவனுக்கு நடுத்தரமான வயசு. கட்டுள்ள உடம்பு. பொலிவுள்ள முகம். சிரித்த வதனத்துடன் அவன் என்னைப் பார்த்து, "உங்களுக்கு எந்த ஊர், ஐயா?" என்றான். முன்பின் அறியாத ஒரு மில் கூலியிடம் என் பூர்வோத்தரமெல்லாம் சொல்ல எனக்கு இஷ்டமில்லை. கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவேண்டுமே என்று, "திருச்சிராப்பள்ளிப் பக்கம்" என்றேன். "எனக்கும் அந்தப் பக்கந்தான்; லால்குடி. 1924-ஆம் வருஷத்து வெள்ளத்துக்கு அப்புறந்தான் நான் பெங்களூருக்கு வந்தேன்" என்று சொல்லித் தன் விருத்தாந்தம் முழுதும் வெகுநாள் பழகியவன்போல் கூற ஆரம்பித்தான். காவிரிப் பாசனத்தில் அவனுக்கு நாலு காணி வயல் இருந்ததாகவும், வெள்ளத்தில் முழுதும் மணல் மேடிட்டதென்றும், வயலில் மணலைப் போட்ட காவிரி, அவன் வயிற்றிலும் மண்ணைப் போட்டுவிட்டதென்றும் சொன்னான். "அப்பொழுது என் மனைவி எட்டு மாத கர்ப்பிணி. அவளோடு பெங்களூருக்குப் பிழைக்க வந்தேன். இன்னும் சொந்த ஊருக்குத் திரும்பவில்லை" என்றான்.

"இன்றைக்கு ஊருக்குத்தான் குடும்பத்தோடு போகிறாய்போலும்?" என்றேன்.

"இல்லை. தசராவுக்கு மைசூர் போகவேண்டுமென்று நாலைந்து வருஷமாகப் பெண்டு பிள்ளைகள் தொந்தரவு

செய்கிறார்கள். நாலு நாளைக்கு மில்லில் ரஜா. இன்றைக்கு ராத்திரி புறப்படலாமென்று இருக்கிறேன்.

உடனே மாரியாயி, "இந்த வருஷமும் ஏமாத்தப் படாது பாத்துக்கோ" என்றாள்.

நாலைந்து வருஷங்களாகத் தன்னுடைய இருபத்தைந்து ரூபாய் சம்பளத்தில் இதற்காகப் பணம் சேர்ப்பதற்கு அவன் பட்ட கஷ்டங்களைப்பற்றிக் கூறிக் கொண்டு வந்தான். மாரியாயியோ தான் மைசூரில் பார்க்கப்போகும் எத்தனையோ அதிசயங்களைப்பற்றிச் சொல்லிக்கொண்டு வந்தாள்.

பெங்களூர் நகரம் மைசூர்ப் பீடபூமியிலுள்ளது. சமுத்திர மட்டத்திற்குமேல் சுமார் 2500 அடி உயரத்தில் இருக்கிறது. பெங்களூர்த் தெருக்களில் மேடுபள்ளங்களைப் பார்ப்பது சகஜம். அம்மாதிரி மேடு ஒன்றின்மீது நாங்கள் ஏறிக்கொண்டிருந்தோம். மாரியாயி முன்னால் சென்று கொண்டிருந்தாள். நாங்கள் இருவரும் அவளுக்குப் பின்னால் சென்றோம். சிறுமி மேட்டின் உச்சியை அடைந்தாளோ இல்லையோ, "ஐயோ! கார்!" என்று அலறிக் கொண்டு ஒரு பக்கமாய் விலகி ஓடினாள். நானும் பரபரப்புடன் விலகிவிட்டேன். ஆனால் அத்தொழிலாளி விலகுவதற்குள், கார் அவனமீது ஏறிவிட்டது. நியூ மாடல் சவ்ரலட் காராகையால் சிறிதுகூடச் சத்தங்கேட்கவில்லை. அது மேட்டில் வந்துகொண்டிருந்ததால், அது வருவது ஒருவருக்கும் தெரியவில்லை. காரினுள் ஆங்கில உடை தரித்த இந்தியன் எவனோ உட்கார்ந்திருந்தான். "ஓட்டு விரைவாய்; நில்லாதே" என்று டிரைவருக்கு உத்தரவிட்டான். அது வாயுவேகமாய்ப் பறந்தது. ஜனங்களெல்லாம், "நிறுத்து! நிறுத்து!" என்று கூச்சலிட்டார்கள். ஒரு பயனும் இல்லை.

மாரியாயி துடியாய்த் துடித்தாள். என் மனத்தில் எழுந்த பிரச்னைக்கு இச் சம்பவம் ஓர் உறுதியான பதிலை அளிப்பதுபோல் இருந்தது.

தொழிலாளியின் பிணத்தைச் சுற்றி ஒரு கூட்டம் கூடியது. கூட்டத்தில் ஒருவன் பிணத்தைப் பார்த்ததும், "அட ரெங்கா, உனக்கு இந்தக் கதியா வாய்க்க வேணும்!" என்று பரிதவித்தான். கூட்டத்தில் மற்றொருவன், "எத்தனை நாளைக்குத்தான் கடவுள் பொறுத்துக்கொண்டிருப்பார்? இவன் மேஸ்திரியாயிருந்து பண்ணின அக்கிரமங்கள் கொஞ்சமா? சுப்பு நாய்க்கனை இவன் கொன்று இன்னும் ஒரு மாசங்கூட ஆகவில்லை. அரசநீதிக்குத்தான் தப்பினான்; தெய்வ நீதிக்குத் தப்ப முடிந்ததா?" என்றான்.

* * *

நான் மைசூர்க் கண்காட்சியில் வைத்த சித்திரங்கள் வருமாறு:

அருணோதயம். கிழக்கு வானம் லேசாய் வெளுத்திருக்கிறது. அதிகாலையில் பெங்களூர் அளிக்கும் மோகனக் காட்சி. மரக்கிளைகளிலிருந்து பறவைகள் இன்னிசை மீட்டுகின்றன. ஒரு வீட்டுக் கூரையின்மீது நின்றுகொண்டு செங்கதிரோன் வரவைச் சேவல் அறிவிக்கிறது.

வேறொரு பக்கம் ஒரு பெரும்பள்ளத்தில் மில் தொழிலாளிகளின் குடிசைகள். அவைகளுள் இருள் சூழ்ண்ட ஒரு குடிசையில் மண்ணெண்ணெய் விளக்கு மினுக்கு மினுக்கென்று எரிந்துகொண்டிருக்கிறது. காமப் பிசாசு உருவெடுத்து வந்ததுபோல் தோன்றும் ஒரு மனிதன்.—நான் பார்த்த அத்தொழிலாளி! அவன்

முகத்தில் காமவெறி கனல்விட்டு எரிகிறது. ஓர் இளம் பெண்ணைக் கற்பழிக்க அவன் முயல்கிருன். கணவன் தடை. காம உன்மத்தன் இடுப்பினின்றும் ஒரு கத்தியை உருவி எதிரியின் மார்பில் புதைக்கிருன். அவன், "ஐயோ" என்று அலறித் தரையில் சாய்கிருன்.

இப்படத்தின் அடியில் 'முற்பகல்' என்று எழுதினேன்.

அடுத்த சித்திரம் வருமாறு :

மேற்கு வானம் செம்பரிதியின் செஞ்சோதி வெள்ளம் பாய்ந்து, ஓர் ஒப்பற்ற மோகனத் தோற்றம் அளிக்கிறது. மேகங்களெல்லாம் செம்பஞ்சுத் திரள்களெனப் பரவிக் கிடக்கின்றன. பறவைகளெல்லாம் கூடுகளை நோக்கிப் பறந்து செல்கின்றன. குஞ்சுகள் தாய்ப்பறவைகள் வருகின்றனவா என்று கூடுகளினின்றும் தலைகளை நீட்டி நீட்டிப் பார்க்கின்றன. மேற்கு அடிவானத்தில் சூரியன் மறைந்தும் மறையாமலும் இருக்கிருன். அதே சமயம். மல்லேசுவரம் கடைத்தெரு. சிறிது தூரத்தில் ஒரு மில். புகைக்கூண்டினின்றும் கிளம்பும் கரிய புகை இருளை மேலும் அதிகரிக்கிறது. அதே தொழிலாளி! ஒரு மேடு ஏறிக்கொண்டிருக்கிருன். ஓர் அழகிய கார் வேகமாய் வந்து அவன்மீது ஏறுகிறது!

இதன் அடியில் 'பிற்பகல்' என்று எழுதினேன்.

* * *

விழித்துக்கொண்டேன். நான் நேரில் கண்டதற்கும் கனவில் கண்டதற்கும் என்ன சம்பந்தமென்று யோசித்துக்கொண்டிருக்கிறேன்.

# - 13 -

# ரெயில் வண்டியில்

## 1

மதுரை ஸ்டேஷன். இரவு பத்து மணி. திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் ராமசாமி தன் நண்பனுடன் உட்கார்ந்திருக்கிருன். ஜன்னல் கதவுகளெல்லாம் அடைக்கப்பட்டிருந்தன. பிளாட்பாரத்தின் மீது போடப்பட்டிருந்த தகரக் கொட்டகையின் மீது மழைத் துளிகள் கல்மாரி பொழிவதுபோல் சட சடவென்று விழுந்துகொண்டிருக்கின்றன. மழையுடன் வந்த புயற் காற்று, மனிதனுல் நிர்மாணிக்கப்பட்ட பொருள்களைச் சிதற அடிப்பதுபோல் அத்தனை வேகத்துடன் அடித்துக்கொண்டிருந்தது; இவ்வுலகத்தை உடைத்துச் சிதைந்து, விடும்போல் இருந்தது அதன் கொடூரம். ராமசாமி ஒரு ஜன்னல் கதவைத் திறந்தான். வாடைக் காற்று 'சில்' என்று உள்ளே வந்தது.

"ராமு, இப்படி வந்து படுத்துக்கொள்ளேன். குளிர் காற்று அடிக்கிறதே!" என்ருன் தியாகராஜன்.

ராமசாமி ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஆனுல் அவன் தியாகராஜனைப் பார்த்த பார்வையினின்றும், மீண்டும் அவனுக்கு ஏதாவது சொல்லத் தைரியம் வரவில்லை. பிளாட்பாரத்தில் ஒருவன், "மாம்பழம்! மாம்பழம்!!" என்று கத்திக்கொண்டு போனுன். வண்டியில் இருந்த குழந்தை ஒன்று மாம்பழம் வேண்டுமென்று அழுதது. 'பாவம்! குழந்தையின்

பாட்டி இறந்து விட்டாள் போலும்! குழந்தை அழுகிறது!' என்று நினைத்தான் ராமசாமி.

வண்டியும் புறப்பட ஆரம்பித்தது. தூரத்தில் இஞ்சின் 'சீட்டி' அடிக்கும் சப்தம் கேட்டது. "ஐயோ! ரெயிலுக்கும் பாட்டி இறந்துவிட்டாள்; வீரிட்டு அலறுகிறது" என்று மெல்ல முனகினான் ராமசாமி. வண்டி புறப்பட்டது. மழை மிகுந்த உக்கிரத்துடன் அடித்துக்கொண்டிருந்தது. அவன் கண்களில் கண்ணீர் த்தும்பி மாலை மாலையாக வடிந்தது. இயற்கையன்னை தன் முன்றானையை நீரில் நனைத்து அவன் கண்ணீரைத் துடைப்பதுபோல் மழை அவன் கண்களைக் கழுவியது. "நீ ஏன் அழுகிறாய்? உன் பாட்டியும் இறந்து விட்டாளா?" என்று ராமசாமி மேகத்தைக் கேட்பது பேரல் இருந்தது அவன் பார்வை.

உலகமே பாட்டியை இழந்துவிட்டதுபோல் அவனுக்குத் தோன்றிற்று. ராமசாமி ஏங்கிப் பெருமூச்சு விட்டான்.

## 2

இருபத்திரண்டு வருஷங்களுக்கு முன்னால் நடந்த விஷயம். சுந்தரி கட்டிலில் படுத்திருக்கிறாள். ஜன்னி பிறந்துவிட்டது. டாக்டர்கள் கைவிட்டு விட்டார்கள். உறவினர்கள் எல்லோரும் கட்டிலைச் சுற்றி உட்கார்ந்திருக்கிறார்கள். "யாரோ என்னைக் கூப்பிடுவது போல இருக்கிறதே!" என்கிறாள் சுந்தரி.

"ஒன்றுமில்லை, அம்மா! பயப்படாதே" என்கிறாள் சுந்தரியின் மாமியார்.

"என்னைக் கட்டிலை விட்டு இறக்கிப் போடுங்கள். நான் இனிமேல் பிழைக்க மாட்டேன்" என்கிறாள் சுந்தரி.

கட்டிலை விட்டு இறக்கிக் கீழே படுக்கப் போடுகிறார்கள். சுந்தரி பரக்கப் பரக்க விழிக்கிறாள், யாரையோ தேடுவது போல. அவளுடைய பார்வை தன் தாயின்மீது விழுகிறது. 'ஆனால் அவள் பட்டிக் காட்டில் இருக்கிறாளே. எப்படிப் படிக்க வைப்பாள்?' என்ற எண்ணம் அவளுடைய மனத்தில் உதிக்கிறது. பின்பு அவ்ளுடைய பெரியம்மா மீது அவள் பார்வை செல்லுகிறது. 'அன்பாய்த்தான் வளர்ப்பாள்; இருந்தாலும் இவளுக்குப் பிள்ளை அடங்கி, சொன்னபடி கேட்காதே' என்று நினைக்கிறாள். இறுதியில் அவள் பார்வை தன் மாமியாரின் மீது விழுகிறது.

மெல்லிய குரலில், "அத்தை!" என்று கூப்பிடு கிறாள்.

"என்ன, அம்மா?"

சுந்தரி ஒன்றும் பேசவில்லை. ஏதோ பேச யத்தனித்தாள்; ஆனால் அவள் கண்களில் கண்ணீர் ததும்பியது. பேச முடியவில்லை. கடைசியில் தன்னிடம் மீதியிருந்த சக்தியெல்லாம் சேர்த்து, "ராமு" என்றாள். அவ்வளவுதான்!

* * *

பன்னிரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன.

ராமசாமி ஒன்பதாவது வகுப்பில் படிக்கிறான். பரீக்ஷை முடிந்துவிட்டது. 'இந்த இரண்டு மாதங் களிலும் டவுன் ஹால் வாசக சாலைக்குச் சென்று, ஆங்கில நாவல்கள் நிறையப் படிக்கவேண்டும். ஆங்கில அறிவை வளர்த்து, அடுத்த வருஷம் எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷையில் ராஜதானியில் ஆங்கிலத்தில் முதன்மையாகத் தேர்ச்சிபெறவேண்டும்' என்று நினைக்கிறான் ராமசாமி.

அதன் பின்னால் சென்னை ராஜதானிக் கல்லூரியில் படிக்கவேண்டும் என்பது அவனது அவா.

ஆனால் அவனுடைய தாத்தாவின் எண்ணம் வேறு. அவருக்குப் பூர்விகமான ஒரு பலசரக்குக் கடை உண்டு. அதில் பசியென்றும் பாராமல், தாகமென்றும் பாராமல், இரவு பகலாய் உழைத்து இருபதினாயிரம் ரூபாய் சம்பாதித்திருந்தார். ஆனால் வயசு ஏற ஏற அவருடைய மனம் வேதாந்த விஷயங்களில் செல்ல ஆரம்பித்தது. இப்பொழுது நாலைந்து வருஷமாய்க் கடைக்குப் போவதையே விட்டுவிட்டார். கைவல்ய நவநீதமும் ஞான வாசிட்டமும் படிக்க ஆரம்பித்தார். ஆனால் பூர்விகமான கடையை விட மனமில்லை. அது கூடிவந்த கடை. ஆகையால் வேலைக்காரர்களைக் கொண்டு அதை நடத்திவந்தார். இப்பொழுது கடையில் லாபமில்லை. 'தன் ஆள் இல்லாத கடையில் லாபம் எப்படிக் கிடைக்கும்?' என்று தம்மைத் தாமே திருப்தி செய்துகொண்டார். இப்பொழுது ராமசாமி பெரியவனாகிவிட்டான். அடுத்த வருஷம் பத்தாவது பரீக்ஷையில் தேர்ச்சி பெற்றுவிட்டானானால், பின்னர் கடை ஒழுங்காக நடக்குமென்று மனப்பால் குடித்துக்கொண்டிருந்தார்.

ராமசாமி சாப்பிட்டுவிட்டுக் கை கழுவிக்கொண்டிருந்தான். தாத்தா கூப்பிட்டார்.

"லீவு எத்தனை மாதத்துக்கடா, குழந்தை?" என்று கேட்டார்.

"சுமார் இரண்டு மாதம்."

"இந்த இரண்டு மாதமும் கடைக்குப் போய், கடை வேலை கொஞ்சம் கற்றுக்கொள்ளேன்? அடுத்த வருஷம் பத்தாவது பாஸ் பண்ணிவிட்டால் கடைக்குத்தானே போகணும்? இப்பவே வியாபாரம் எப்படிப் பண்ணுவ

தென்று கொஞ்சம் படித்துக்கொண்டால் நல்லது அல்லவா ? " என்ருர் தாத்தா.

"நான் காலேஜுக்குப் போக விரும்புகிறேன்."

"காலேஜிக்குப் போய் பி. ஏ. பாஸ் பண்ணி என்ன செய்யப் போறே? செட்டிப் பிள்ளைக்குச் சர்க்கார் உத்தியோகம் கூடி வராது."

"நான் மேலே படிக்கத்தான் போகிறேன்" என்று பிடிவாதமாய்ச் சொன்னுன் ராமசாமி.

"அப்படியாஞல் ஒரு க்ஷணங்கூட நீ இந்த வீட்டில் இருக்க முடியாது" என்று தாத்தாவும் கண்டிப்பாய்ச் சொன்ஞர்.

ராமசாமியின் கண்களில் கண்ணீர் ததும்பியது. எப்படியோ ஆரம்பித்தது எப்படியோ முடிந்து விட்டதே என்று விசாலாக்ஷி பரபரப்புடன் பாதி சாப்பிட்டதும் சாப்பிடாததுமாக வெளியே வந்தாள். ராமசாமி வாசற்படியை விட்டு இறங்கிக் கொஞ்சதூரம் போய்விட்டான். விசாலாக்ஷி "ராமு" என்று கூப்பிட வாயெடுத்தாள். ஆனுல் தொண்டை அடைத்துக் கொண்டது. அவள் கண்களில் கண்ணீர் ததளித்தது. இதற்குள் ராமசாமி தானே திரும்பிப் பார்த்தான். பாட்டி வாசலில் எச்சில் கையுடன் நின்று அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் பார்த்த பார்வை பரிதாபமாக இருந்தது. அந்தப் பார்வையை மீறி முன்னுல் ஓர் அடி கூட எடுத்து வைக்க அவனுல் முடியவில்லை. திரும்பி வந்தான்.

"நீயும் ஏண்டா உங்கப்பனைப்போல் பிடிவாதம் செய்கிருய்? 'கடைக்குப் போறேன்' என்று சொல்லித் தொலையேன். கிழட்டு நெஞ்சம் வயிர நெஞ்சு. அடுத்த வருஷம் நீ பத்தாவது பாஸ் பண்ணிக் கடைக்குப் போகிற

போது தெரியாதா? அதற்குள்ளே யார் எப்படியோ?" என்று விக்கி விக்கிச் சொன்னாள்.

"நான் எங்கப்பா வீட்டுக்குப் போகிறேன்" என்று ராமசாமி சொல்லிப் போய்விட்டான்.

ராமசாமியின் தகப்பனார் இரண்டாவது விவாகம் செய்துகொண்டு அதே ஊரில் தனிக் குடும்பம் நடத்தி வந்தார்.

## 3

மீண்டும் சில மாதங்கள் சென்றன.

இன்று தீபாவளி. ஊரெல்லாம் கொண்டாட்டமாக இருக்கிறது. விசாலாக்ஷிக்கு ஏன் இந்தத் தீபாவளி வந்தது என்று இருந்தது.

விசாலாக்ஷிக்கு மேக வர்ணப் பட்டு எடுத்திருந்தது. அவளுக்கு உடுத்த மனமில்லை. "நான் சாவகாசமாய்க் குளித்துவிட்டுப் பிறகு உடுத்துக்கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டாள். செட்டியார் புது வேஷ்டி உடுத்துப் பலகாரம் சாப்பிட்டுவிட்டு வெளியே சென்றார். கத்திரிக் காய் பஜ்ஜி, உருளைக்கிழங்கு பஜ்ஜி, உளுந்து வடை, மசால்வடை, பாசிப்பயறு லட்டு இத்தனையும் செய்திருந்தது. விசாலாக்ஷி சாப்பிட உட்கார்ந்தாள். உளுந்து வடையைப் பிய்த்து ஒரு வாய் வைத்தாள். பற்கள் மென்று கொண்டே இருந்தன. ஆனால் உள்ளே இறங்கவில்லை. ராமசாமியின் உருவம் அவள் கண் முன்னால் தோன்றியது.

"பாட்டி, எனக்கு இன்னொரு லட்டு கொடு" என்று அவன் கைகளை நீட்டிக் கேட்பதுபோல இருந்தது.

'ஐயோ, தீபாவளி ஆச்சே! பிள்ளை ஏதானும் பலகாரம் சாப்பிட்டதோ என்னமோ? அவள் பலகாரம்

செய்தாளோ இல்லையோ? பிள்ளைக்கு அவன் அப்பன் கோடி எடுத்தானோ? அவன் கஞ்சனாச்சே!' என்று புலம்பலாக நினைத்தாள். கண்களினின்றும் இரண்டு மூன்று துளிகள் கீழே விழுந்தன. உடனே எழுந்து வாசலுக்குப் போனாள்.

"ஏ சகுந்தலா! எங்க ராமசாமியைக் கொஞ்சம் கூட்டிக்கொண்டு வரமாட்டே? உனக்குப் புண்ணியமாய்ப் போகுது!" என்றாள்.

சகுந்தலா நல்ல பெண். உடனே ஓடினாள். தெருவில் ராமசாமி பந்து விளையாடிக்கொண்டிருந்தான்.

"ஏ ராமு, ஒங்க பாட்டி உன்னை வரச் சொன்னாள்" என்றாள் சகுந்தலா.

"எதற்கு?"

"அதென்னமோ எனக்குத் தெரியாது."

"அந்த வீட்டு வாசற்படியைக் கூட இனிமேல் மிதிக்க மாட்டேன் என்று போய்ச் சொல்" என்றான்.

"அடே ராமு! இங்கே வாப்பா!"

"அதோ உன் பாட்டியே வந்துவிட்டாள், போ" என்று சொல்லிவிட்டுச் சகுந்தலா ஓடினாள்.

பிள்ளையார் கோவில் வாசற்படியில் ராமசாமி உட்கார்ந்திருக்கிறான். அவனுடைய பாட்டி மேற்படியில் உட்கார்ந்துகொண்டு அவன் கிராப்பைத் தடவிக் கொண்டிருக்கிறாள். அவன் அவள் மடியில் சாய்ந்து சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறான். திடீரென்று இரண்டு துளி நீர் கிண்ணத்தில் விழுந்தது. ராமசாமி ஏறிட்டுப் பார்த்தான். அவள் கண்களினின்றும் கண்ணீர் மாலை மாலையாக வடிந்துகொண்டிருந்தது. அதை மறைப்பதற்காக முன்றானையால் முகத்தை மூடினாள்

"என்ன பாட்டி?" என்றான்.

"ஒன்றுமில்லை. கோடி வேஷ்டி உனக்கு எடுத்திருக்கிறார்களோ?" என்று பாட்டி கேட்டாள்.

"ஆம்."

"இந்தா" என்று மடியிலிருந்து ஒரு வெண்பட்டை எடுத்து அவன் கையில் கொடுத்து, "ஒருவரிடமும் சொல்லாதே!" என்றாள்.

மறு நாள் சாதம் போட்டுக்கொண்டிருந்தபோது தாத்தா, "உன் விரலில் இருந்த மோதிரம் எங்கேடி?" என்று விசாலாக்ஷியைக் கேட்டார்.

"நேற்றுத் தண்ணீர் இறைக்கும்போது கிணற்றில் விழுந்துவிட்டது."

## 4

இரண்டு வருஷங்கள் செல்கின்றன.

"அடியே, மூட்டையைக் கட்டு! திருப்பரங்குன்றம் போவோம். நாளை தை,கார்த்திகை, ரொம்ப விசேஷமாக இருக்கும்" என்று விசாலாக்ஷிப் பாட்டியிடம் செட்டியார் சொல்லுகிறார்.

"நாளை ராமுவிற்கு முகூர்த்தம் வைத்திருக்கிறார்களே! மறந்துவிட்டீர்களோ?"

"அதுதாண்டி திருப்பரங்குன்றம் போகலாம் என்கிறேன். உள்ளூரில் இருந்துகொண்டு பேரன் கல்யாணத்திற்குப் போகவில்லை என்றால் நாலு பேர் நாலு வார்த்தை சொல்லமாட்டார்களா? புறப்படு, ஜல்தி!"

"போகாமல் இருந்தால்தானே நாலு பேர் நாலு வார்த்தை சொல்வார்கள்? போகாமல் ஏன் இருக்க வேண்டும்?"

"அந்தப் பயல் நம்மை வந்து கூப்பிட்டானா?"

"பத்திரிகை அனுப்பியிருக்கிருன் அல்லவா? அதற்கு மேல் என்ன செய்வான்? எல்லோரையும் தானே நேரில் போய்க் கூப்பிட முடியுமா?"

"அவன் வந்து கூப்பிட்டாலொழிய, நான் போக மாட்டேன்."

"அப்ப நான் மட்டும் போகிறேன்."

"என்னைச் சுடுகாட்டில் கொண்டுபோய் வைத்து விட்டுப் போ."

* * *

ராமசாமியின் வீட்டில் கொட்டும் மேளமும் ஆர்ப்பாட்டமாக இருக்கின்றன. நூற்றுக்கணக்கான ஜனங்கள் வந்திருக்கிருர்கள். காலை 9-30 மணிக்குத் திருமங்கல்யதாரணம். பெண்ணும் மாப்பிள்ளையும் மணவறையில் உட்கார்ந்துகொண்டிருக்கிருர்கள். மணி 9-15 ஆகிவிட்டது. எல்லாக் கிரியைகளும் முடிந்து விட்டன. திருமங்கல்யத்தை எல்லோரும் ஆசீர்வதித்துக் கொடுத்துவிட்டார்கள்.

கெட்டி மேளம் கொட்டுகிறது. ஐயர் ராமசாமியிடம் திருமங்கல்யத்தைக் கொடுக்கிருர். ஆனல் இன்னும் அவன் பெண் கழுத்தில் கட்டவில்லை. சுப முகூர்த்தம் தவறிவிடுமே என்று ஐயர் அவசரப்படுத்துகிருர். ராமசாமி திருமங்கல்யத்தைக் கையில் வைத்துக்கொண்டு தயங்கிக் கொண்டிருக்கிருன். அவன் கண்களில் கண்ணீர் ததும்புகிறது. யாருடைய ஆசீர்வாதத்துக்காக இவ்வளவு நேரம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தானே, அவள் இன்னும் வரவில்லை!

திடீரென்று, "ராமூ!" என்று கூப்பிட்டுக் கொண்டே, கூட்டத்தை இடித்துத் தள்ளிவிட்டுக்

கொண்டு ஒரு கிழவி மணவறைக்கு முன்னால் வருகிறாள். அவள்தான் விசாலாக்ஷிப் பாட்டி! ராமசாமி உடனே திருமங்கல்யத்தை அவளிடத்தில் நீட்டுகிறான். அவள் என்ன சொல்லி ஆசீர்வாதம் செய்வாள்? அவளால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. அவளுடைய கண்கள் இரண்டு நீர்த் துளிகளைச் சொரிந்தன. அவ்வளவுதான் ராமசாமி விரும்பியதும்.

## 5

மூன்று வருஷங்களுக்குப் பின்.

செட்டியார் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார். "வருகிற வெள்ளிக்கிழமை மதுரையில் தெப்பத் திருநாளாம்" என்று விசாலாக்ஷிப் பாட்டி சொன்னாள்.

"ஆம், அதற்கு இப்ப என்ன?"

"நானும் உங்களை மாலையிட்டு முப்பது வருஷமாச்சு. ஒரு தேரா திருவிழாவா ஒன்றும் கிடையாது. நான் அப்படி வரம் வாங்கி வந்திருக்கிறேன்."

"இப்ப என்ன சொல்கிறாய்? தெப்பத் திருநாளுக்குப் போகவேண்டும் என்கிறாயாக்கும்!"

"ஆம்."

"சரி, அதற்கென்ன? இரண்டு பேரும் போவோம்."

"நீங்களும் வந்துவிட்டால், வீட்டைப் பார்த்துக் கொள்வது யார்? மாடு கன்று இருக்கிறதே, அவைகளை என்ன செய்வது? மேலும் நாம் இருவரும் போனால், 'புது மாப்பிள்ளையும் புதுப் பெண்ணும் திருவிழாப் பார்க்க வந்திருக்கிறார்கள்' என்று ஊரார் சிரிக்கப் போகிறார்கள்!"

"நான் முதலிலேயே அப்படித்தான் நினைத்தேன். அந்தப் பயலுக்கு நாளைக்குச் சாந்தி கல்யாணம்.

அதற்காக மதுரைக்குப் போகணும் என்கிருய். உண்மை அதுதானே?"

"ஆம், சாந்தி முகூர்த்தத்திற்குத்தான் நான் போகிறேன். பொய் எதற்காகச் சொல்ல வேண்டும்? எனக்கு ஐம்பது ரூபாய் கொடுங்கள்."

செட்டியார் மனம் சிறிது இரங்கியது. "தொலை, தொலை! எதை வேண்டுமானாலும் தொலை. அவன் என்ன உனக்கு மூட்டை மூட்டையாய்க் கட்டிக் கொடுக்கப் போகிருன் என்று நினைத்து இத்தனையும் செய்கிருயோ, தெரியவில்லை."

"பூமி ஏதோ தனக்குக் கொடுக்கப்போகிறது என்று நினைத்துக்கொண்டா மேகம் மழை பெய்கிறது?"

"வட்டியும் முதலும் சேர்த்து அது கடலிலிருந்து உறிஞ்சிக்கொள்கிறதடி. உனக்குத் தெரியாதா?" என்ருர் செட்டியார். செட்டியாருக்குக் கொடுக்கல் வாங்கல் வியாபாரம் அதிகம் உண்டு.

## 6

இது நாலு நாளைக்கு முன்ஞல் நடந்த விஷயம்.

சித்திரை மாதப் பிறப்பு. அடை மழை பிடித்துக் கொண்டதுபோல், அன்று காலையிலிருந்து மத்தியான்னம் வரையில் நல்ல மழை. வருஷத்துக்கொரு நாள் வருஷப் பிறப்பாச்சே, குளிக்காமல் இருக்கக்கூடாதே என்று விசாலாக்ஷிப் பாட்டி கிணற்றில் குளித்துவிட்டு வந்தாள். பலத்த மழை அடிக்கிறது. நனைந்துகொண்டே வந்தாள். நன்ருய் ஜலதோஷம் பிடித்துக்கொண்டது. அன்றிரவே மண்டை இடியும் காய்ச்சலும் வந்தன. டாக்டர் வந்து, "டபிள் நிமோனியா" என்ருர்.

"ராமுவுக்குத் தந்தி கொடுத்தீர்களா?" என்று கேட்டாள் விசாலாக்ஷிப் பாட்டி.

"அந்தப் பயல் வரமாட்டான்" என்றார் செட்டியார்.

"நீங்கள் தந்தி கொடுங்கள்" என்றாள் பாட்டி.

மறுநாள் காலை ஜுரம் முற்றிவிட்டது. புலம்ப ஆரம்பித்துவிட்டாள்.

"ராமு இப்ப வீட்டுக்குள் வந்தாப்பலே இருந்ததே. அதற்குள்ளே எங்கே போனான்? ராமூ! ராமூ! இன்னும் வரவில்லையா?........." அவ்வளவுதான்.

விசாலாக்ஷிப் பாட்டிக்குச் சொர்க்கவாசல் திறந்து விட்டது. சுவர்க்க வாசலில் சுந்தரி நின்று பூமாரி பொழிந்துகொண்டிருந்தாள். "வாருங்கள், அத்தை" என்று மாமியாரை வரவேற்றாள்.

## 7

திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் காற்றாய்ப் பறக்கிறது. காற்று, 'ஜில் ஜில்' என்று அடிக்கிறது. ராமசாமி ஒரு பெஞ்சியில் படுத்திருக்கிறான். கனவு காண்கிறான்.

உலகத்தின் ஒரு மூலையில் ஒரு மாமரம் தனியாக இருக்கிறது. அதைச் சுற்றிலும் கனத்த இருள். அதன் ஒரு கிளையில் மட்டும் பிரகாசம் கண்ணைப் பறிக்கிறது. அக்கிளையில் ஒரு பழம், ஒரு காய். பழம் காயைப் பார்த்துச் சொல்லுகிறது :—

"நான் இன்று போகிறேன்."

காய் கேட்கிறது :—"எங்கே போகிறாய்?"

"நான் பழுத்துவிட்டேன். என்னைக் கூப்பிடுகிறான்."

"என்னையும் கூடக் கூட்டிக்கொண்டு போ."

"உன்னை இன்னும் அவன் கூப்பிடவில்லை."

“நீ போன பின்பு நான் எப்படி இங்கே தனியாய் இருப்பேன்?”

“இப்போது உனக்குப் பயம் இல்லை. நான் சென்று வருகிறேன்.”

பழம் பொத்தென்று தரையில் விழுந்தது.

அரைத் தூக்கத்தில் இருந்த ராமசாமியின் உதடுகள் மெல்ல அசைந்தன. “பாட்டி இறந்துவிட்டாள்” என்று மெல்லிய குரலில் சொன்னான்.

ரெயிலின் வேகம் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்தது. தியாகராஜன் ராமசாமியை எழுப்பினான்.

“ராமு! ஸ்டேஷன் வந்துவிட்டது, எழுந்திரு!”

ராமசாமி எழுந்திருந்தான். “பாட்டி இறந்து விட்டாளா? நிஜமாகவா?” என்று கேட்டான்.

## - 14 -

## “ மீண்டும் குழந்தையாக்கு!”

கோயம்புத்தூரிலிருந்து இரவு 7-10 மணிக்கு மேட்டுப்பாளையத்திற்குப் புறப்படும் ரெயில் வண்டிமீது எனக்கு எப்பொழுதுமே வெகுப் பிரியம். விசேஷ வேலை ஒன்றும் இல்லாவிட்டாலும், அந்த ரெயிலில் பிரயாணம் செய்யும் ஆனந்தத்திற்காகவே நான் பெரியநாய்க்கன் பாளையம் வரை அடிக்கடி போய்விட்டு வருவது வழக்கம். வெள்ளிக்கிழமை. பள்ளிக்கூட வாரத்தின் கடைசி நாள். பெரியநாய்க்கன்பாளையத்திற்குச் செல்லலாம் என்று ஓர் ஆசை எழுந்தது. ரெயில் கோயம்புத்தூர் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்ததும், ஜன்னலண்டை ஒரு பெஞ்சியில்

சௌகரியமாய் உட்கார்ந்துகொண்டேன். ரெயில் புறப்பட்டது.

நீலகிரி மலைத்தொடரிலிருந்து, இனிமையான காற்று மனோகரமாய் வீசிக்கொண்டிருந்தது. அந்த மந்தமாருதத்தின் முழு இன்பத்தையும் அநுபவித்துக்கொண்டே, பின்னால் சாய்ந்தேன். கண்கள் மூடின; ஆம், புறக் கண்கள் மூடின; அகக் கண்கள் திறந்தன. வண்டி வேகமாய் ஓடிக்கொண்டிருந்தது. வேகமாய் ஓடும் ரெயிலில் பிரயாணம் செய்யும்பொழுதெல்லாம், என் மனத்தில் உயரிய எண்ணங்களும் சிறந்த சிந்தனைகளும் தோன்றுவது வழக்கம்.

எதிர்பாரா விதமாய்த் திடீரென்று என் சிந்தனை கலைந்தது. கண் விழித்தேன். ஒரு பிச்சைக்கார வாலிபன் பாடிக்கொண்டிருந்தான். பதினேழு, பதினெட்டு வயசு இருக்கலாம். உடம்பில் ஒன்றும் இல்லை. இடுப்பில் மட்டும் ஓர் அழுக்குத் துணி உடுத்திருந்தான். அதுவும் அநேக இடங்களில் கிழிந்திருந்தது.

அவன் பாடிய பாட்டில் சொற்சுவை பொருட்சுவை அதிகம் இருந்ததாகச் சொல்ல முடியாது. சந்தத்தையே பெரிதாகக் கருதி, பொருளைச் சிறிதும் கவனியாது, பதங்களைச் சேர்த்து இயற்றப்பட்டிருக்கும் அப்பாட்டு மிகக் கீழ்த்தரமானது. ஆயினும் அன்று அவன் பாடிய போது, அது என்னை மிகவும் வசீகரித்தது. அவன் குரலில் ஒரு சக்தியும் இனிமையும் இருந்தன. மந்த மாருதத்தில் இனிய ஒலி அலைகளை எழுப்பிக்கொண்டு, அது எங்கள் காதில் மோதியது. "பாரதத் தாய் வீரசக்தியாலே உதித்தோம்" என்று அவன் பாடியபொழுது என் உடம்பெல்லாம் சிலிர்த்தது. பின்பு அவன் தாளம் போட ஆரம்பித்தான். வயிற்றுக்குத் தாளம் போடும் வாலிபன்,

வயிற்றிலேயே தாளம் போட்டது மிகப் பரிதாபகரமாக இருந்தது. அடித்து அடித்து அவன் வயிறெல்லாம் காய்ந்திருந்தது.

"இந்தியர்க்குச் சொந்தமா யிருந்த பொன்னாடு" என்று அவன் உருக்கமாய்ப் பாடிய சமயம் இந்தியாவின் அடிமைக் கதை முழுவதும் என் கண் முன்னால் தோன்று வதுபோல் இருந்தது. "ஏழை மக்கள் வாடுகின்ற சில நன்னாடு" என்று அவன் பாடியபோது என் கண்களில் கண்ணீர் ததும்பியது. வாலிபனது ஏழைமைத் தோற்றமே அந்த அடிக்கு உயிர்ச் சித்திரமாய் விளங்கியது. பாட்டு முடிந்தது. ஏன் அதற்குள் முடித்து விட்டான் என்று வருந்தினேன்.

"கதரைப் பற்றி ஆயிரம் பிரசங்கங்கள் கேட்டாலும், இந்த ஒரு பாட்டுக்குச் சமானமாகாது, ஸார்" என்றார் ஒருவர்.

அந்த அபிப்பிராயத்தைப் பூர்ணமாய் அங்கீகரிக்க எனக்கு இஷ்டமில்லை. ஆகையால் மௌனமாய் இருந்தேன்.

கையில் இரண்டு மூன்று காலணாக்களைக் குலுக்கிக் கொண்டு, வாலிபன் ஒவ்வொருவரிடமும் சென்று, காசு கேட்டு வந்தான். அங்ஙனம் இருக்கையில், திடீரென்று டிக்கட் பரிசோதகர் ஒருவர் வண்டிக்குள் நுழைந்தார். வெண்ணெய் திரண்டு வரும்போது, தாழி உடைந்தது போல ஆயிற்று. வாலிபன் திடுக்கிட்டு நின்றான்.

"எஸ். ஐ. ஆர். கம்பெனிக்கு இவர்களெல்லாம் ஸ்வீகார புத்திரர்கள், ஸார்!" என்று சொல்லிக் கொண்டே கையை நீட்டினார்.

"ஜன சமூகத்தின் சட்ட பூர்வமான புத்திரர்கள்

என்று ஏன் சொல்லக் கூடாது?" என்றேன் நான்.

நான் ஏதோ ஹாஸ்யமாகச் சொல்லிவிட்டேன் என்று அவர் 'கட கட' என்று சிரிக்க ஆரம்பித்தார். நான் சொல்லியது அவருக்கு விளங்கவில்லை என்று அறிந்துகொண்டேன். பேசாமல் டிக்கட்டை எடுத்துக் காண்பித்தேன். பிரயாணிகளின் டிக்கட்டுகளை எல்லாம் பரிசோதித்த பிறகு, பையனுடைய கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு, ஒரு பெஞ்சியில்போய் உட்கார்ந்தார்.

"எங்கேடா ஏறிணுய்?"

"கோயமுத்தூரில், எசமான்!"

"டிக்கட் ஏண்டா எடுக்கவில்லை?"

பாவம்! பையன் இதற்கு என்ன பதில் சொல்வான்? மௌனம் சாதித்தான்.

"உங்கப்பன் வீட்டு ரெயிலாடா, டிக்கட் இல்லாமல் போவதற்கு?" என்று சொல்லிக் கன்னத்தில் 'பளீர்' என்று ஓர் அறையும் கொடுத்தார்.

"சாமி! சாமி! அடிக்காதிங்க சாமி!" என்று கெஞ்சிஞன் வாலிபன்.

"காசு எவ்வளவடா வைத்திருக்கிருய்?"

"ஒண்ணே காலணு, சாமி!"

"கொடு இங்கே!"

பையன் சற்றுத் தயங்கிஞன். மீண்டும் ஓர் அறை கன்னத்தில் விழுந்தது.

"சாப்பாட்டுக்கு ஒண்ணுமில்லை, சாமி!"

"கொடுடா இங்கே!" என்று அதட்டிஞர் டிக்கட் பரிசோதகர். காலணுக்கள் ஐந்தும் அவர் கையில் வந்து சேர்ந்தன.

"இவ்வளவுதாஞ?"

"ஆமாங்க சாமி."

"உள்ளதைச் சொல்."

"சத்தியமாய்ச் சொல்கிறேன், எசமான்."

"திருட்டுப் பயலே! உங்கள் சங்கதியெல்லாம் எனக்குத் தெரியுமடா! எங்கே வேஷ்டியை உதறு, பார்ப்போம்."

பையன் வேஷ்டியை உதறிக்கொண்டே, "ஒண்ணு மில்லே எசமான்" என்றான்.

"பொய் சொல்லி, ராஸ்கல்! பின்னாலிருக்கும் முடிச்சு என்னடா?."

"பொடிமட்டை எசமான்,"

"உனக்குப் பொடிமட்டை வேறு கேடா? எங்கே அவிழ் பார்க்கலாம்."

"வேறே ஒண்ணுமில்லே, சாமி."

"எடுடா, பார்க்கலாம்."

பையன் குடலில் நெருப்பு விழுந்ததுபோல இருந்தது.

"இன்னும் அவிழ்க்காமல் இருக்கிறாயா?" என்று ஓர் அறை அறைந்தார் டிக்கட் பரிசோதகர்.

"சாமி! சாமி!" என்று சொல்லிக்கொண்டு அவன் அம்முடிச்சை அவிழ்த்து, ஒரு பொடி மட்டையை வெளியில் எடுத்துக் காட்டினான்.

"நீ கெட்ட கேட்டுக்கு உனக்குப் பொடி வேறு." பையன் கன்னத்தில் மீண்டும் ஓர் அடி விழுந்தது. அடி விழுந்த அதிர்ச்சியில் பொடிமட்டை கீழே விழவே, 'கலீர்' என்று சத்தம் கேட்டது. டிக்கட் பரிசோதகர் திடுக்கிட்டுக் குனிந்து அதை எடுத்தார். அதற்குள் இரண்டணாச் சில்லறையாக ஒன்றரை ரூபாய் இருந்தது!

அதைக் கண்டதும், "திருட்டுப்பயலே!" என்று பையனை ஒரு மிதி மிதித்தார்.

"பொய் சொல்லும் பயல்களைக் கண்டால், எனக்குக் கொஞ்சமேனும் பிடிப்பதில்லை, ஸார்!" என்றார் என்னைப் பார்த்து.

"வாஸ்தவம். திருட்டுப் பயல்களைக் கண்டாலும் எனக்குப் பிடிப்பதில்லை" என்றேன் நான்.

இதற்குள் பெரியநாய்க்கன்பாளையம் வந்து விட்டது. பிச்சைக்காரனுடைய கேஸ் இன்னும் முடிய வில்லை. ஆகையினால் நான் தூங்குபவன்போல் பாசாங்கு செய்தேன்.

மெல்லிய மலைக்காற்று, ரெயிலின் 'கடகட'ச் சத்தம், நடுநடுவே டிக்கட் பரிசோதகரின் உறுமல், வாலிபனின் பரிதாபக் குரல், இடை யிடையே ஏக்கம், பெருமூச்சு, ஒரு குழந்தையின் அழுகை, தாயின் அதட்டல், ஒரு கிழவனின் இருமல் - இவை ஒன்றையும் கவனியாது, மனிதனை விதி இழுத்துக்கொண்டு போவதுபோல, ரெயில் எங்களை இழுத்துச் சென்றது.

"மேட்டுப்பாளையம்! மேட்டுப்பாளையம்!" என்று ஒரு போர்ட்டர் கத்தினான்.

நான் திடுக்கிட்டு எழுந்தேன். டிக்கட் பரிசோத கரையும் பிச்சைக்காரனையும் காணவில்லை. விரைவாக இறங்கிப் பிளாட்பாரத்தில் எங்கும் தேடிப் பார்த்தேன். காணவில்லை. கடைசியில் ஸ்டேஷனின் ஓர் ஓரத்தில் இரண்டு உருவங்கள் இருளில் நிற்பதைக் கண்டு அவற்றை அணுகினேன்.

"தீபாவளிக்குப் புதுத் துணி வாங்குவதற்காகக் கால் கால் அணுவாகச் சேர்த்து வைத்த காசு!" என்று அழுதான் வாலிபன்.

பாம்பின் வாயில் அகப்பட்ட தவளை எங்கேயாவது

மீளுவது உண்டா? கடைசியில் ஒன்றும் பிரயோஜன மில்லை என்று கண்டதும், "இன்னைக்கி முழுதும் ஒண்ணும் சாப்பிடவில்லை, எசமான். இட்டிலி வாங்குவதற்கு அரையணுவாவது கொடுங்க, சாமி" என்று கெஞ்சினுன். டிக்கட் பரிசோதகர் காதில் ஒன்றும் விழவில்லை. பேசாமல் போய்விட்டார். வாலிபன் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு சென்றுன். என் கையிலிருந்த சொற்பக் காசை அவன் கையில் கொடுத்து விட்டு நான் ஊருக்குள் போனேன்.

* * *

பேட்டுப்பாளையம் எனக்குப் புதிது. படுப்பதற்கு இடம் அகப்படாமல் தெருத் தெருவாய் அலைந்தேன். கடைசியில் ஒரு வீட்டுத் திண்ணை சிறிது செளகரியமாய் இருப்பது கண்டு, அங்கே சென்று உட்கார்ந்து, சிறிது நேரம் அன்று ரெயிலில் நடந்த சம்பவத்தைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தேன். உள்ளே யாரோ ஒருவர் பேசும் சப்தம் கேட்டது.

"கனகம், உனக்கு ஒரு பட்டுப் பாவாடைக்குத் துணி வாங்கிக்கொண்டு வந்திருக்கிறேன், பார்த்தாயா?"

"எங்கே, அப்பா!" என்று சொல்லிக்கொண்டு ஒரு குழந்தை சந்தோஷமாய் ஓடிவந்தது.

குழந்தை துணியைப் பார்த்ததும் குதூகலத்துடன், "இதோடு எனக்கு அஞ்சு பட்டுப் பாவாடை யாகுது, ஏனப்பா" என்று கூத்தாடியது. பின்பு திடீரென்று ஏதோ ஒரு விஷயம் ஞாபகம் வந்ததுபோல், சொல்ல ஆரம்பித்தது: "இன்னைக்கி ஒரு விசேஷம், அப்பா. எனக்கு ஜிலேபி வாங்குவதற்கு அம்மா ஒரு அணுக் கொடுத்தாள். உடனே நான் கடைவீதிக்கு ஓடினேன்.

அங்கே ஒரு பிச்சைக்காரன், பாவம்! அழுதுகொண்டிருந்தான். 'ஏண்டா அழறே?' என்று கேட்டேன். அதற்கு அவன் என்ன சொன்னான், தெரியுமா அப்பா? இன்னைக்கி அவன் ரெயிலில் வந்துண்டிருந்தானும். அவன் கிட்ட டிக்கட் இல்லையாம். அதுக்காக அவன் தீபாவளிக்கு வேஷ்டி வாங்க வெச்சிருந்த ஒண்ணரை ரூபாயைப் பிடுங்கிக்கொண்டார்களாம். 'ஏண்டா உங்கப்பா டிக்கட் வாங்காம விட்டா?' என்று நான் கேட்டேன். 'எனக்கு அப்பா அம்மா யாருமில்லே' என்று அவன் சொன்னான். அப்பா! பின்னே அவன் எப்படி அப்பா டிக்கட் வாங்குவான்? எனக்கும் அம்மாவுக்கும் நீதானே டிக்கட் வாங்கித் தரே? நீ இல்லாட்டா நான் டிக்கட் வாங்காமத் தானே போவேன்? அப்போ, ரெயில்காரன் நான் போட்டிருக்கிற வளையல், சங்கிலி இதெல்லாம் பறிச்சிக்குவானு, என்ன? அதென்ன நியாயம்? நீயும் அந்த ரெயில்தானே வேலே பாக்கிறே? ரெயில்காரங்கிட்ட இதெல்லாம் நீ சொன்னு என்னப்பா?"

குழந்தையின் தந்தை சிறிது நேரம் மௌனமாக இருந்தார். "அப்புறம் நீ என்ன பண்ணினே? ஜிலேபி வாங்கிண்டு வந்திட்டாயா?" என்று கேட்டார்.

"அதென்னப்பா அப்படிக் கேக்கிறே? அவன் அழுத அழுகையைப் பாத்தா, நீயானு அங்கேயே அவனுக்கு ரெண்டு வேஷ்டி எடுத்துக் கொடுத்திட்டு வந்திருப்பே. நீ நிறையக் காசு வச்சிருக்கே. நான் என்னப்பா பண்றது? அம்மா கொடுத்த ஒரணாத்தான் இருந்தது. அதை அவன் கையிலே கொடுத்து, 'இந்தா, இப்ப ஒரணா வச்சுக்கோ, நாளை எங்க அப்பாட்டயாவது அம்மாட்டயாவது ஒரு ரூபாய் வாங்கிண்டு வந்து ஒனக்குத் தரேன்' இன்னு

சொல்லிட்டு வந்தேன். நாளைக்கு ஒரு ரூபாய் தரயா, அப்பா?"

இந்தச் சமயம் இன்னொரு குரல் கேட்டது. பேசியது குழந்தையின் தாய் போலும். "ஏண்டி, கனகம்! ஜிலேபி அங்கேயே சாப்பிட்டுவிட்டேன் இன்னு சொன்னியே. எங்கிட்டப் பொய்தானே சொன்னே?"

தாய் சொன்னதைச் சிறிதும் கவனியாமல், "நாளைக்குத் தரயா, அப்பா?" என்று மீண்டும் கேட்டது குழந்தை.

"என் கண்ணே! நாளை ஒனக்கு இரண்டு ரூபாய் தருகிறேன், அம்மா. அந்தப் பிச்சைக்காரனுக்குக் கொடு" என்று தழுதழுத்த குரலில் தந்தை சொன்னார்.

நான் ஆச்சரியமுற்றேன். அந்தக் குழந்தையையும், அதன் தந்தையையும் பார்க்க ஆவலுற்று, ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தேன். குழந்தையின் முகம் மல்லிகைப் பூப்போல மலர்ந்திருந்தது. அதன் தந்தையின் முகத்தை என்னால் பார்க்க முடியவில்லை. அவருடைய முதுகுதான் என் பக்கம் இருந்தது. களி பொங்கிய கனகத்தின் முகத்தில், திடீரென்று ஒரு மாறுதல் ஏற்பட்டது. மிக்க ஆச்சரியத்துடன், "ஏனப்பா நீ அழறே?" என்று கேட்டது.

"ஈசா! என்னை மீண்டும் குழந்தையாக்க மாட்டாயா?" என்று விம்மல்களுக்கும் விக்கல்களுக்கும் இடையே தந்தை பிரலாபித்தார்.

## - 15 -

# சத்திய யுகம்

சத்திய யுகம் பிறக்கப்போகிறது என்று சொல்கிறவர்களைக் கண்டால் எனக்குக் கோபம் பொங்குகிறது. இதோ இந்தச் சம்பாஷணையைப் பாருங்கள். நான் களைப்பு மேலீட்டினால் சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டிருந்தேன். சகுந்தலா பால் வாங்கிக்கொண்டிருந்தாள்.

"பால் பச்சைத் தண்ணியா இருக்கு! வரவர ரொம்ப மோசம்! நாளைக்கு இப்படி இருந்தால் வேறே பால்காரி தான் பார்க்கணும்" என்றாள் சகுந்தலா.

"இப்படிச் சொல்லாதிய அம்மா, எங்க நாய்க்கர் காதில் இது விழுந்தால் மனங்கொதிச்சுப் போவார்" என்றாள் பால்காரி.

"நீ வேறு யாரை வேணுமானாலும் ஏமாற்றி விடலாம். ஆனால் என்னை ஏமாற்ற முடியாது. நானும் பால்மாடு வச்சுக் கறந்து பழகினவள் தானே?"

ஆனால் எங்கள் பால்காரி விடும் பாலில் தண்ணீர் இருக்கிறதென்று கண்டுபிடிப்பதற்கு முன் பின் பழக்கம் தேவை இல்லை.

"நான் இனி என்ன சொல்வது, போங்க. என்ன சொன்னாலும் உங்களுக்கு நம்பிக்கை ஏற்பட மாட்டேன் என்கிறதே?"

"நாங்களும் உன்னைப்போல் பால் விற்றிருக்கிறோம்; என்றாலும் இப்படியா? எங்கப்பா ஒரு சொட்டுத் தண்ணீர்கூட விடச் சம்மதிக்கமாட்டார்!"

"நாய்க்கர் பால் கறக்கும்போது நீங்க நேரில் வந்து

பாரததாலொழிய உங்களுக்குச் சமாதானப்படாது. காம்பு கழுவின தண்ணியில் ஒரு துளி இருந்தாலும் கீழே கொட்டிவிட்டுக் கறப்பாரம்மா! நீங்க என்ன என்னமோ பேசிறீய? ஆள் தரந் தெரியாம இப்படிப் பேசாதீங்கம்மா. பாவம் சிறிசுதானே. கண்டபடி பேசிவிடுது" என்று என் மனைவிக்குப் புத்திமதியும் சொல்லிவிட்டுச் சென்றாள் பால்காரி.

இந்தச் சம்பாஷணையைக் கவனித்துக்கொண்டே யோசனையில் ஆழ்ந்த நான் பிரயாண அலுப்பினால் அப்படியே சாய்வு நாற்காலியில் சற்று அயர்ந்து தூங்கி விட்டேன். சிறிது நேரத்திற்குப்பின் என் மனைவி சூடான காப்பியைக் கொண்டுவந்து முன்னால் வைத்த சத்தத்தில் தான் விழித்தேன். அதைக் கொஞ்சங் கொஞ்சமாக ருசித்துக் குடித்தேன். ஆனால் அப்படிக் குடிப்பதற்கு அதில் அதிக ருசி இல்லை. பால் நன்றாக இருந்தால்தானே காப்பி நன்றாக இருக்கும்? ஆனால் அத்தகைய பாலில் தான் தண்ணீர் விடவில்லை என்று அவள் சத்தியம் செய்வதற்குத் தயாராக இருந்தாள்!

"நாளைக் காப்பிக்குச் சர்க்கரை இல்லையே" என்றாள் சகுந்தலா.

"அதற்கு என்ன, வாங்கி வந்தால் போகிறது" என்று அங்கவஸ்திரத்தை எடுத்துப் போட்டுக்கொண்டு வேண்டா வெறுப்பாய்க் கிளம்பினேன்.

பால்காரி வீட்டைத் தாண்டிச் செல்கையில், நாய்க்கரும் அவளும் பேசிக்கொண்டிருப்பது கேட்டது. சற்றுக் கவனித்தேன்.

"ஒரு சொட்டுத் தண்ணிகூட விடப்படாதின்னு நான் செம்பைக் கவிழ்த்துவிட்டுக் கறக்கிறதென்ன, நீ இப்படித் தண்ணி விடுகிறதென்ன, இது கடவுளுக்குப்

பொறுக்குமா?'' என்று நாய்க்கர் சொல்லிக் கொண்டிருந்தார்.

"உங்களுக்கு உழுகத் தெரியும், விதைக்கத் தெரியும், பால் விக்கத் தெரியுமோ? உங்கள் சோலியைப் பார்த்துக் கொண்டு பேசாமல் இருங்கள்'' என்றாள் நாய்க்கரின் மனைவி. நாய்க்கரும் பெட்டிப் பாம்பாய் அடங்கி விட்டார்.

பால்காரி என் மனைவியிடத்தில் சொல்லிய வார்த்தைகள் முற்றும் உண்மை என்று அப்பொழுது தான் விளங்கியது.

அன்று காலையில் நடந்த இன்னொரு சம்பவம் எனக்குத் திடீரென்று ஞாபகம் வந்தது. நான் என் மாமனார் வீட்டிற்குச் சென்றிருந்தேன். என் மாமனாருக்கும் மாமியாருக்கும் நடந்த ஒரு சம்பாஷனையைத் தற்செயலாய்க் கேட்க நேர்ந்தது.

"நீ இப்படிப் பாலில் தண்ணீர் கலந்து விற்பது எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. கால்படி தண்ணீர் ஊற்றுவதனால் நீ கோட்டையா கட்டிவிட முடியும்? ஏன் இந்தப் பேராசை? சகுந்தலா இருக்கும் போது ஒரு துளி தண்ணீர்கூட விடமாட்டாளே!'' என்றார் சகுந்தலையின் தந்தை.

"சகுந்தலை தானே, ஆமாம்! ஒண்ணுக்குப் பாதிதான் தண்ணீர் விடுவாள். அதற்குமேல் விடமாட்டாள்! அநாவசியமாகப் பெண்கள், விஷயத்தில் ஏன் தலையிடுகிறீர்கள்? உங்கள் பேனா உண்டு, பேப்பர் உண்டு என்று பேசாமல் இருங்கள். எனக்குத் தெரியும் பால் வியாபாரம் செய்யும் விதம்'' என்றாள் சகுந்தலையின் தாய். என் மாமனார் கூட்டிலடைபட்ட சிங்கம்போல அடங்கிவிட்டார்.

என் மனைவி பால்காரியிடத்தில் சொன்ன வார்த்தைகளும் உண்மைதான் அல்லவா!

சத்திய யுகம் இனி எப்பொழுதோ பிறக்கப்போகிறது என்கிறார்களே, இவர்களெல்லாம் உண்மையைத்தானே பேசுகிறார்கள்! இது சத்திய யுகம் இல்லையா?

## - 16 -

# " உள்ளே நுழையலாகாது "

சென்னை மூர்மார்க்கெட்டுக்கு எதிரே, நடைபாதையில், ஒரு யுவதி சென்றுகொண்டிருந்தாள். அவளுக்குச் சுமார் இருபத்தைந்து வயசு இருக்கலாம். நல்ல கட்டு வாய்ந்த உடல்; அழகிய தோற்றம். தலையில் தொப்பி முதற் கொண்டு கால்களில் உயர்குதி ஜோடுகள் வரை, அவள் மேல்நாட்டு நவநாகரிக உடை அணிந்திருந்தாள். அவளுடைய நடையில் ஒரு நளினம், ஒரு நாஸுக்கு. அவள் ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும்பொழுதும், ஒரு பூங்கொடி காற்றில் அசைந்தாடுவதுபோலத் தோன்றியது. பாதையில் போகும் ஆடவரும் பெண்டிரும் அவள் உடலழகையும் நடையழகையும் பருகிய வண்ணமே சென்றார்கள்.

எதிர்த்த பக்கத்தில் சென்றுகொண்டிருந்த வாலிபன் ஒருவன் அவளைக் கண்டதும் சற்றுத் திகைத்து நின்றான். பின்பு, " ஆம், லீலாதான் " என்று நிச்சயப்படுத்திக் கொண்டு, " ஹலோ! மிஸ் லீலா! இங்கிலாந்திலிருந்து எப்பொழுது வந்தீர்கள்? " என்று கேட்டான்.

" நமஸ்காரம், மிஸ்டர் வாசன்! நேற்றுக் காலைதான்

பம்பாய் மெயிலில் சென்னை வந்து சேர்ந்தேன்" என்று சொல்லிக்கொண்டே தன் பழைய நண்பனைச் சந்திப்பதற்காக அவனை நோக்கி எதிர்த்த பக்கம் ஓடினாள். நடுவில் டிராம் லயன். அதைக் கடந்து செல்லவேண்டும். தண்டவாளத்தை அணுகியதும், அவள் சட்டென்று நின்றாள். கையில் தொங்கிக்கொண்டிருந்த பையில் ஏதோ தேடுபவள் போல் காணப்பட்டது. அத்துடன் மித்திரன் கேட்கும் கேள்விகளுக்கும் பதிலளித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய முகத்தில் சஞ்சலக் குறிகள் தோன்ற ஆரம்பித்தன. ஏதோ ஒரு போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவள் போலக் காணப்பட்டாள். அப்பொழுது சற்றுத் தூரத்தில் ஒரு டிராம் வரும் சத்தம் கேட்டது. யுவதியின் சஞ்சலம் அதிகரித்தது. போராட்டம் முன்னைவிட மும்முரமாக நடந்தது. வாலிபன் இவை ஒன்றையும் கவனியாமல், வெகுநாட்களுக்கப்புறம் சந்தித்த தன் சிநேகிதியினிடம் கேள்வி மேல் கேள்வி போட்டுக்கொண்டே போனான். ஆறு வருஷங்களாய்ப் பிரிந்திருந்த சிநேகிதியை அன்று புதிதாய்ச் சந்திக்கும்பொழுது கேள்விகளுக்கு என்ன குறைவு? இதற்குள் டிராம் நெருங்கிவிட்டது. டிராம் டிரைவரைப் பார்த்து யுவதி புன்னகை செய்துகொண்டே, பின்னும் அவசர அவசரமாய்ப் பைக்குள் தேட ஆரம்பித்தாள். 'டிராம் வருவதைத்தான் பார்த்துக்கொண்டாளல்லவா, விலகிவிடுவாள்' என்று நினைத்து, டிரைவர் வண்டியை நிறுத்தாமல் ஓட்டிக்கொண்டு வந்தான். அதிகச் சமீபத்தில் டிராம் வந்துவிட்டதைக் கவனித்த மிஸ்டர் வாசன், "டிராம் வந்துவிட்டது லீலா. அதை இங்கே வந்து தேடிக்கொள்ளலாம், ஓடிவா!" என்று கத்தினான். ஆனால் அவள் அவனுடைய வார்த்தைகளைப்

பொருட்படுத்தியதாய்த் தெரியவில்லை. டிராம் வெகு சமீபத்தில் வந்துவிட்டது. இரண்டு விநாடிகளில் அவள் மீது ஏறிவிடும்! திடீரென்று கையில் இருந்த பையை வீசி எறிந்துவிட்டு, கால் ஜோட்டைக் கழற்ற யத்தனித்தாள். அதற்குள் டிராம் அவள்மீது ஏறிவிட்டது! "ஐயோ! இந்தப் பாழும் ஜோட்டின் குதியானது தண்டவாள இடுக்கில் மாட்டிக்கொண்டதே!" என்று கதறிக் கீழே விழுந்தாள்.

டிராம் லயனை அவள் தாண்டி வருகையில், கால் ஜோட்டின் குதி ஒன்று தண்டவாள இடுக்கில் சிக்கிக் கொண்டது. அதை வெளியில் காட்ட வெட்கப்பட்டு, பையில் ஏதோ தேடுபவள்போல் பாவனை செய்துகொண்டு சற்று நின்றால் அதை விடுவித்துக்கொள்ளலாம் என்று நினைத்தாள். ஆனால் இறைவன் திருவுள்ளம் வேறு மாதிரி இருந்தது!

டிராமில் நசுக்குண்ட யுவதியைச் சுற்றிப் பெருங் கூட்டம் கூடிவிட்டது. போலீஸார் வந்து கூட்டத்தை விலக்கிக்கொண்டு பார்த்தபொழுது. அவள் உயிர் இருந்தது! உடனே ஜெனரல் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக் கொண்டு சென்று, எதிர்பாராத விபத்துக்களுக்கென்று ஏற்பட்ட வார்டில் அவளை அநுமதித்தார்கள். முழங் கால்களுக்குச் சற்று மேலே, கால்கள் இரண்டும் நன்றாய் அரைபட்டிருந்தன. தவிர அவள் கீழே விழும்போது ஏற்பட்ட சில \ சில்லறைக் காயங்கள் இருந்தன. வேறொன்றுமில்லை. ஆகையினால் கால்களைத் துண்டித்து எடுத்துவிட்டு உடனே சிகிச்சை செய்தால் ஒருவேளை பிழைத்துக்கொள்ளலாம் என்று நம்பிக்கை ஏற்பட்ட தால், அந்த வார்டின் பொறுப்பில் இருந்த ஹவுஸ் ஸர்ஜன், "மிஸ் சாந்தா!" என்று கூப்பிட்டார். "ஏன்?"

என்று ஒரு நர்ஸ் ஓடி வந்தாள். “ இதோ! ஒரு அவசரக் கேஸ் வந்திருக்கிறது. நீ போய் ஸீனியர் ஸர்ஜனைச் சீக்கிரம் அழைத்து வா ” என்றார் ஹவுஸ் ஸர்ஜன். கட்டிலிலே கிடக்கும் உருவத்தைக் கண்டவுடன் நர்ஸ் திடுக்கிட்டு, “ ஹா! மிஸ் லீலா ” என்று கூச்சலிட்டாள்.

“ என்ன, மிஸ் சாந்தா! இவள் உனக்குச் சொந்தமா? ” என்று டாக்டர் கேட்டார்.

அந்தக் கேள்விக்கு ஒன்றும் பதில் சொல்லாமல், ஸீனியர் ஸர்ஜனை அழைத்துவர அவசரமாய் ஓடினாள் நர்ஸ்.

சென்னையில் டாக்டர் விசுவநாதனை அறியாதார் எவருமே இல்லை. ரண வைத்தியத்தில் நிபுணர். ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஸீனியர் ஸர்ஜனாக இருந்தார். அவர்தாம் அவ்வேலைக்கு நியமிக்கப்பட்ட முதல் இந்தியர். ஆஸ்பத்திரியில் கிடைத்த இரண்டாயிர ரூபாய் சம்பளத்திற்கு மேல் சொந்தத் தொழிலில் அவருக்குக் குறைந்த பக்ஷம் மாதம் பதினாயிரம் ரூபாய் கிடைத்துக் கொண்டிருந்தது.

நர்ஸ் அவரை அழைத்துவரச் சென்றபொழுது, அவர் ஆபரேஷன் அறையில் இருந்தார். அன்று ஒரு பிரபல ஆபரேஷன் நடந்துகொண்டிருந்தது. பெருந்தன்மையும் கண்ணியமும் வாய்ந்த குடும்பத்தைச் சேர்ந்த இளம் விதவை ஒருத்திக்கு இருந்தாற் போலிருந்து, வயிறு கனக்க ஆரம்பித்தது. நாளுக்கு நாள் வயிறு பருக்கவே, அவள் கர்ப்பமாகிவிட்டாள் என்று ஊரில் அநேக வதந்திகள் பரவ ஆரம்பித்தன. பாவம்! அவள் என்ன செய்வாள்? வயிறு கனத்த காரணம் அவளுக்கு விளங்கவில்லை. ஊரார் பேசும் நிந்தை வார்த்தைகளையோ சகிக்க மனமும் இல்லை. ஆஸ்பத்திரியில் ஆபரேஷன்

செய்தாவது பார்த்துவிடுவது என்று தீர்மானித்தாள். அந்த ஆபரேஷன்தான் அன்று நடந்துகொண்டிருந்தது; விசுவநாதன் வயிற்றைக் கீறிக்கொண்டிருந்தார். பக்கத்தில் அவருடைய உதவிக்கு இரண்டு மூன்று அஸிஸ்டெண்ட் ஸர்ஜன்களும், நர்ஸ்களும் நின்றார்கள்.

அவசர அவசரமாக உள்ளே நுழைந்த மிஸ் சாந்தா சற்றுத் தயங்கி நின்றாள். டாக்டர் விசுவநாதன் மிகக் கண்டிப்பானவர். அவர் ஏதாவது வேலை செய்துகொண்டு இருக்கும்பொழுது, யாரேனும் நடுவில் குறுக்கிட்டால், அவர்கள் கதி அதோகதிதான். ஆனால் இத்தகைய விசேஷ சந்தர்ப்பங்களில் எப்படி நடந்துகொள்வது? இந்த அவசரக் கேஸைப்பற்றி அவரிடத்தில் சொல்லலாமா, கூடாதா? சொன்னால் இப்பொழுது வருவாரா? மிகவும் கண்டிப்பானவராச்சே? பக்கத்தில் நின்ற அஸிஸ்டெண்ட் ஸர்ஜன் மூலமாகவாவது அவருக்கு விஷயத்தைத் தெரிவிக்கலாம் என்று, உதவிக்காக நின்றுகொண்டிருந்த டாக்டர்களின் பக்கத்தில் சென்று, ‘குசு, குசு’ வென்று ஏதோ கூறினாள். உடனே அவர் வெகு ஆச்சரியத்துடன் நர்ஸை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, பின்பு டாக்டர் விசுவநாதனையும் ஒரு முறை பார்த்தார். ஆனால் டாக்டரிடம் விஷயத்தைச் சொல்ல அவருக்குத் தைரியமில்லை. மிகப் பரிதாபத்துடன் நர்ஸ் அவருடைய முகத்தை நோக்கினாள். ஆனால் அங்கிருந்து அவளுக்கு எவ்வித உதவியும் கிடைப்பதாகத் தெரியவில்லை. ஒருவருடைய ஆபத்தில் உதவுவதற்கும் மனிதர்களுக்குத் தைரியம் வேண்டுமல்லவா? பாவம்! நர்ஸ் என்ன செய்வாள்? டாக்டர் விசுவநாதனிடம் தானே விஷயத்தைச் சொல்லிவிடலாம் என்று தீர்மானித்தாள்.

“டாக்டர்! டிராமில்.........” என்று சொல்ல வா

யெடுத்தாள். அதற்குள் டாக்டர் விசுவநாதன் மிகுந்த சீற்றத்துடன் கர்ஜிக்கத் தொடங்கிவிட்டார்: "நான் என்ன செய்துகொண் டிருக்கிறேன் என்பது உனக்குத் தெரியவில்லையா? எத்தகைய அவசரக் கேஸ் ஆனாலும் சரி, ஒரு மணி நேரம் காத்திருக்கட்டும்."

அந்த அவசரக் கேஸ் ஒரு மணி நேரம் காத்திருக்க முடியுமா? அதற்குள் என்ன ஆகி விடுகிறதோ என்று அஞ்சினாள் நர்ஸ். கொஞ்சநஞ்சம் இருந்த நம்பிக்கையையும் இழந்துவிட்டாள். இன்னொரு முறை முயன்று பார்க்கலாம் என்று நினைத்து, "டாக்டர்! ஒரு உயிர்....." என்று ஆரம்பித்தாள்.

"உயிர்! அதுதான் உயிர். இது உனக்கு உயிராய்த் தெரியவில்லையோ? மூடு, வாயை" என்று டாக்டர் முழங்கினார்.

நர்ஸுக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. "அஸிஸ்டெண்டுகளிடம் ஒப்பித்துவிட்டு வரக் கூடாதோ? எல்லாம் இறைவன் செயல்; அவன் கிருபை அல்லவா வேண்டும்? நாம் என்ன செய்ய முடியும்?" என்று முனகிக்கொண்டே நர்ஸ் ஆபரேஷன் அறையை விட்டு வெளியேறினாள்.

ஹவுஸ் ஸர்ஜன் டாக்டர் விசுவநாதனை எதிர் பார்த்துக்கொண்டிருந்தார். மிஸ் சாந்தா ஓடோடியும் வந்து, "டாக்டர் ஆபரேஷன் செய்துகொண் டிருக்கிறார். அவர் வர இன்னும் ஒரு மணிநேரம் ஆகும். அதற்குள் நம்மால் ஆனதைப் பார்க்கலாம்" என்று சொல்லிக் கொண்டே ஒரு பீங்கான் பாத்திரத்தில் தண்ணீர், பஞ்சு, மருந்துப் பெட்டி முதலியவைகளை எடுத்துவந்தாள்.

நர்ஸுக்கு இருந்த ஆத்திரத்தையும் அவசரத்தையும் கண்ட ஹவுஸ் ஸர்ஜன், டிராமில் நசுக்குண்ட அந்தப்

பெண் அவளுக்கு நெருங்கிய சொந்தமாக இருக்கலாம் என்று நிச்சயித்துக்கொண்டு, சற்றுக் கவலையுடனேயே சிகிச்சை செய்ய ஆரம்பித்தார்.

"சீமையிலிருந்து டாக்டர் பரீக்ஷை பாஸ் பண்ணி விட்டு நேற்றுத்தான் வந்தாள். அதற்குள் இவளுக்கு இந்தக் கதியா நேரிடவேண்டும்!" என்று நர்ஸ் பிரலாபித்தாள்.

"இவள் யார், உனக்கு எப்படிச் சொந்தம்?" எனக் கேட்டுவிடலாமா என்று ஹவுஸ் ஸர்ஜன் நினைத்தார். ஆனால் அவள் முகத்தில் தோன்றிய சஞ்சலத்தையும் கலவரத்தையும் நோக்கியபொழுது, அவருக்கு ஒன்றுமே கேட்கத் தோன்றவில்லை. பேசாமல் காயங்களைக் கழுவிக் கட்டத் தொடங்கினார்.

காயங்களெல்லாம் கட்டியாகிவிட்டது. ஆனால் நோயாளியின் நிலைமை இன்னும் திருப்திகரமாக இல்லை. "மிஸ் சாந்தா! இன்னொரு தடவை சென்று, நிலைமை மிக மோசமாய் இருக்கிறது என்று சொல்லிவிட்டு வருகிறாயா?" என்று ஹவுஸ் ஸர்ஜன் சொன்னார்.

அவளுக்குப் போவதற்கு இஷ்டமில்லை. முன்பே டாக்டர் வெகு கோபமாக இருக்கிறார்; மறுபடியும் போனால் என்ன செய்வாரோ என்று நினைத்தாள். எனினும் ஆத்திரம் யாரை விட்டது? ஒருவேளை அவர் வரச் சம்மதித்தாலும் சம்மதிக்கலாம் என்று எண்ணி ஆபரேஷன் அறையை நோக்கிச் சென்றாள். மிகுந்த தயக்கத்துடன் உள்ளே போனாள். அவள் அதிருஷ்டம் இருந்தவாறென்ன? டாக்டர் விசுவநாதனை அங்கே காணவில்லை. ஒரு நோயாளி மிகுந்த ஆபத்தான நிலைமையில் இருப்பதாக ஐரோப்பிய வார்டிலிருந்து அவசரச் செய்தி வந்ததாகவும், அதைக் கவனிக்கச் சென்று

விட்டதாகவும் தெரிந்தது. விதவையின் வயிற்று ஆபரேஷன் அஸிஸ்டெண்ட்களிடத்தில் ஒப்படைக்கப் பட்டிருந்தது. நர்ஸ் நிராசையுடன் திரும்பினாள்.

ஏறக்குறைய ஒரு மணி நேரம் கழிந்திருக்கும். ஐரோப்பிய வார்டிலிருந்து ஒரு நர்ஸ் வந்தாள். "மிஸ் ஜேம்ஸ், டாக்டர் விசுவநாதன் எங்கு இருக்கிறார்?" என்று மிஸ் சாந்தா ஆவலுடன் கேட்டாள்.

"இப்பத்தான் சாப்பிடுவதற்காக அவருடைய அறைக்குச் சென்றார்."

"டாக்டர்! கொஞ்சம் பார்த்துக்கொள்ளுங்கள். நான் போய் அவரைக் கூட்டிக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு நர்ஸ் ஓடினாள்.

"போகட்டும். இன்று இவளுடைய வேலைக்கு அநர்த்தம் பிடித்துவிட்டது. டாக்டர் விசுவநாதனுடைய குணம் இன்னும் இவளுக்குத் தெரியாது போலும்" என்றாள் மிஸ் ஜேம்ஸ்.

"இல்லை மிஸ் ஜேம்ஸ்! யாரோ அவளுக்கு நெருங்கிய உறவினள் ஒருத்தி டிராமில் அடிபட்டு வந்திருக்கிறாள். ஆகையினால்தான் இப்படி ஆத்திரப்படுகிறாள்" என்றார் ஹவுஸ் ஸர்ஜன்.

டாக்டர் விசுவநாதன் அறைக்குள் மிஸ் சாந்தா அவசரமாய் நுழைந்தபொழுது, அவர் கைகளையும் முகத்தையும் கழுவிக்கொண்டிருந்தார். மேஜையின் மீதிருந்த பீங்கான் தட்டத்தில் பணியாள் சாதம் பரிமாறிக்கொண்டிருந்தான்.

"டாக்டர்!" என்று மெதுவாகக் கூப்பிட்டாள் நர்ஸ்.

விசுவநாதன் ஏறிட்டுப் பார்த்தார். மிஸ் சாந்தாவைக் கண்டதும் அவருடைய கண்களில் கோபத்தீ ஜ்வாலை

பியது. அன்று அவர் டாக்டராக இல்லை. "யாருடைய அநுமதியின்பேரில் உள்ளே வந்தாய்? 'உள்ளே நுழையக் கூடாது' என்று வாசலில் போர்டு போட்டிருக்கிறதைப் பார்த்தாயா, இல்லையா?"

"டாக்டர்! அந்த அவசரக் கேஸ்......"

"போ வெளியே! அவசரக் கேஸாயிருந்தால் என்ன? டாக்டர் - வேலை பார்த்தால், சாப்பாட்டு நேரத்தில் சாப்பிடவுமா உரிமை இல்லை?"

"ஆனால்......" என்று பேச வாயெடுத்தாள் நர்ஸ்.

"மூடு வாயை! எல்லாம் எனக்குத் தெரியும்! இப்பொழுது என்னால் வரமுடியாது."

அங்கு ஓர் உயிர் மரணத்தோடு போராடிக்கொண் டிருக்கிறது; இங்கு டாக்டர் சாவகாசமாய்ச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார் என்று உள்ளம் கொதித்து நர்ஸ் வெளியேறினாள்.

"நானும் பதினாறு வருஷம் டாக்டர் வேலை பார்த்து விட்டேன். வருஷமெல்லாம் அவசரக் கேஸ், மாத மெல்லாம் அவசரக் கேஸ், நாளெல்லாம் அவசரக் கேஸ்! நாள் தவறினாலும் அவசரக் கேஸ் தவறுவதில்லை. ஒரு நாளாவது வயிறாறச் சாப்பிட்டோம், நிம்மதியாய்த் தூங்கினோம் என்று கிடையாது; நாசமாய்ப்போன டாக்டர் வேலை!" என்று தம் தொழிலை நொந்து கொண்டார் விசுவநாதன்.

நர்ஸ் வார்டுக்குச் சென்று பார்த்தாள். நிமிஷந் தோறும் மிஸ் லீலாவின் உயிர் உடலைவிட்டுப் பிரிந்து கொண்டிருந்தது. அந்தப் பரிதாபக் காட்சியை அவளால் பார்க்கச் சகிக்கவில்லை. ஆதிகாலத்தில் ஹனுமார் சஞ்சீவி மலையையே பெயர்த்து வந்துவிட்டதாகச் சொல்லு கிறார்கள்; ஆனால் என்னால் இந்த உயிருள்ள சஞ்சீவியின்

கல் நெஞ்சைக் கரைக்க முடியவில்லையே என்று தன்னை நொந்துகொண்டாள் போலும்! "ஆனால் இன்னும் உண்மையை டாக்டருக்குத் தெரியப்படுத்தவில்லையே? தெரிவித்தால் ஒருவேளை...ஒருவேளை ஏன்? கட்டாயம்... தெரிவிக்காதது என் குற்றமல்லவா? இப்பொழுது போய் எப்படியாவது சொல்லிவிட்டு வருகிறேன்" என்று தீர்மானித்துக்கொண்டு டாக்டருடைய அறைக்கு மறுபடியும் ஓடினாள். ஆனால் வாசலை அணுகியதும், அவளுடைய தைரியமெல்லாம் பறந்துவிட்டது. அங்கே தொங்கிக்கொண்டிருந்த போர்டில் உள்ள எழுத்து ஒவ்வொன்றும், அவளுடைய கால்களுக்கு ஒரு விலங்கு பூட்டுவதுபோல இருந்தது. அதனுடன் டாக்டர் கூறிய வார்த்தைகளும் அவளுக்கு ஞாபகம் வந்தன. "ஆண்டவன் உன் தலையில் இப்படியா எழுதினான்!" என்று சொல்லிக்கொண்டு அப்படியே திரும்பிவிட்டாள்.

ஐந்து நிமிஷங்கள் கழிந்தன; பத்து நிமிஷங்கள்; பதினைந்து நிமிஷங்கள் கழிந்தன. ஒவ்வொரு நிமிஷமும் நர்ஸுக்கு ஒரு யுகம்போல் தோன்றியது. டாக்டருடைய சாப்பாடு முடிந்திருக்கும்; இந்த நிமிஷம் வந்துவிடுவார், அடுத்த நிமிஷம் வந்துவிடுவார் என்று வாசலை எட்டி எட்டிப் பார்த்தாள். ஆனால் அவர் வந்தபாடில்லை. நிமிஷத்திற்கு நிமிஷம் லீலாவின் நிலைமை மோசமாகிக் கொண்டுவந்தது. அவளுடைய ஹ்ருதயத்தின்மீது நர்ஸ் கைவைத்துப் பார்த்துத் திகிலடைந்தாள். நர்ஸின் மனம் துடித்தது. ஒரு கணமேனும் அவளுக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை. ஒரே ஓட்டமாய் ஓடினாள். அறையை அணுகியபோது உள்ளே இடி இடித்துக் கொண்டிருந்ததைக் கண்டு சற்றுத் தயங்கினாள். "அவசரக் கேஸ்களை எல்லாம் ஒன்று தவறாமல், டாக்டர்

காப்பாற்றிவிட்டால் ருத்திரமூர்த்தியின் சம்ஹாரத் தொழில்தான் எப்படி நடப்பதென்று தெரியவில்லையே! இன்றைச் சம்பவத்தைத்தான் எடுத்துக்கொள். எவனோ ஒருவன் காரில் அடிபட்டோ, டிராமில் நசுக்குண்டோ கிடக்கிறான். கிடந்தால் என்ன கெட்டுப்போய்விட்டது? இந்தியாவில் இருக்கும் அடிமைகளின் தொகையில் ஒன்று குறைந்தது!" என்று சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு தமக்குத் தாமே பேசிக்கொண்டிருந்தார் டாக்டர்.

"ஐயோ! அது உங்கள் மகள் லீலாவல்லவா டாக்டர்! சீக்கிரம் வாருங்களேன்!" என்று வெளியில் இருந்தவாறே நர்ஸ் கூச்சலிட்டாள். அவள் உள்ளே நுழையலாகாது அல்லவா!

"என்ன! என்ன சொன்னாய்? என் மகளா? லீலாவா? அவளுக்கு என்ன? ஐயோ! மோசம் போனேனே!" என்று கதறிக்கொண்டு ஓடிவந்தார் விசுவநாதன்.

"லீலா! லீலா!" என்று கூப்பிட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார் விசுவநாதன். ஏதும் பதில் இல்லை. லீலாவின் கையைத் தொட்டுப் பார்த்தார். ஜில்லென்று இருந்தது.

இந்தியாவிலுள்ள அடிமைகளின் தொகையில் ஒன்று குறைந்தது!

## - 17 -

# ஹிஸ்டரி வாத்தியார்

சுகுணராவ் எம். ஏ., எல். டி. சரித்திரம் கற்பிப்பதில் 'புலி' என்று பெயர் பெற்றவர். அரை வருஷ சரித்திரப் பரீக்ஷை விடைத்தாள்களை அவர் மாணவர்களுக்கு வழங்கிக்கொண் டிருந்தார். மாணவர்கள் அனைவரும் தங்கள் மார்க்குகளை அறிய மிக ஆவலுடையவர்களாக இருந்தார்கள். சிறிது நேரத்தில் பிறக்கப்போகும் குழந்தை ஆணு பெண்ணு என்று அறிவதற்குத் தாய் தந்தையர் எப்படி ஆவலுடன் இருப்பார்களோ, அப்படி இருந்தனர் மாணவர்கள் யாவரும். ஆணுகவோ பெண்ணுகவோ பிறக்கும் குழந்தையை எப்படி மாற்ற முடியாதோ, அதுபோலத்தான் சுகுணராவ் வழங்கும் மார்க்கும். அவர் மார்க் போட்டால் அது போட்டதுதான்! அதற்குமேல் அரைக்கால் மார்க், அதைக் கூட்டவும் முடியாது, குறைக்கவும் முடியாது. அவ்வளவு துல்லியமாக விடைகளை மதிப்பிட்டு மார்க் வழங்குவதாக அவர் அடிக்கடி கூறுவார். மார்க் விஷயத்தில் அத்தனை கண்டிப்பாக இருந்தார் அவர்.

ஒரு கேள்விக்காவது முழு மார்க்கும் அவர் கொடுப்ப தில்லை என்பது மாணவர்கள் அவர்மீது கூறும் குறை. ஆனால் அவர் மாணவர்கள்மீது சொல்லும் புகார் என்ன வென்றால், கேள்விகளுக்கு விடை எழுதும் சரியான முறையை மாணவர்களுக்குத் தாம் எத்தனை தட்வை விளக்கிக் கூறியும், மாணவர்களில் ஒருவனாவது எந்தக் கேள்விக்கும் முழு மார்க் வாங்கமாட்டேன் என்கிறனே

என்பதேயாகும். சரித்திரப் பரீக்ஷையில் விடைகளுக்கு முழு மார்க் வழங்குவது எந்த ஆசிரியருக்கும் வழக்க மில்லை என்றும், ஆனால் அவர் அந்த ரகத்தைச் சேர்ந்தவர் அல்ல என்றும், 'சரியான விடைகளுக்கு முழு மார்க் கொடுப்பதற்கு அவர் எப்பொழுதும் தயங்கினதில்லை' என்றும் அடிக்கடி சொல்லுவார். அவர் ஒரு காலத்தில் இறந்து, அவருடைய ஞாபகார்த்தமாக ஒரு சமாதி எழுப்பப்பட்டால், அதில் அவருடைய குணம்சங்களில் எல்லாம் மிகச் சிறந்ததாக மார்க் விஷயத்தில் அவர் கொண்ட தாராள மனப்பான்மையையே குறிப்பிட வேண்டுமென்று கூறுவதுண்டு. "சுகுணராவ் எம். ஏ., எல். டி. பிறப்பு............மரணம்............சரித்திரப் பரீக்ஷையில் சரியான விடைகளுக்கு முழு மார்க் கொடுத்தார்" என்று எழுதினால், அதையே அவர் மிகவும் பெருமையாகக் கொள்வதாகக் கூறுவார்!

இங்ஙனம் சொல்லி மாணவர்கள் எழுதிய விடைகளில் என்ன என்ன தவறுகள் செய்திருந்தார்கள், விடைகள் எப்படி எழுதவேண்டுமென அவர் விரிவாக எடுத்துச் சொன்னபோது, அவர் சொல்லியது சரி என்றே மாணவர்களுக்குத் தோன்றியது. வேறு எந்த உபாத்தி யாயராவது அவர்களுக்கு அவ்வளவு மார்க்குகள் கொடுத்திருப்பாரா என்றுகூட நினைத்தார்கள்.

அச்சமயம் திடீரென்று ஒரு மாணவன் எழுந்திருந்து, தனக்கு ஒரு கேள்விக்கு உரிய மார்க்கு கொடுக்கப் படவில்லை என்பதாக முறையிட்டான். சமய சந்தர்ப்பத்தைச் சற்றேனும் கவனியாது, அப்பொழுது எழுந்திருந்து அவ்விதம் குறை கூறிய மடையன் யார் என்று மாணவர்கள் அனைவரும் அவனை ஏறிட்டுப் பார்த்தார்கள்.

"உனக்குப் போட்டிருக்கும் மார்க்குக்கு மேல் அரைக்கால் மார்க்கேனும் அதிகமாய்ப் போட முடியா தென்று என்னால் ரூபிக்க முடியும்" என்றார் சுகுணராவ்.

ஆசிரியர் அவ்விதம் சொன்ன பின்பும் அவன் உட்காராமலிருந்ததைக் கண்டு மாணவர்கள் எல்லோரும் ஆச்சரியமுற்றனர்.

"அது எந்தக் கேள்வி?" என்று ஆசிரியர் மிகவும் அமைதியுடன் கேட்டார்.

"குப்தர்களுடைய காலம் இந்துதேச சரித்திரத்தில் ஏன் பொற்காலம் என்று அழைக்கப்படுகிறது?" என்று மாணவன் பதிலளித்தான்.

"நீ எழுதியிருக்கும் விடை என்ன?"

மாணவன் தன்னுடைய விடையை வாசித்தான்.

ஒரு கேலிப் புன்னகை சுகுணராவ் முகத்தில் தாண்டவமாடியது.

'ஆஹா! என்ன அழகான பதில்! இதை ஒரு மாதிரி விடையாகக் கொள்ளலாம். அதை இன்னொரு முறை வாசி. எல்லோரும் கவனிக்கட்டும்" என்றார்.

மாணவன் மறுமுறையும் விடையை வாசித்தான்.

"உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மார்க் என்ன?"

"மொத்தத்தில் பாதி."

"இந்த விடைக்கு நீ இதற்குமேல் மார்க் எதிர் பார்க்கிறாயா?"

"ஆம்."

சுகுணராவிடம் இப்படிப் பேசுவதற்குச் சாதாரண மாக ஒருவருக்கும் தைரியம் வராது. ஆகையினால் அம் மாணவனுடைய நடத்தை விநோதமாக இருந்தது.

"எவ்வளவு மார்க் போட்டிருக்க வேண்டும்?"

"முழு மார்க்கும்."

"ஏன்?"

"சரியான விடைக்கு முழு மார்க்கும் கொடுப்பது தங்கள் வழக்கமென்று நீங்கள் அடிக்கடி சொல்லியிருக்கிறீர்கள்."

"ஆனால் நீ எழுதியிருப்பது சரியான விடை என்று உனக்கு யார் சொன்னது?" என்று அவ்விடையிலுள்ள குறைகளை எல்லாம் கடல்மடை திறந்த வெள்ளம் போல ஒவ்வொன்ருய் எடுத்துக் கூற ஆரம்பித்தார் ஆசிரியர்.

அவர் சொல்லவேண்டியதெல்லாம் சொல்லி முடித்த போது, அம் மாணவனுக்குப் போட்டிருந்த மார்க்கில் பாதிக்குக்கூட அவன் லாயக்கில்லை என்பது மாணவர்கள் அனைவருக்கும் தெளிவாய் விளங்கியது. அத்தகைய விடையை எழுதிக்கொண்டு, அதற்கு முழு மார்க் போடவில்லை என்று ஆசிரியரை அநியாயமாகக் குறை கூறினனே என்று சிலர் அவனை முறைத்துப் பார்த்தார்கள்.

"உனக்குப் போட்டிருக்கும் மார்க் சரிதான் என்று இப்பொழுதாவது விளங்குகிறதா?" என்று ஆசிரியர் கேட்டார்.

"பூர்ணமாய் விளங்குகிறது."

"திருப்திதானே?" என்று கேட்டபோது ஆசிரியர் முகத்தில் ஒரு வெற்றிப் புன்னகை தவழ்ந்தது.

"பூர்ண திருப்திதான். ஆனல்..."

இதற்குமேல் யாருக்குத்தான் கோபம் வராது?

"இன்னும் என்ன 'ஆனல்'?" என்று சற்றுக் கோபத்துடன் கேட்டார் சுகுணராவ்.

"நான் எழுதியிருப்பது தாங்கள் முன்னம் கொடுத்த மாதிரி விடை, ஸார்" என்று சொல்லிச் சரித்திர

நோட்டை எடுத்து, அவர் கொடுத்திருந்த மாதிரி விடையை வாசிக்க ஆரம்பித்தான் மாணவன்!

## - 18 -

# உங்களுக்கு மாந்திரந்தான்!

இரவு சுமார் எட்டு மணி இருக்கும். "அம்மா, பசு நெய் இருக்கிறதா? இரண்டு மூன்று நாட்களாய் இருமல் புகைந்துகொண்டே இருக்கிறது" என்று ஐந்து நிமிஷ நேரம் இருமினார் ஒரு கிழவர்.

"செட்டியாருக்கு இல்லாத நெய்யா? உள்ளே வாருங்கள்" என்றாள் செல்லம்மாள்.

"என்ன விலை?" என்று கேட்டார் மூக்கஞ் செட்டியார்.

"விலையைப்பற்றிக் கவலை வேண்டாம். எவ்வளவு வேண்டும்?"

"அரைப்படி ஒரு படியா வாங்கப் போகிறேன்? அரைக்கால் படிதான் வேண்டும்."

"எல்லோருக்கும் எட்டணா என்றுதான் விற்கிறேன். மூக்கஞ் செட்டியார் தகப்பனாராச்சே என்று உமக்கு ஏழணாவுக்குக் கொடுக்கிறேன்."

"அரைக்கால்படிக்கு ஆறணாத்தானே விலை? நீங்கள் ஏழணா கேட்கிறீர்களே?"

"உமக்காகத்தான் இந்த விலை. படி நாலு ரூபாய்க்குக் குறைந்து பசு நெய் யார் கொடுக்கிறார்கள்? நான் நெய் விற்பதே இல்லை. நீர் இருமல் என்று கேட்கிறதனால்தான் கொடுக்கிறேன். மருந்துக்கென்று கேட்டால் ஒரு சாமானை இல்லை என்று சொல்லக்கூடாது."

"சரி, என்னிடத்தில் அதிகமா வாங்கிவிடப் போகிறீர்கள். விடுங்கள்" என்று ஜாடியைக் கீழே வைத்தார் கிழவனார்.

"வேறு ஒருவருக்கும் சொல்லாதீர். உமக்கு மாத்திரந் தான் இந்த விலை!" என்று ரகசியமாய்ச் சொன்னாள் செல்லம்மாள்.

ஏழணாவை வாங்கிக் கைப்பெட்டியில் போட்டுப் பூட்டிவிட்டு, "இன்று ஓரணா அதிக லாபம்" என்று தனக்குள்ளேயே சொல்லிச் செல்லம்மாள் மனம் பூரித்தாள்.

சுமார் ஐந்து நிமிஷத்திற்குப் பின் அவளுடைய கணவர் சீதாராமையர் கையில் ஒரு காகிதப் பொட்டலத்தை ஏந்திக்கொண்டு வீட்டிற்குள் நுழைந்தார்.

"இதென்ன வாங்கிக்கொண்டு வருகிறீர்கள்?" என்று செல்லம்மாள் கேட்டாள்.

"காலையிலே உப்புமாவுக்குச் சீனி இல்லை என்றாயே?"

"நல்ல வேளை, வாங்கிக்கொண்டு வந்துவிட்டீர்கள்! சொல்லிவிட மறந்துவிட்டேனே என்று நினைத்தேன். என்ன விலை?"

"சௌக்கியந்தான். நமக்காக வீசை ஏழணாவுக்குக் கொடுத்தான். ஒருவரிடத்திலும் சொல்லாதே."

"நாசமாய்ப் போச்சு! உங்களை யார் சாமான் வாங்கச் சொன்னது? எப்போதும்போல் நான் வாங்கிக் கொள்ள மாட்டேனோ? ஊரெல்லாம் வீசை ஆறணாவுக்கு விற்கிறது. அநியாயமாய் ஓரணாவைத் தொலைத்துவிட்டு வந்திருக்கிறீர்களே!"

"வீசை ஆறணாவுக்கு விற்கிறதா? ஏமாற்றி

விட்டானே! அந்தப் பயல் என்ன சொன்னான் தெரியுமா? 'சாமி! உங்களுக்கு மாத்திரந்தான் இந்த விலை! வேறொருவருக்கென்றால் இப்படிக் கொடுக்கமாட்டேன்' என்றல்லவா சொன்னான். இருக்கட்டும் நாளைக்குச் சொல்கிறேன்."

"யார் கடையில் வாங்கிக்கொண்டு வந்தீர்கள்?"

"மூக்கஞ் செட்டியார் கடையில்தான்."

"அப்படித்தான் நான் நினைத்தேன்" என்றாள் செல்லம்மாள்.

"ஏன்?"

இந்தக்கேள்விக்கு எதிர்பாராத இடத்திலிருந்து பதில் வந்தது. பானு படித்துக்கொண்டிருந்தான். "ஆகையால் பிள்ளைகளே! தினை விதைத்தோர் தினை அறுப்பர்; வினை விதைத்தோர் வினையறுப்பர்" என்று பாடத்தை முடித்து விட்டு, "அம்மா, பாடம் படித்துவிட்டேன். சாதம் போடு" என்று ஓடி வந்தான். அவன் நாலாவது வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறான்.

- 15 -

## உண்மை எது?

"இன்னைக்கி ஜானு பண்ணுகிற அநியாயம் பெருத்த அநியாயம். ஒரு துளிப் பால் உள்ளே போகலே அம்மா" என்று தாயிடம் முறையிட்டாள் பார்வதி.

"என்றைக்குத்தான் உன் மகள் ஒழுங்காய்ச் சாப்பிட்டுவிட்டாள், இன்னைக்கி ஒன்றும் சாப்பிட வில்லையே என்று வருத்தப்படுவதற்கு?" என்றாள் குழந்தை ஜானுவின் பாட்டி.

"என்றாலும் இன்றைக்கு வெகு மோசம். இத்தனை நாளும் பால் குடிக்காவிட்டாலும், பிஸ்கோத்தாவது ஒன்றிரண்டு தின்பாள். இன்றைக்கு அதுவும் சாப்பிட மாட்டேன் என்கிறாளே. பிஸ்கோத்தைக் கொடுத்தால் வீசி எறிகிறாள்."

"வயிற்றெரிச்சல் தீரக் காலுக்கடியில் போட்டுக் கொண்டு பாலையாவது நாலு சங்கு போட்டிறதுதானே ?"

"அதுவும் போட்டிப் பார்த்தாச்சு. முன்பெல்லாம் அழுதுகொண்டாவது கொஞ்சநஞ்சம் இறக்குவாள். இப்பொழுது கொப்பளிக்கப் படித்திருக்கிறாள் புதிதாக !"

"நல்லா நாலு அறை அந்த வாயிலேயே போடுறது தானே ?"

"போட்டும் பார்த்தாச்சு. கூடக் கொஞ்சம் அழுகை தான் பலன்."

"நானும் எத்தனையோ குழந்தைகளை வளர்த்து விட்டேனம்மா. உன் வயித்திலே பிறந்த இந்தச் சீமைச் சித்திராங்கியைப்போல ஒரு குழந்தையும் கிடையாது" என்று தன் அநுபவத்தைக் கூறினாள் பாட்டி.

"அடுத்த வீட்டு லக்ஷ்மியின் குழந்தையைப் பார். இப்படியா ? ஒரு கிண்ணம் நிறையப் பாலுஞ் சாதமும் போட்டு வைக்கிறாள். சிவனே என்று சாப்பிடுகிறது. எந்த வீட்டிலும் இந்த அநியாயம் இல்லை !"

"நல்லாச் சாப்பிடுறதனாலே தான் குழந்தை குதிராட்டமா ஓடியாடித் திரியுது. ஒன் குழந்தை அப்படி இருக்கா ?"

"இருக்கு ! இதுதான் ஒரு நாளைக்கொரு நாள் கோலாய்க் குரங்காய்ப் போகிறதே ! அவள் குழந்தையைப் பாரு, காலும் கையும் எவ்வளவு அழகா இருக்கிறது !"

"சாப்பிடாவிட்டால் எங்கிருந்து அழகு வரும்? இப்படித்தான் காலுங்கையும் சூம்பிப்போய்க் கிடக்கும்."

"பாரம்மா, இந்த ரொட்டியைப் பாலில் நனைத்து எவ்வளவு நேரமாகிறது. ஒரு வாய் வாங்கியிருக்கிறாளா?"

"அவள் அப்பாவிடமாவது கொண்டுபோய் விடு. அன்றைக்கு அவர் கொடுத்ததற்குச் சாப்பிட்டாளே?"

ஜானகியின் தந்தை ரொட்டியை வாங்கிக் கரண்டி ஒன்றில் எடுத்து ஜானகியை அழைத்துக் கொடுத்தார். குழந்தை தனது சிறிய கையினால் 'வேண்டாம்' என்று அலைத்தது. பின்பு பார்வதி கொடுத்துப் பார்த்தாள். 'ஒட்டக்கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்றதுபோல் கை அலைப்பது போதாதென்று தன் அழகிய தலையையும் ஆட்டியது.

"என்னடி இது நினைத்த மணியம்! இங்கே கொண்டுவா ஊட்டிவிட்டு வருகிறேன்" என்று குழந்தையையும் கிண்ணத்தையும் தூக்கிக்கொண்டு பாட்டி புறக்கடைக்குச் சென்றாள்.

"இன்றைக்கு ஒரு பருக்கையாவது சாப்பிட்டிருக்காயாடி? அறுதாண்டி தோலாத் துரும்பா இளைச்சுப் போறே. அடுத்த வீட்டு ஜானுவைப் பாரு. ஒன்னாட்டம் இப்படியா சாப்பிடப் பிடிவாதம் பண்றா? அதுதானே குந்தாணியாட்டமா அவள் ஓடியாடித் திரியுறா! நீ தேவாங்கு போலக் குந்தின இடத்தை விட்டு எந்திருக்காம இருக்கே" என்று அடுத்த வீட்டுப் புறக்கடையில் லக்ஷ்மி தன் குழந்தைக்கு நாயையும் கோழியையும் காட்டிச் சாதம் ஊட்டிக்கொண்டிருக்கும் சத்தம் கேட்டது!

# - 20 -

# உஜ்வலினி

## 1

" கண்ணுமூச்சியாரே காட்டுமூச்சியாரே ஒனக்கொரு பழம், என்க்கொரு பழம் கொண்டோடி வா" என்று சொல்லி லக்ஷ்மி உஜ்வலினியைத் தன் பிடியினின்றும் விடுவித்தாள்.

உஜ்வலினி தெரு மத்தியில் போய் நின்றுகொண்டு நாலு பக்கமும் சுற்றிப் பார்த்தாள். சிறுமிகளும் சிறுவர்களும் அநேகர் லக்ஷ்மியைப் போய்த் தொட்டார்கள். அவர்களை எல்லாம் அவள் கவனிக்கவே இல்லை. 'ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு' என்பதைப்போல் அவள் வேறு யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். பால் நிலவில் அச்சமயம் ஒரு சிறுவனுடைய உருவம் தெருக் கோடியில் தோன்றியது. உடனே ஒரே பாய்ச்சலாய் அவனை நோக்கி ஓடினாள். அவனும் அவளிடத்தில் அகப்படாமலிருப்பதற்கு ஏதேதோ பிரயத்தனம் செய்து பார்த்தான். ஆனால் முடியவில்லை. சிறுமி அவனைப் பிடித்துவிட்டாள். அவளுக்குச் சந்தோஷம் பொறுக்க முடியவில்லை. "என்னிடமிருந்து தப்பிக்க உன்னால் முடியுமோ?" என்று சொல்லிச் சிரித்தாள். மற்றச் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்குங்கூட இதைக் கண்டு சந்தோஷந்தான். ஜயராஜைப் பிடிக்கும் வல்லமை வாய்ந்தவள் தங்கள் கூட்டத்தில் உஜ்வலினி ஒருத்தி

தான் என்பது அவர்களுடைய அபிப்பிராயம். சிறையி னின்றும் தப்பி ஓடிய கைதியை மீண்டும் பிடித்து வரும் போலீஸ் அதிகாரிபோல, முகத்தில் கர்வக்குறிகள் தோன்ற ஜயராஜைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்தாள் உஜ்வலினி. திண்ணைமீது நின்று ஒருவர் இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண் டிருந்தார். அவருடைய முகத்தில் உவகைக் கிரணங்கள் மெதுவாய் ஒளி வீசின.

இம்மாதிரி உஜ்வலினியும் ஜயராஜுவும் ஒருவரை ஒருவர் பிடித்துக்கொண்டு வெகு நேரம் வரை விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

இதனால் மற்றச் சிறுவர் சிறுமிகளுக்கு விளையாட்டில் சுவாரஸ்யம் குறைகிறது என்று தெரிந்தால், வேறு யாரையாவது பிடித்துக் கொடுத்து விட்டு, அவர்கள் இருவரும் ஏதாவது ஓரிடத்தில் போய் ஒளிந்துகொள்வார்கள். அநேக ஆட்டங்கள்வரை வெளி வராமல் ஏதேதோ பேசிக்கொண்டு இருப்பார்கள். சில சமயங்களில் ஆட்டம் முடியும்வரை அவர்கள் வெளி யேறுவதே இல்லை.

உஜ்வலினி தன் பெயருக்கு ஏற்ற வெண்மை நிறம் வாய்ந்தவள். கலெக்டர் ஆபீஸ் ஹெட் கிளார்க் ஸ்ரீ வேங்கடேசரின் புதல்வி என்று அவளை ஒருவரும் மதிக்கமாட்டார்கள். அவருடைய நிறத்திற்கும் அவளுடைய நிறத்திற்கும் அவ்வளவு பேதம்.

ஜயராஜுவும் உஜ்வலினியும் சேர்ந்தே பள்ளிக்கூடம் போவார்கள். படித்தால் இருவரும் ஒன்றாய்ப் படிப்பார்கள்; விளையாடினால் இருவரும் ஒன்றாய் விளையாடுவார்கள். உஜ்வலினி தனக்குக் கிடைக்கும் தின்பண்டங்களை ஜயராஜுக்கும் பங்கிட்டுக் கொடுத்துத்தான் சாப்பிடுவாள். இருவரும் உண்பதும்

ஒரே சமயம்; உறங்குவதும் ஒரே சமயம்; எழுந் திருப்பதும் ஒரே சமயம்!

## 2

"ஐயோ! அம்மா!" என்று தலையை ஒரு கையினால் அழுத்திப் பிடித்துக்கொண்டு ஓடிவந்தான், ஜயராஜ். அவன் சிரசினின்றும் உதிரம் ஒழுகி வடிந்துகொண் டிருந்தது. அவனுடைய அழுகைக் குரலைக் கேட்டதும், உஜ்வலினி திடுக்கிட்டு ஓடிவந்து, கைத்தாங்கலாக அவனைத் தன் தாயிடம் அழைத்துக்கொண்டு சென்றாள். ஜயராஜின் தலையினின்றும் ரத்தம் வடிவதைக் கண்ட பங்கஜம்மாளுக்கு ஆத்திரம் பொறுக்க முடியவில்லை. "அடி! பாதகி! பிள்ளையை இப்படித் தானடி அடிப்பது? ஆணைப் பெண்ணைப் பெற்றிருந்தால் தெரியும், பிள்ளையருமை! மலடிக் கழுதை, உனக்கு என்னடீ தெரியும்?" என்று சொல்லிப் பங்கஜம்மாள் ஜயராஜின் தாயை ஆத்திரம் தீரத் திட்டினாள். உஜ்வலினியின் சின்ன உள்ளம் கொதித்தது. ஜயராஜை அடித்த அதே தடியினால், அவளை ஒரு போடு போடலாமா என்று துடித்துக்கொண்டிருந்தாள். பின்பு பங்கஜம்மாள் ஜயராஜின் காயத்தைக் கழுவி மருந்து போட்டாள்.

ஜயராஜின் தாய் அவன் இரண்டு வயசாக இருக்கும்பொழுதே இறந்துவிட்டாள். அவனுடைய சிற்றன்னை அன்று விளக்கேற்றும்படி அவனைக் கட்டளையிட்டாள். சிம்னியைத் துடைத்துக்கொண்டு இருக்கும்போது, அது தவறிக் கீழே விழுந்து உடைந்துவிட்டது. உடனே அவனுடைய சிற்றன்னை பத்திரகாளி அவதாரம் எடுத்துவிட்டாள்! "நானு

நாளைக்கு முன்னால் வாங்கிய சிம்னியை அதற்குள் உடைத்துவிட்டாயா? அவருக்கு நான் என்ன பதில் சொல்வேன்?'' என்று பக்கத்தில் கிடந்த ஒரு தடியை எடுத்து அவன் தலையில் பலமாக ஓரடி அடித்தாள்.

அன்றிரவு ஜயராஜ் தன் வீட்டிற்குப் போகவில்லை. உஜ்வலினியின் வீட்டிலேயே சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொண்டான். வேங்கடேசர் ஜாதி நியமங்களை அநுஷ்டிப்பவரல்ல. இயற்கையிலேயே மிக்க தயாள குணமுள்ளவர். அவருடைய மனைவியும் அங்ஙனமே. உஜ்வலினியைத் தவிர அவர்களுக்குச் சங்கரன் என்ற ஒரு மகனும் இருந்தான்.

ஜயராஜும் உஜ்வலினியும் ஒரே பாயில் படுத்துக் கொண்டு தங்கள் சுக துக்கங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். தன் சிற்றன்னை தனக்குச் செய்யும் கொடுமைகளைப்பற்றி ஜயராஜ் சொல்லிக் கொண்டிருந்தான்: ''ஒரு நாள் நான் விளையாடிவிட்டு, வீட்டிற்குப் போக வெகு நேரமாகிவிட்டது. போய்க் கதவைத் தட்டினேன். 'நீ வைத்த வேலைக்காரியா இருக்கிறாள்; நினைத்த நேரமெல்லாம் கதவைத் திறப்பதற்கு?' என்று சொல்லி என்னைத் துரத்தி விட்டாள். அன்று மேகம் குமுறிக்கொண்டு இருந்தது. எங்கே பார்த்தாலும் கும்மிருள். கோடை இடி 'சடசடா' எனத் தகர்த்துக்கொண்டிருந்தது. எங்கும் சுற்றிப் பார்த்தேன். படுப்பதற்கு இடம் கிடைக்கவில்லை: கடைசியில் ஓர் ஆலமரத்தின் அடியில் ஒதுங்கினேன். பேய்மழை பெருவாரியாகக் கொட்டியது.''

''எங்கள் வீட்டிற்கு வந்திருக்கக் கூடாதா, ஜயராஜ்?'' என்றாள் உஜ்வலினி.

''கடைசியில் காலையில் எழுந்தபோது நன்றாய்

ஜலதோஷம் பிடித்துக்கொண்டது. உடம்பு நெருப்பாய்க் காய்ந்தது. பேசாமல் போய்ப் படுத்துக்கொண்டேன். 'நீ நாசமாய்ப் போக, எங்கிருந்து காய்ச்சலைக் கொண்டு வந்தாய்? உனக்கு யார் இனி வைத்தியம் செய்வது?' என்றாள் சின்னம்மா."

உஜ்வலினி வடித்த கண்ணீர் என்னவோ ஜயராஜுக்கு இருளில் தெரியவில்லை. ஆனால் அவள் விட்ட பெருமூச்சு அவனுக்குக் கேட்கத்தான் செய்தது!

## 3

சங்கரனும் உஜ்வலினியும் தூங்கிவிட்டார்கள். பங்கஜம்மாள் தன் கணவனுடன் பேசிக்கொண்டு இருந்தாள்.

"உஜ்வலினிக்குப் பதினாறு வயசாகிவிட்டது. இன்னும் அவளுடைய கல்யாணத்தைப்பற்றி ஒரு ஏற்பாடும் பண்ணாமல் இருக்கிறீர்களே?"

"நாம் ஏற்பாடு பண்ணவேண்டியது என்ன இருக்கிறது? எல்லாம் தானே ஏற்பாடாகிவிட்டதே!"

"நீங்கள் சொல்லுவதன் அர்த்தம் எனக்குப் புரியவில்லை."

"ஏன் புரியவில்லை? உஜ்வலினிக்கும் ஜயராஜுக்கும் ஏற்பட்டிருக்கும் சம்பந்தத்தை நோக்கினால், அவனுக்கே அவளைக் கல்யாணம் செய்துகொடுத்துவிடுவது உசிதமென்று நான் நினைக்கிறேன்."

"உஜ்வலினியைத் தாங்கள் இன்னும் நன்றாய் அறியவில்லை. அவள் ஜயராஜைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சம்மதிப்பாள் என்று நினைக்கிறீர்களா?"

"அதில் உனக்கு என்ன சந்தேகம்?"

"சொல்லுகிறேன் கேளுங்கள். ஒரு நாள் ஜயராஜின் சிறிய தாயார் அவர்கள் வீட்டில் செய்த மைசூர்ப்பாகைக் கொண்டுவந்து கொடுத்தாள். நான் வாங்க மறுத்தேன். 'நீங்கள் சாப்பிடாவிட்டால் குழந்தைகளுக்காவது கொடுக்கக் கூடாதா?' என்று சொன்னாள். அதன்மேல் நான் நம் சங்கரனுக்குக் கொடுக்காவிட்டாலும், உஜ்வலினிக்காவது கொடுக்கலாம் என்று நினைத்து அதை வாங்கி வைத்தேன். ஆனால் உஜ்வலினி அதைத் தொடவும் மறுத்துவிட்டாள்!"

வேங்கடேசர் சிந்தனையில் ஆழ்ந்தார். அவருக்கு ஒரு வழியும் தென்படவில்லை. இவ்வளவு தூரம் விஷயம் முற்றிவிடும் என்று அவர் நினைக்கவில்லை. ஜில்லா கலெக்டர் மாக்டொனால்ட் துரைக்குத் தன் ஆருயிர் மனைவி இறந்த துக்கத்தில் பைத்தியம் பிடித்துவிட்டது. அவன் எங்குச் சென்றான் என்று எவருக்குமே தெரியாது. அப்பொழுது உஜ்வலினி ஒருவாரக் குழந்தை. அதிகாரிகள் அவளைப்பற்றி ஏதோ ஒன்றும் கவனிக்கவில்லை. குழந்தை ஆதரவற்றுக் கிடந்தது. அதன் பரிதாபகரமான அழுகைக் குரல் வேங்கடேசர் உள்ளத்தை உருக்கியது. பின்னால் கேட்கும்போது கொடுத்துவிடலாம் என நினைத்து, குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்து தம் மனைவியிடம் கொடுத்தார். குழந்தையைப் பாதுகாத்ததற்காகப் பின்னால் தனக்கு வெகுமானம் கிடைக்குமென்ற நம்பிக்கையும் அவருக்கு உண்டு. இவ்விஷயம் எவருக்குமே தெரியாது. உஜ்வலினியின் வெள்ளை நிறத்தைக் கண்டவர்கள் சிறிது ஆச்சர்யமுற்ற போதிலும், எல்லோரும் அவள் வேங்கடேசரின் குழந்தை என்றே நினைத்தார்கள்.

வெகு நேரம் வரை யோசித்துவிட்டு, "பின் என்ன செய்யலாம்?" என்றார் வேங்கடேசர்.

"இத்தனை நாளும் நம் பிள்ளையாக வளர்த்து விட்டோம். கடைசி வரைக்கும் அவள் நம் பிள்ளையாகவே இருக்கட்டும். நம் ஜாதியிலேயே யாராவது ஒரு நல்ல பையனைப் பார்த்துக் கல்யாணம் செய்து கொடுங்கள்."

வேங்கடேசர் பின்னும் யோசனையில் ஆழ்ந்தார். கடைசியில், "எதற்கும் நீ அவளை ஒரு வார்த்தை கேட்டுப் பாரேன்?" என்றார்.

"அதற்கென்ன, நான் மாட்டேன் என்று சொல்கிறேன்?"

மறு நாள் காலை பங்கஜம்மாள் உஜ்வலினியிடம் சொன்னாள்: "உஜ்ஜீ! உனக்கு வயசு பதினாலு ஆகிவிட்டது. இனியும் உன்னை ஒருவன் கையில் பிடித்துக் கொடுக்காமலிருந்தால், ஊரார் சிரிப்பார்கள். எதிர்த்த வீட்டு ஜயராஜ் நல்ல பையன். நல்ல படிப்பு; நல்ல குணம். தங்கமான பையன். நீயும் அவனை......" என்று சொல்லி முடிப்பதற்குள், உஜ்வலினி படபடப்புடன் சொல்லலுற்றாள்: "அம்மா! நான் ஏதோ சிறு வயசில் அவனோடு விளையாடிக்கொண்டு இருந்தேன் என்று நீங்கள்........" அதற்குமேல் அவள் தொண்டை அடைத்துக்கொண்டது. ஒன்றும் பேச முடியவில்லை. அவள் கண்களில் கண்ணீர் ததும்பியது. சற்று நேரத்திற்குப் பின் விம்மல்களுக்கும் பெருமூச்சுகளுக்குமிடையே, "அம்மா! ஹிந்துப் பெண் எங்காவது கிறிஸ்தவனைக் கல்யாணம் பண்ணிக்கொள்வதுண்டா!" என்றாள்.

கல்யாணமான ஒரு மாதத்தில் உஜ்வலினி விதவை யாகிவிட்டாள்! அவளுடைய பரிதாப நிலையை நோக்கிக் கண்ணீர் விடாதவர் அவ்வூரில் எவருமே இல்லை. மாப்பிள்ளையின் தாய்தந்தையருங்கூட உஜ்வலினியின் குற்றமற்ற குழந்தை முகத்தைப் பார்த்ததும் அவளுடைய கொடிய விதியை நினைந்து அழுத அழுகைக்கு அளவே இல்லை. மாப்பிள்ளையின் தந்தை வேங்கடேசரிடம் வந்து, அவளை யாருக்காவது மறு விவாகம் செய்து கொடுத்து விடும்படி வேண்டினர். அவரும் அவளைப் 'பால்ய விதவைப் புனர் விவாக சங்க'த்தில் சேர்த்து, அவளுக்கு இஷ்டமான கணவனுக்குக் கல்யாணம் செய்துகொடுத்து விடலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தார். ஆனால் உஜ்வலினி அதற்கு இணங்கவில்லை. ஆரிய சமாஜிகளும் பிரம்ம சமாஜிகளும் விதவா விவாகம் சாஸ்திரோக்த மென்று நிரூபித்திருப்பதாகவும், இன்னும் சாஸ்திரங்களி லிருந்து அதற்கு அநேக ஆதரவுகளையும் எடுத்துக் காட்டினர். அதற்கு அவள், "ஆரிய சமாஜிகளும் பிரம்ம சமாஜிகளும் சொல்லுகிறார்களென்று, வாழையடி வாழை யாக, வம்ச பரம்பரையாக வரும் ஒரு புராதன வழக்கத்தை விட்டுவிடுவதா?" என்று கேட்டாள். இதற்கு அவர் என்ன பதில் சொல்வார்?

* * *

உஜ்வலினி சாதம் பரிமாறிக்கொண்டு இருந்தாள். சங்கரன் சர்க்கார் உத்தியோகக் கொடுமைகளைப்பற்றிப் பிரலாபித்துக்கொண்டிருந்தான்.

"நான் அன்று ஒரு நாள் ஆபீஸிற்குப் போவதற்கு

இரண்டு நிமிஷம் தாமதமாகிவிட்டது. சிரஸ்தேதார் காரணம் விசாரித்தான். இதற்கு என்ன காரணம் சொல்வது? 'ஏதோ தாமதமாகி விட்டது' என்று சொன்னேன். அதற்கு என்னுடைய 'ரஜா நாட்களில் ஒரு நாள் குறைக்கப்படும்' என்று உத்தரவு போட்டு விட்டான்."

"நான்தான் உனக்கு அன்றே சொன்னேனே, அண்ணா. இந்த அடிமை உத்தியோகத்தில், ஒருவன் மானங்கெட்டு, மரியாதை கெட்டுப் போகும்; இது நமக்கு வேண்டாம் என்று எத்தனையோ சொல்லியும் நீ கேட்கவில்லை!"

"பட்டா மாறுதலில் நான் அன்று ஒரு நாள் ஒரு சிறு தப்பிதம் செய்துவிட்டேன். அதற்குத் தாசில்தார், 'முட்டாள்! பி. ஏ. படித்திருக்கிறேன் என்கிறாய். இது தெரியவில்லையே!' என்று ஏசினான். பி. ஏ. வகுப்பில், பட்டா மாற்றுதலும், பி. மெமோவுந்தான் சொல்லிக் கொடுக்கிறார்கள் என்று நினைத்துக்கொண்டான் அந்த மூடன்!"

"ஏன் அண்ணா! இந்த முப்பது பிச்சைக் காசு வாங்குவதற்காகவா அவனிடத்தில் 'முட்டாள்' என்றும் 'மூடன்' என்றும் பட்டம் வாங்கவேண்டும்? ஒரு கால் காகிதத்தில், இரண்டு வரியை எழுதிக் கொடுத்துவிட்டு ஒரேயடியாய் அதற்குத் தலை முழுகிவிடேன்!" என்றாள் உஜ்வலினி.

அப்பொழுதுதான் சமையலறைக்குள் நுழைந்த வேங்கடேசர், "இன்றைக்கு முப்பது ரூபாய் உத்தியோகமாக இருப்பதுதான் அம்மா, நாளைக்கு முன்னூறு ரூபாய் ஆவது. ஐந்து ரூபாய்ச் சேவகமானாலும், அரண்மனைச் சேவகத்திற்குத் தனி மதிப்பு இருக்கத்தான் செய்கிறது.

நாலு வருஷத்திற்குப் பேசாமல் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தால், அப்புறம் இருக்கிறவனை எல்லாம் நாம் அதிகாரம் பண்ணலாம். பொறுத்தார் பூமி ஆள்வார் " என்றார்.

" இந்த வேதாந்தந்தான் எனக்குக் கொஞ்சமேனும் விளங்கவில்லை " என்றாள் உஜ்வலினி.

சங்கரன் மீண்டும் சொன்னான் : " இது இன்றைக்குத் தான் நடந்தது. கலெக்டருடைய சொந்தக் கடிதம் ஒன்றுடைப் அடிப்பதில், புது ரிப்பன் போட்டிருந்ததால், மை கெட்டியாக விழுந்துவிட்டது. உடனே மேஜைமீதிருந்த மைப் புட்டியை என்மேல் வீசி எறிந்து, 'இப்பொழுது உன் சட்டை எவ்வளவு அழகாக இருக்கிறதென்று பார்' என்று சிரிக்கிறான் கலெக்டர்.

" அவன் உன்மீது மைப்புட்டியை வீசி எறிய நீ பேசாமலா இருந்தாய்? ஏன், அந்த மேஜையில் ஒரு ரூல் தடி இல்லாமலா போய்விட்டது, அவன் மண்டையில் நாலு போடு போடுவதற்கு? வா அண்ணா, அந்தப் பயலை என்னிடத்தில் காட்டு. நான் அவனுக்குத் தகுந்த மரியாதை செய்கிறேன் " என்றாள் உஜ்வலினி.

## 5

நாடெங்கும் தேசீயப் புயல் கிளம்பியது. அப் புயலில் உஜ்வலினியும் அடித்துக்கொண்டு போகப் பட்டாள். உப்பு சத்தியாக்கிரகத்தில் சேர்ந்ததன் பயனாய் அவளுக்கு ஒரு வருஷம் வெறுங் காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

தன் வீட்டையே முதலில் சீர்திருத்த வேண்டும் என்று நினைத்து, உஜ்வலினி தன்னுடைய சகோதரன்

சங்கரனைத் தன் வசமாக்க முயன்றாள். அப்பொழுது சங்கரன் ஆபீஸ் ஹெட் கிளார்க் ஆகியிருந்தான். அவனுக்குச் சம்பளமும் அதிகரித்துவிட்டது. இரண்டொரு வருஷங்களில் மாஜிஸ்திரேட் ஆகிவிடலா மென்று நம்பினான். ரெவென்யூ, கிரிமினல், அக்கவுண்ட் மூன்று பரீக்ஷைகளிலும் அவன் தேர்ச்சி பெற்றிருந்தான். மாஜிஸ்திரேட் ஜாபிதாவிலும் அவன் பெயரைச் சேர்த்து விட்டார்கள். 'வேலை ஏதாவது காலி விழ வேண்டியது தான் தாமதம்; அவன் மாஜிஸ்திரேட் ஆகிவிடுவான். இத்தகைய அரிய சந்தர்ப்பத்தில் சத்தியாக்கிரக இயக்கத்தில் சேர்வது சுத்தப் பைத்தியக்காரத்தனம்' என்பது அவனுடைய அபிப்பிராயம். உஜ்வலினியின் சொற்கள் ஒன்றும் அவன் காதில் ஏறவில்லை.

அவள் சிறை சென்ற இரண்டு மாதங்களுக்குப்பின் வேங்கடேசரிடமிருந்து அவளுக்கு ஒரு கடிதம் கிடைத்தது அதில் எழுதியிருந்த விஷயத்தைக் கண்டதும் அவள் திடுக்கிட்டாள்.

பிரிய உஜ்ஜீ!

கடவுளுடைய லீலாவிநோதங்கள் ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. இவ்விஷயத்தைக் கேட்டதும் நீ பிரமித்துப் போவாய்! இதை உனக்கு எழுதும்போது என் மனம் என்ன பாடு படுகிறது என்பது ஈசுவரனுக்குத்தான் தெரியும். அம்மா அழும் அழுகைக்கு அளவே இல்லை. சங்கரன் இறந்துவிட்டான்! ஆம், அப்படித்தான் சொல்லவேண்டும். நம்மைப் பொறுத்த மட்டிலும், ஹிந்து தர்மத்தைப் பொறுத்தமட்டிலும், அவன் இறந்தவனே! இப்பொழுது அவன் சங்கரன் அல்ல. ஜான்

சங்கரன் ஆகிவிட்டான்! ஒரு மாஜிஸ்திரேட் உத்தியோகம் காலி விழுந்தது. அது கிறிஸ்தவர்களுக்கு உரியதாம். கிறிஸ்தவர்கள் எவருமே மூன்று பரீக்ஷைகள் தேறியவர்கள் இல்லாதததால், அது காலியாகவே இருந்தது. உன் அண்ணன் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து, இப்பொழுது மாஜிஸ்திரேட் உத்தியோகம் வகிக்கிறான். நாங்கள் என்ன சொல்லியும் அவன் கேட்கவில்லை.

இங்ஙனம்,
உன் அன்புமிக்க தந்தை,
...........................''

தன் சகோதரனின் தன்மையை நன்கறிந்திருந்த உஜ்வலினிக்கு அதில் ஆச்சரியம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

## 6

அன்று கைதிகள் எல்லாரும் குளிக்கப் போகும் பொழுது, புதுக் கைதி ஒருவன் செல்வதை உஜ்வலினி தன் கொட்டடியிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தாள். அவனுடைய முகத்தை அவளால் பார்க்க முடியவில்லை. ஆயினும் அவனுடைய நடையிலிருந்தும் பின் தோற்றத்திலிருந்துமே அவனை அவள் எங்கோ முன்னால் பார்த்திருப்பதாக நினைத்தாள். எங்கே பார்த்திருக்கிறாள், எப்பொழுது பார்த்திருக்கிறாள் என்பது மட்டும் அவளுக்குச் சீக்கிரம் ஞாபகம் வரவில்லை. ஆகையால் குளிக்கப்போன கைதிகள் திரும்பி வரும் வரைக்கும், கொட்டடிக் கதவண்டையே நின்று அவள் காத்துக்

கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் கைதிகளும் திரும்பி வந்தார்கள். அக்கூட்டத்தில் அந்தப் புதுக் கைதி எங்கு இருக்கிறான் என்று தேடினாள். ஆம், அவன்தான். சந்தேகம் இல்லை, ஜயராஜ்தான்! அவளுடைய இதழ்களில் புன்னகை பூத்தது. அதே சமயம் ஜயராஜின் பார்வையும் அவள்மீது விழுந்தது. முதலில் அவன் சற்றுத் திடுக்கிட்டுப் பின்னடைந்தான். பின்னர், அவளை அங்குப் பார்ப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை என்பது போல் புன்முறுவல் செய்துகொண்டு போய்விட்டான்.

அநேக வருஷங்களுக்கு அப்புறம், பால்ய சிநேகிதர்கள் இருவரும் அன்று மீண்டும் சந்தித்தார்கள். உஜ்வலினியின் கல்யாணத்திற்குச் சற்று முன்பே, ஜயராஜ் அவளை விட்டுப் பிரிய நேர்ந்தது. அவனுடைய தகப்பனார் தம் சொந்த ஜில்லாவாகிய திருச்சிராப்பள்ளிக்கே தமது உத்தியோகத்தை மாற்றிக்கொண்டு போய்விட்டார். உஜ்வலினிக்குக் கல்யாணம் ஆனது ஜயராஜுக்குத் தெரியும். ஆனால் அவள் விதவையான சமாசாரம் அவனுக்குத் தெரியாது. அவன் உஜ்வலினிக்கு ஒன்றிரண்டு கடிதங்கள் எழுதினான். ஆனால் அவள் அவைகளுக்குப் பதில் ஒன்றுமே எழுதவில்லை.

உஜ்வலினியும் ஜயராஜும் சிறையில் அநேக முறை சந்தித்தார்கள். ராஜீயக் கைதிகளிடையே கண்டிப்பான கட்டுப்பாடு இல்லாததால் அவர்கள் ஒருவரோடு ஒருவர் சம்பாஷணை செய்யவும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஜயராஜைக் காணும்போதெல்லாம், உஜ்வலினி சற்று நாணித் தலை குனிவாள். ஆனால் ஜயராஜ் பழைய சகஜ பாவத்துடனேயே அவளுடன் பேச ஆரம்பித்தான். அவள் வைதவ்யமடைந்த பரிதாப வரலாற்றைக் கேட்டுக் கண்ணீர் உகுத்தான்.

அவர்களுடைய நட்பு வளரலாயிற்று. சிற்சில சமயங்களில் அவளை அறியாமலே அவளுடைய கண்கள் ஜயராஜின் கண்களைச் சந்தித்தன. உஜ்வலினி வாசிப்பதற்காக ஜயராஜ் அநேக புத்தகங்கள் கொடுத்து உதவினன். அவை பெரும்பாலும் அரசியலைப்பற்றியே இருக்கும். மதத்தைப்பற்றி அவன் அதிகக் கவலை எடுத்துக்கொள்வதில்லை. அது சம்பந்தமான நூல்களையும் அவன் வாசிப்பதில்லை. என்ருலும் ஒரு நாள் அவன் உஜ்வலினிக்குக் கொடுத்த புத்தகங்களில் சுவாமி தயானந்தர் எழுதிய சத்தியார்த்தப் பிரகாசமும், ஈசுவர சந்திர வித்யாசாகரருடைய புத்தகம் ஒன்றும் இருந்தன. அப்புத்தகங்களில் ஜயராஜின் சொந்தக் கையெழுத்தில், "ஆழ்ந்த கருத்துக்கள் அடங்கியது; ஊன்றிப் படித்தல் அவசியம்" என்று எழுதப்பட்டிருந்தது. அதைக் கண்டதும் உஜ்வலினியின் செவ்விதழ்களில் லேசாக ஒரு புன்முறுவல் தோன்றி மறைந்தது.

ராஜீயக் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். தான் வெகு நாளாய்ப் பார்க்க முடியாத தன் தாய்தந்தையரைப் பார்க்கவேண்டுமென்று உஜ்வலினி விரும்பினள். ஆனல் அப்பொழுது வடநாட்டிலிருந்து ஒரு காங்கிரஸ் தலைவர் சென்னைக்கு வந்திருந்தார். அவரைத் தரிசித்துவிட்டு வரலாமென்று ஜயராஜ் சொன்னன். இருவரும் சென்னைக்குப் புறப்பட்டார்கள். அங்கு ஒரு ஹோட்டலில் இருவரும் ஒரே அறை எடுத்துக் கொண்டு தங்கலாமென்று ஜயராஜ் கூறினன். அதற்கு உஜ்வலினி ஆக்ஷேபம் சொல்லவில்லை.

காங்கிரஸ் தலைவர் சென்னையை விட்டுச் சென்று இரண்டு தினங்கள் ஆயின. ஆனல் உஜ்வலினியும் ஜயராஜும் இன்னும் சென்னையை விட்டுப் புறப்படவில்லை.

அதில் அசம்பாவிதம் ஏதும் இருப்பதாக உஜ்வலினிக்குத் தோன்றவில்லை.

அன்று போஜனம் முடிந்ததும், "உஜ்ஜீ! கடற்கரைக்குப் போகலாம், வருகிறாயா?" என்றான் ஜயராஜ்.

"நானும் அப்படித்தான் நினைத்தேன்" என்றாள் உஜ்வலினி.

பங்குனி மாத இரவு. பூமியில் கடல் ஒலித்துக் கொண்டிருந்தது. ஆகாயத்தில் மதி இளநங்கை மேகங்களிடையே ஒளிந்து விளையாடிக்கொண்டிருந்தாள். ஒரு மேகம் வெகு விரைவாக ஓடி அவளைப் பிடித்துத் தன்னுள் அடக்க முயற்சி செய்யும். அதற்குள் நிலாப்பெண், "என்னைப் பிடிக்க உன்னால் முடியுமோ?" என்று சொல்லி மேகத்திரையைக் கிழித்துக்கொண்டு வெளியேறுவாள். சிறிது தூரம் நிர்மலமான நீலவானில் செல்வாள். அச்சமயங்களில் கடல் 'தங்கத்தை உருக்கித் தழல் குறைத்து நீராக்கி எங்கும் சிந்தியதோர் இங்கிதமாய்'த் தோற்றியது.

"ஆஹா! கடல் நீர் எத்தகைய அழகாய்த் தோன்றுகிறது உஜ்ஜீ!" என்றான் ஜயராஜ்.

மீண்டும் ஒரு கரிய மேகம் பிறைப்பெணணைச் சிறை செய்தது. கொஞ்ச நேரத்தில், "நான்தான் இதோ தப்பித்துவிட்டேனே!" என்று கொண்டல் கதவை உடைத்துக்கொண்டு கிளம்பினாள் நிலாமங்கை. இந்தக் காட்சியைக் கண்டபோது ஜயராஜுக்கும் உஜ்வலினிக்கும் அவர்கள் சிறு வயசில் விளையாடிய விளையாட்டுக்கள் ஞாபகம் வந்தன. "உஜ்ஜீ! சந்திரன் செல்கிறதா, மேகம் செல்கிறதா?" என்றான் ஜயராஜ்.

"நான் செல்லுகிறேனே, நீ செல்கிறாயா, என்று கேட்பதுபோல் இருக்கிறது."

பிறகு வெகு நேரம்வரை இருவரும் மௌனமாய்ச் சென்றுகொண்டிருந்தார்கள். ஆகாயம் இருண்டது. பின்னால் வரப்போகும் இடியையோ மழையையோ எச்சரிப்பதுபோல, ஆகாயத்தில் மின்னற் கொடி துவண்டது.

"உஜ்ஜீ!" என்று உயிரை உருக்கும் குரல்.

"ஏன்?"

"நான் நாளை ஆரிய சமாஜத்தில் சேர்ந்து 'சுத்தி' செய்துகொள்ள நினைத்திருக்கிறேன்; உஜ்வீகாந்தன் என்று பெயர் வைத்துக்கொள்ள விரும்புகிறேன்." ஜயராஜின் குரல் தடுமாறிற்று.

உஜ்வலினி ஒன்றும் பதில் சொல்லவில்லை

"விதவா விவாகத்தைப்பற்றி உன் அபிப்பிராயம் என்ன?" என்றான் ஜயராஜ்.

"அது அவரவர் இஷ்டத்தைப் பொறுத்தது."

"சாஸ்திர விரோதம் என்று நீ நினைக்கிறாயா?"

"இப்பொழுது நான் அப்படி நினைக்கவில்லை."

"பின்?"

உஜ்வலினிக்கு இக்கேள்வியின் அர்த்தம் விளங்கவில்லையா? அவள் பேசாமல் இருந்தாள். ஜயராஜ் மீண்டும் கேட்டான்: "உன் இஷ்டம் என்ன?"

உஜ்வலினியின் கண்களில் கண்ணீர் ததும்பியது. மிகுந்த மனவேதனையுடன், "நான் விதவையாகவே இறப்பேன்" என்றாள்.

ஜயராஜின் உள்ளத்தில் இடி விழுந்தது போல் இருந்தது. ஆகாயத்தில் சந்திரனை ஒரு கார்மேகம் கவ்விக்

கொண்டது. எங்கும் இருள் சூழ்ந்தது. அகத்திலும் இருள்; புறத்திலும் இருள்.

மறுநாள் காலை உஜ்வலினி சென்னையை விட்டுப் புறப்பட்டாள். ராமேசுவரம் எக்ஸ்பிரஸ் இரவு 9-30 மணிக்கு மதுரை வந்து சேர்ந்தது. உஜ்வலினி வீட்டுக்குப் போனபொழுது மணி 10-30 ஆகிவிட்டது. வேங்கடேசரும் பங்கஜம்மாளும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"ஈசனின் திருவிளையாடல்கள் இருந்தவாறு என்னே! ஆங்கிலத் தாய்தந்தையருக்குப் பிறந்த உஜ்வலினி, நம் பாரத நாட்டிற்காக உழைக்கிறாள், சிறை செல்கிறாள்; மறுமணம் செய்துகொள்ள மறுக்கிறாள். ஆனால் நம் சொந்தப் பிள்ளை சங்கரனோ, கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து, கிறிஸ்தவப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டிருக்கிறான்" என்றார் வேங்கடேசர்.

"ராஜீயக் கைதிகளை எல்லாந்தான் விடுதலை செய்து விட்டார்களே. உஜ்ஜீ இன்னும் ஏன் வரவில்லை? அவள் முகத்தைக் கண்டாவது நான் ஆறுதல் அடைவேனே!" என்று ஏங்கினாள் பங்கஜம்மாள்.

உஜ்வலினி சித்தப்பிரமை கொண்டவள் போல் 'தட தட' வென்று கதவைத் தட்டினாள்.

"அப்பா! நீங்கள் என்ன சொன்னீர்கள்?" என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தாள்.

"நான் என்னம்மா சொன்னேன்? ஒன்றும் சொல்லவில்லையே!" என்று பேச்சை மறைக்க யத்தனித்தார் வேங்கடேசர்.

ஆனால் உஜ்வலினி பிடிவாதம் செய்தாள். தன் கதை முழுவதையும் அறிந்தவுடன், அவளால் ஒரு கணமும் அங்கு இருக்க முடியவில்லை. சென்னைக்குச் சென்று ஊர் முழுவதும் ஜயராஜைத் தேடிப் பார்த்தாள். எங்கும்

அகப்படவில்லை. கடைசியில் என்ன நினைத்தாளோ, அவனைப் பிரிந்த இடத்திற்குப் போய், "ஜயராஜ்! திரும்பி வரமாட்டாயா? ஜயராஜ்!" என்று கூ ஆரம்பித்தாள். அவன் சொல்லும் பதில் அவளுக் எங்ஙனம் கேட்கும்?

வானக் கடலில் மின்னும் விண்மீன்க உஜ்வலினியைக் கண் சிமிட்டிப் பரிகசிப்பதுபோல பிரகாசித்தன!

முற்றும்

